
உதயன்

29 °C
இடியுடன் கூடிய மழை பெய்யலாம்

சுடர் 30 கதிர் 320 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 25, திங்கட்கிழமை 12.10.2015

# ஜோசப் கொலை வழக்கில் சிக்கினார் பிள்ளையான்

## விசாரணைகளை அடுத்து நேற்று குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது



கொழும்பு, ஒக்.12
கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று ஞாயிறுக்கிழமை மாலை கைது செய்யப்பட்டார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பிலான விசாரணைகளுக்காகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது.
இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய மாகாண சபை உறுப் பக்.24

# போர்க்குற்றத்துக்கு கடும்போக்கற்ற நீதிப் பொறிமுறை

## இராணுவத்தைக் காப்பாற்ற நடவடிக்கை என்கிறார் அமைச்சர் மங்கள சமரவீர

கொழும்பு, ஒக்டோபர் 12
போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளில் அரசு கடும்போக்கற்ற நடைமுறையைப் பின்பற்றி இராணுவத்தினரைக் காப்பாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது.
அதன்படி போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியவர்கள் முதலில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முற்படுத்தப்பட்டு ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படும் என்றும் அவ்வாறு குற்றத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மதத் தலைவர்கள் கொண்ட கருணைச் சபை முன் முற்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களுக்கு கருணைச் சபையினரின் முடிவின்படி மன்னிப்பு வழங்கக்கூடியவாறான பொறிமுறையே செயற்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இந்த செயற்பாடுகளின் பின்பே போர்க் குற்றம்சாட்டப்பட்டவர்கள், நம்பகமான நீதிப் பொறிமுறை ஊடாக விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச் பக்.24

## போர்க் குற்றத்துக்கு மேல் நீதிமன்று

கொழும்பு, ஒக்.12
போர்க் குற்றங்களை விசாரணை செய்வதற்கு மேல் நீதிமன்றம் ஒன்றை உருவாக்க அரசு தீர்மானித்துள்ளது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அத்துடன் இந்த நீதிப் பொறிமுறையை வரும் ஜனவரி மாதத்திற்குள் உருவாக்குவதற்கு அரசு உயர்மட்டப் பேச்சு ஆரம்பித்துள்ளது என்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. பக்.24



## எதிர்க் கட்சித் தலைவரின் நோக்கம்தான் என்ன?

பக்.16

## புலிகளின் வரைபடங்களுடன் கொழும்பு வந்தார் கருணா!

கொழும்பு, ஒக்.12
கிழக்கில் இருந்து தப்பி வந்த போது, கருணா எனப்படும், விநாயகமூர்த்தி முரளிதரன், ஒரு பயணப்பெட்டி நிறைய விடுதலைப் புலிகளின் முகாம்கள் அமைந்துள்ள வரைபடங்களை எடுத்து வந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நடந்து 11 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் தற்போது அவற்றைப் பகிரங்கப்படுத்தியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா.
கருணாவின் செயற்பாடுகளில் மாற்றத்தை அவதானித்த போது, அதுபற்றித் தாம் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறினேன். அதற்கு அவர், கருணாவுக்காக கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். நாம் அதிகாரத்தில் இருக்கவில்லை. எனினும் நாட்டுக்காக நான் அந்த ஆபத்தான காரியத்தை மேற்கொண்டேன் என்றும் அவர் கூறியுள்ளார்.
விரிவு 2 ஆம் பக்கம்

## நிபந்தனை இன்றி கடனுதவி: சர்வதேச நாணய நிதியம் இணக்கம்

கொழும்பு, ஒக்.12
நிபந்தனைகளின்றி இலங்கைக்கு கடன் மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.
நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் ஆகியோரிடையே பெரு நாட்டின் தலைநகர் லீமாவில் இடம்பெற்ற பேச்சின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.
பெரு நாட்டின் தலைநகரான லீமாவில் ஆரம்பமான உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டின்போது அதன் பிரதானிகளுடன் நிதியமைச்சர் பேச்சு நடத்தியுள்ளார்.
இந்தத் தீர்மானம் நாட்டின் அபிவிருத்திக்குப் பெரியளவான பங்களிப்பை வழங்கும் என பெரு நாட் பக்.24

## அடுத்துவரும் பட்ஜெட்டில் பாதுகாப்புக்கே அதிக நிதி

கொழும்பு, ஒக்.12
அடுத்த ஆண்டுக்காக பாதுகாப்பு அமைச்சின் செலவுக்கான நிதி ஒதுக்கீட்டை 306 பில்லியன் ரூபாவாக அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.
இந்த மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2016ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் படி, அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், பாதுகாப்புச் செலவினமே அதிகளவு நிதியை விழுங்கவுள்ளது.
பாதுகாப்பு அமைச்சுக்கு 257.6 பில்லியன் ரூபா மீண்டெழும் செலவினமாகவும், 48.9 பில்லியன் ரூபா மூலதனச் செலவினமாகவும் தேவைப்படுகின்றது என்று இந்தச் சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்திருந்த பாதுகாப்பு அமைச்சுக்கு, 2015ஆம் ஆண்டு, 285 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.
ஆனால், அடுத்த ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு மாத்திரம் 306 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.
அதேவேளை, கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு இம்முறை நான்கு மடங்காக பக்.24

## விரைவில் கலைக்கப்படவுள்ளது காணாமற்போனோர் ஆணைக்குழு

### புதிய பொறிமுறை உருவாக்க அரசு திட்டம்

கொழும்பு, ஒக்.12
காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் மெக்ஸ்வல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு கலைக்கப்படவுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.
அத்துடன் குறித்த ஆணைக்குழுவுக்கு பதிலீடாக காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க ஆணைக்குழு பக்.24

## அமெரிக்கத் தீர்மானத்துக்கு நியூசிலாந்தும் அனுசரணை

ஜெனிவா, ஒக்.12
ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதாக நியூசிலாந்து அறிவித்துள்ளது.
இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்ற தலைப்பில், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால், ஐ.நா மனித உரிமைகள் சபையில் கடந்த முதலாம் திகதி தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்துக்கு இலங்கை பக்.24

## 4 ஆணைக்குழுக்களுக்கு ஜனாதிபதி நாளை அனுமதி

கொழும்பு, ஒக்.12
அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய நாடாளுமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ள 10 ஆணைக்குழுக்களுக்குள் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆகிய நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான பிரதிநிதிகளை நாளை செவ்வாக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால பெயரிடவுள்ளார்.
சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கடந்த 9ஆம் திகதி கூடிய அரசமைப்புப் பேரவையில் மேற்படி நான்கு சுயாதீன ஆணைக் பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புலிகளின் வரைபடங்களுடன் கொழும்பு வந்தார் கருணா

## பதினொரு ஆண்டுகளின் பின் போட்டுடைத்தார் மௌலானா

கொழும்பு, ஒக்.12
கிழக்கில் இருந்து தப்பி வந்த போது, கருணா எனப்படும், விநாயக மூர்த்தி முரளிதரன், ஒரு பயணப் பெட்டி நிறைய விடுதலைப் புலிகளின் முகாம்கள் அமைந்துள்ள வரைபடங்களை எடுத்து வந்தார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா தெரிவித்துள்ளார்

2004ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளிடம் இருந்து கருணாவை காப்பாற்றி, கொழும்புக்குப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றிருந்த அலிசாகிர் மௌலானா, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்ட தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கருணாவின் செயற்பாடுகளில் மாற்றத்தை அவதானித்த போது, அதுபற்றித் தாம் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறினேன். அதற்கு அவர், கருணாவுக்காக கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்று பதிலளித்தார்.

இந்த விவகாரம் குறித்து, அமைச்சர் கரு ஜெயசூரிய, திலக் மாரப்பன, பாதுகாப்பு செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ ஆகியோரிடம் கலந்துரையாடினேன். கவனமாக கையாளுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர்.


ஒஸ்லோவில் நடந்த பேச்சின் பின்னர் வன்னி திரும்பிய கருணா, அங்கிருந்து மட்டக்களப்புக்குத் திரும்ப உலங்குவானூர்தி ஒன்றை ஒழுங்கு செய்து தருமாறு பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோவிடம் தகவல் பரிமாறுமாறு கேட்டுக் கொண்டார்.

அத்துடன் பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோவுடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். அவர் மட்டக்களப்பு திரும்பியதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் தொடர்பு எதையும் வைத்துக் கொள்ளவில்லை.

பின்னர் வெருகலில் இருந்து வந்து கடற்புலிகள் தாக்குதல் தொடுத்துள்ளதாகவும், தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் கருணா கூறினார். நான் அதைப் புரிந்து கொண்டேன். போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்கு அதுபற்றி அறிவித்தேன்.

கருணாவை கொழும்புக்கு அழைத்துச் செல்ல ஒழுங்கு செய்தேன். அது ஆபத்தானது. அப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தது. நாம் அதிகாரத்தில் இருக்கவில்லை. எனினும் நாட்டுக்காக நான் அந்த ஆபத்தான காரியத்தை மேற்கொண்டேன்.

கருணாவையும் அவரது குழுவினரையும் எனது வாகனத்தில் ஏற்றினேன். எனது பாதுகாவலர்கள் அவரைச் சோதனையிட்டனர். அவர் ஆயுதம் தரித்திருக்கவில்லை. ஒரு பயணப் பெட்டியை மட்டும் வைத்திருந்தார். அதை திறந்து காட்டினார். அதில் முழுவதும், விடுதலைப் புலிகளின் முகாம்கள் பற்றிய வரைபடங்கள் தான் இருந்தன. கருணாவுடன் ஐந்து பேர் வந்தனர். தம்புள்ளவில் நாங்கள், இராப்போசனம் அருந்தினோம். நான் அவரை பாதுகாப்பாக ஜெய்க் ஹில்டன் வரை அழைத்துச் சென்று விட்டேன். - என்று நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா குறிப்பிட்டுள்ளார். (ற-வ-5)



## மதுபோதையில் வாகனம் செலுத்தியோருக்கு அபராதம்

சாவகச்சேரி,ஒக்.12
மதுபோதையில் ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கு 35 ஆயிரம் ரூபாவும், வீடுகளில் அனுமதிப்பத்திரமின்றி கள்ளு வைத்திருந்த ஆறு பேருக்கு 18 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது. மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 19 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகன வரி காப்புறுதி ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 16 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதே வேளை சாவகச்சேரி மதுவரி நிலையத்தால், வீடுகளில் அனுமதிப் பத்திரமின்றி கள்ளு வைத்திருந்ததாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. குற்றஞ் சாட்டப்பட்ட ஆறு பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தினவிழா நிகழ்வுகள்

சாவகச்சேரி,ஒக் .12
தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தினவிழா அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிமண்டபத்தில் நடைபெற்றன. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண நிதித்துறை பிரதிப் பிரதம செயலாளர் இ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள கல்வி அபிவிருத்தி மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி இரேனியஸ் செல்வினும், கௌரவ விருந்தினராக வேள்ட் விஷன் நிறுவன சாவகச்சேரி பிரதேச திட்ட முகாமையாளர் அ.கி.றொசைறோவும் கலந்து கொண்டனர். இதன் போது கடந்த ஒரு வருடத்தில் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற 16 ஆசிரியர்கள், 4 அதிபர்கள், கோட்டக் கல்வி அலுவலர், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வலய ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட கிரிக்கெற் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும், கட்டுரையாக்கல் போட்டியிலும் வெற்றியீட்டிய ஆசிரியர்களும் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். (ஐ-9)

# இன நல்லிணக்க முயற்சிக்கு புலனாய்வாளர்கள் குந்தகம்

### *அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பு குற்றச்சாட்டு*

யாழ்பாணம், ஒக். 12
இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்த எடுத்துள்ள முயற்சிகளுக்கு புலனாய்வாளர்கள் குந்தகம் விளைவிக்கின்றனர் என்று அப்ரில் என்று அழைக்கப்படும் அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

கிளிநொச்சியில் தமது அமைப்பால் நேற்று முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்க நடவடிக்கைகளை இராணுவப் புலனாய்வாளர்கள் ஒளிப்படம் எடுத்து குழப்ப முயன்றனர் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அப்ரில் அமைப்பால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வெவ்வேறுபட்ட இனக் குழுக்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய ரீதியில் வீதி நாடகம், கலந்துரையாடல் உள்ளடங்கிய பரப்புரையானது எமது அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நேற்று முதற்கட்டமாக சுதந்திர பயணம் என்ற தொனிப் பொருளில் வேலைத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த சுதந்திர பயண பரப்புரை கிளிநொச்சி ஸ்கந்தபுர கிராமப் பொதுச்சந்தை வளாகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மூவர் உள்நுழைந்து ஒளிப்படம் மற்றும் காணொளி எடுக்க முற்பட்டனர்.

இது தொடர்பாக எமது நிறுவனம் வன்மையாக கண்டனம் தெரிவிக்கின்றது. சிறப்பான முறையில் நல்லிணக்கத்ததை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்ற இவ்வாறான செயற்பாடுகளை தடைசெய்யும் முகமாகவும் மக்கள் சுதந்திரமாக ஒன்று கூடவும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் உரிமையை தடைசெய்யும் புலனாய்வாளர்களின் செயற்பாட்டை எதிர் கொள்ள நாம் தயாராக உள்ளோம்.

அந்த வகையில் இது தொடர்பில் உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்குமாறு அரசிடம் கேட்டுக் கொள்கிறோம் – என்றுள்ளது. (ற-5)

## யாழில் நடைபெற்ற வர்த்தக மாநாடு

யாழ்ப்பாணம்,ஒக்.12
யாழ். மாவட்டத்தில் இந்திய வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான விசேட மாநாடு ஒன்று கடந்த வாரம் நடைபெற்றது.

இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். ரில்கோ சிற்றி ஹோட்டலில் நடைபெற்ற இந்த மாநாட்டில், இந்தியாவைச் சேர்ந்த இளம் வர்த்தகர்கள் 44 பேர் பங்குபற்றியிருந்தனர். 'யாழில் வியாபாரத்தினை மேம்படுத்தல்' எனும் தொனிப்பொருளில், இந்த மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத் தின் தூதுவர் ஆ.நடராஜா மற்றும் பிரதித் தூதுவர் எம். தட்சணாமூர்த்தி மற்றும் யாழ். மாவட்ட வர்த்தக தொழில் துறை மன்ற தலைவர் என். விக்னேஸ் மற்றும் வர்த்தகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-106)

# ஆலயத்துக்குள் பொலிஸ் நுழைய வேண்டியிருப்பின் அவை தேவையற்றன

## உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.12
கோயில்கள் மனிதர்களை புனிதர்களாக்கப் பயன்பட வேண்டுமே தவிர வன்முறைகள் நடந்து அங்கு பொலிஸார் உள்நுழைய வேண்டியிருப்பின் அந்த கோயில் தேவையற்றது. - இவ்வாறு வடமராட்சி பிராந்தியத்துக்குப் பொறுப்பான காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

வடமராட்சி உடுப்பிட்டி அம்மன் கோயில் ஒன்றில் இருதரப்புகளுக்கு இடையில் நீண்டகாலமாக நிர்வாகத்தில் பிரச்சினை இருந்து வந்தது. இந்த நிலையில் இது தொடர்பான கூட்டம் ஒன்று குறித்த ஆலயத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்துக்கு கரவெட்டிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உதவிப் பிரதேச செயலர் உட்பட பல்வேறு அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.மீடின் உட்பட பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆலயங்கள் மனிதர்களை புனிதர்களாக்கப் பயன்பட வேண்டும். மனிதர்களை மிருகங்கள் ஆக்கப் பயன்படக் கூடாது.மதங்கள் அமைதியைத் தான் போதிக்கின்றன. அங்கு வன்முறைகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது. அத்தகைய வன்முறைகள் இடம்பெற்று பொலிஸார் உள்நுழைய வேண்டிய தேவையிருப்பின் அந்த ஆலயம் தேவையற்றது. இங்கு நீண்டகாலமாக நிர்வாகம் சம்பந்தமான பிரச்சினை இருந்து வருவதை நான் அறிவேன். எனக்கு இந்தப் பகுதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்ததன் அடிப்படையில் நான் வரவேண்டியேற்பட்டது.

பொலிஸார் ஆலயத்துக்கு வெளியே தான் நிற்க வேண்டும்.ஆலயங்கள் புனிதம்வாய்ந்தவை, வன்முறைகளை உருவாக்குபவை அல்ல. பிரச்சினைகளைப் பேசித் தீர்த்து சட்டரீதியான இணக்கத்துக்கு வர வேண்டும். இவ்வாலயத்துக்கு ஒரு யாப்பு இல்லை என்பதும் எனக்கு அறியத்தரப்பட்டது. எனவே முதலில் ஒரு யாப்பை உருவாக்குங்கள். சட்டரீதியாக அமைதியான முறையில் பிரச்சினைகளை அணுகுங்கள். தமிழர்களின் கலாசாரம் என்பது மிக உயர்வானது. அது பற்றி நான் நிறைய அறிந்திருக்கிறேன். ஆகவே, உங்கள் செயற்பாடுகள் உங்கள் கலாசாரத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும். ஒவ்வொரு மதமும் ஒவ் வொரு மார்க்கங்கள். அது மனிதர்களை உருவாக்கவேண்டுமே ஒழிய மிருகங்களை உருவாக்கக் கூடாது -என்றார். (ற-109)

## உற்பத்தி நிறுவனத்துக்கு அபராதம்

சாவகச்சேரி,ஒக்.12
உற்பத்தியின் போதிய விபரங்கள் குறிப்பிடாமல் விற்பனைக்கு வழங்கிய உற்பத்தி நிறுவனத்துக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஜீவா காரம் போசாக்கு மா பொதியில், நாளாந்த பாவனை அளவு குறிப்பிடாமலும், பொருள்களின் சேர்மானப் பட்டியல் விபரம் முழுமையாகக் குறிப்பிடாமலும், தொகுதி இலக்கம் அச்சிடப்படாமலும் இருந்தமை தொடர்பாக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த உற்பத்தி நிறுவனத்துக்கு மூன்று குற்றங்களுக்குமாக தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீடமைப்புக்கு பாலியல் இலஞ்சம்: இந்திய தூதரகமும் விசாரணை

கொழும்பு, ஒக்.12
கிளிநொச்சிப் பகுதியில் இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளிடம் பாலியல் இலஞ்சம் கோரப்பட்டது என்று எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக இந்தியத் தூதரகமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

இவ்வாறு இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர், கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில், இந்திய வீட்டுத் திட்டத்தை நடைமுறைப் படுத்தும்,இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள், வீடமைப்புத் திட்ட உதவியை வழங்குவதற்கு பாதிக்கப்பட்ட பெண்களிடம், பாலியல் இலஞ்சம் கோரப்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இது தொடர்பாக கிளிநொச்சியில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் பெண் ஒருவர் எழுத்து மூலம் முறையிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. எனினும், இத்தகைய 30 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த முறைப்பாடுகளை அடுத்து, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து இந்தியத் தூதரகம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பங்காளிகளின் இத்தகைய செயற்பாடுகள் எதையும் இந்தியா பொறுத்துக் கொள்ளாது என்றும் இந்தியத் தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த விசாரணையில் தமது அதிகாரிகள் தவறு செய்திருப்பது கண்டறியப்பட்டால், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் கையளிக்கப்படுவார்கள் என்று இலங்கை செஞ் சிலுவைச் சங்கத்தின் தொடர் பாடல் மற்றும் மனிதாபிமான இரா ஜதந்திர மூத்த முகாமையாளர் மகேஸ் ஜோன்னி தெரிவித்துள் ளார்.

முழங்காவில் பகுதியில் இந்திய வீடமைப்புத் திட்ட உதவிக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள், பாலியல் இலஞ்சம் கேட்டனர் என்று கணவனை இழந்த பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டை அடுத்தே இந்த விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

முழங்காவில் பகுதியில் ஆயிரத்து 800 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் அவற்றுக்குப் பொறுப்பாக, 16 திட்ட அதிகாரிகள் செஞ்சிலுவைச் சங்கத்தினால் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே இந்திய வீடமைப்புத் திட்டத்துக்கு செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பாலியல் இலஞ்சம் கேட்பதாக தமக்கு வாய்மொழியாகவும், எழுத்து மூலமாகவும். 30 க்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் இவற்றில், 15 முறைப்பாடுகளை தாம் கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு அனுப்பியுள்ளளோம் என்றும் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க கிளைச் செயலர் தம்பு சேதுபதி தெரிவித்துள்ளார்.

இந்தமுறைப்பாடுகள்கடந்தஇரண்டு மாதங்களாக கிடைத்து வரு கின்றன என்றும் குறிப்பாக பெண்களிடம்இருந்தேகிடைக்கின்றனஎன்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ற-வ-5)

## எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பிறப்பு, இறப்பு சான்றிதழ் பெறலாம்

யாழ்ப்பாணம், ஒக்.12
வடமாகாணத்திலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பிறப்பு,இறப்பு மற்றும் விவாக சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்துள் ளார்.

கணினி மயப்படுத்தப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய அனைத்து மாவட்டங்களுக்கும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களின் பிரதிகள் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களின் மூலமும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க வடமாகாணத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ளவர்களும் பிறப்பு,இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களின் பிரதிநிதிகளை யாழ். மாவட்டத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ள முடியும் எனத்தெரிவித்தார். (ற-ரி6)

# யாழில் 'பியர்' நுகர்வு வெகுவாக அதிகரிப்பு

## கடந்த 7 ஆண்டுகளில் 20 மடங்கால்

யாழ்பாணம், ஒக். 12
யாழ்.மாவட்டத்தில் கடந்த 7 ஆண்டுகளில் கள்ளுத் தவறணைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. ஆயினும் மதுபான சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதே போன்று, பியர் - வெளிநாட்டு மதுபானம் என்பவற்றின் நுகர்வும் கடந்த 7 ஆண்டு களில் 20 மடங்காக அதிகரித்துள் ளது.

யாழ்.மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டு 52 மதுபான சாலைகள் இயங்கியதுடன், 2012 ஆம் ஆண்டு 77 மதுபானசாலைகளாக அது அதிகரித்துள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் அது 75 ஆகக் குறைவடைந்துள்ளது. கள்ளுத் தவறணைகளின் எண்ணிக்கை 2008 ஆம் ஆண்டு 153 ஆக காணப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டு 149 ஆகக் குறைவடைந்துள்ளது.

மதுபான நுகர்வுகளும், கடந்த 7 ஆண்டுகளில் பல மடங்காக அதிகரித்துள்ளது. 2008 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 25 லீற்றர் பியர் நுகரப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு 48 லட்சத்து 45 ஆயிரத்து 588 லீற்றராக பியர் நுகர்வு அதிகரித்து, 2014 ஆம் ஆண்டு 20 லட்சத்து 60 ஆயிரத்து 714 ஆகக் குறைவடைந்துள்ளது. 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 மடங்கு நுகர்வு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு மதுபானங்கள் 2008 ஆம் ஆண்டு ஆயிரத்து 60 லீற்றரும், 2011 ஆம் ஆண்டு 73 ஆயிரத்து 702 லீற்றரும் நுகரப்பட்டுள்ளது. இது 2014 ஆம் ஆண்டு 28 ஆயிரத்து 285 ஆகக் குறைவடைந்துள்ளது. இருப்பினும் 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26 மடங்கினால் நுகர்வு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

சாரயம் 2008 ஆம் ஆண்டு 2 லட்சத்து 61 ஆயிரத்து 457 லீற்றர் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது 2012 ஆம் ஆண்டு 21 லட்சத்து 26 ஆயிரத்து 306 லீற்றராக அதிகரித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு 10 லட்சத்து 77 ஆயிரத்து 458 லீற்ற ராக சாராய விற்பனை குறைவடைந்துள்ளது. 2008 ஆம் ஆண்டு விற்பனையுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டு 4 மடங்கு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கள்ளு விற்பனை 2008 ஆம் ஆண்டு 14 லட்சத்து 39 ஆயிரத்து 981லீற்றராகக் காணப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு 64 லட்சத்து 14 ஆயிரத்து 48 லீற்றராக உச்ச அளவில் அதிகரித்தது. 2014 ஆம் ஆண்டு 46 லட்சத்து 41 ஆயிரத்து 362 லீற்றராக குறைவடைந்துள்ளது. 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பி டுகையில் 2014 ஆம் ஆண்டு 3 மடங்கு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்தி மதுபானம், 2008 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 134 லீற்றராக இருந்ததுடன், 2014 ஆம் ஆண்டு 53 ஆயிரத்து 590 லீற்றராக குறைவடைந்துள்ளது. (ற-5)

## ஒழுக்காற்று நடவடிக்கை கோரி போராட்டம்

யாழ்ப்பாணம் , ஒக் .12
இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாண முகாமையாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கோரி நாளை மறுதினம் புதன்கிழமை வன்முறையற்ற ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது என்று யாழ்ப்பாண- இலங்கை போக்குவரத்து சபையின், ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை போக்குவரத்து சபையின் தலைமையகத்தால் ,இடம் பெற்ற அதிருப்தியான செயற்பாடுகள் தொடர்பில் , மூன்று கட்டமாக விசாரணைகள் நடைபெற்ற போதிலும் , எந்த விதத்திலும் ஒழுக் காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை. நிர்வாக குழுவின் அனுமதியை பெறாமல், சுயமான முடிவுகள் எடுத்தல், ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் ஒழுங் கீனம். மதுப் பாவனையுடன் வேலைக்கு ஊழியர்களை அனுமதித்தமை. ஊழியர்களின் அனுமதியின்றி ஊதியங்கள் கழிக்கப்படுதல் போன்ற பல அதிருப்தியான பணிகளைக் கண்டித்து இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று இலங்கை போக்குவரத்து சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. (ற-ரி4)

## மின் ஒழுக்கு ஏற்பட்டதால் அரைக்கும் ஆலை சேதம்

வவுனியா,ஒக்.12
வவுனியா கந்தசாமி கோவில் வீதியில் கடைத் தொகுதியில் உள்ள அரைக்கும் ஆலை நிலையத்தில் கடந்த 7 ஆம் திகதி இரவு மின் ஒழுக்கு ஏற்பட்டதால் அரைக்கும் ஆலை சேதமடைந்துள்ளது.

ஆலையின் உரிமையாளர் வழமை போன்று ஆலையை மூடி விட்டுச் சென்றுள்ளார். எனினும் அங்கு திடீரென இரவு மின் ஒழுக்கு ஏற்பட்டுள்ளது. அயலவரால் உரிமையாளருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து ,உரிமையாளர் உடனடியாக பொலிஸாரின் உதவியுடன் மின்சார ஊழியர்களை வரவழைத்ததால் மின் ஒழுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் ஆலையில் சிறிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது. (ஐ)

# உடுப்பிட்டி மணப் பெண் கடத்தல் விவகாரம்: இரு மோ.சைக்கிள்கள் பொலிஸாரின் வசம்

யாழ்பாணம், ஒக். 12
வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் பெண்ணொருவர் கடத்தப்பட்ட சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டு மோட்டார்சைக்கிள்களை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் 8 சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலும், ஏனைய தரவுகளின் அடிப்படையிலுமே குறித்த மோட்டார்சைக்கிள்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் திருமணம் நடக்க இருந்த நிலையில் மணப்பெண் வீட்டில் தனியாக இருந்த நிலையில் ஆயுதங்களுடன் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த மர்மக்கும்பல் குறித்த பெண்ணைக் கடத்திச் சென்றனர் என்றுவல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் மீடின் தலைமையிலான பொலிஸ் குழு தீவிர விசாரணை நடத்தி வந்தது.

இந்த நிலையில் குறித்த பெண் கடத்தல்காரர்களிடம் இருந்து சில நாள்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், 8 சந்தேகநபர்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். [illegible] விசாரணையின் பின்னர் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் 8 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பின் பின்னர் 3 சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்த நிலையில் தடுப்புக்காவலில் இருக்கும் ஏனைய சந்தேகநபர்களிடம் தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டு வந்தது.

அவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கடத்தலுக்குப் பயன்பட்டது என்று சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் இரண்டையும் வரணிப் பகுதியில் வைத்து கைப்பற்றியதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

[illegible]
[illegible]
கொண்டு வருகின்றனர். (ற-109)

# ஓமந்தை- பெரியவிளாத்திக்குளம் ரயில் கடவையை திறக்க கோரிக்கை

வவுனியா,ஒக்.12
வவுனியா ஓமந்தையிலிருந்து பெரியவிளாத்திக்குளம் செல்வதற்கான ரயில் கடவையை மீண்டும் மக்கள் பாவனைக்கு திறந்து விடுமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தால் மத்திய போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வாவுக்கு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா-யாழ்ப்பாணம் ரயில் சேவை விஸ்தரிப்பின் போது ஓமந்தை புகையிரத நிலையம் மீளமைக்கப்பட்டது. இதன்போது ஓமந்தை நகரத்தையும் பெரிய விளாத்திகுளத்தையும் இணைக்கும் பிரதான வீதி ரயில் மேடை அமைப்பதற்காக மூடப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக ஓமந்தை கூட்டுறவுச்சங்கத்துக்கு அருகாக புதிய பாதை அமைக்கப்பட் டுள்ளது. ஓமந்தை நகரத்திலிருந்து 50 மீற்றர் தூரம் பயணிக்க வேண் டிய பொதுமக்கள் தற்போது புதி தாக அமைக்கப்பட்ட பாதையூடாக 2 கி.மீ வரை பயணிக்க வேண்டி யுள்ளது. இதனால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களும் பாடசாலை செல்லும் மாணவர் களும் பெரிதும் சிரமப்படுவதாக மாகாண அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மத்திய போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவை அண்மையில் சந்தித்த சுகாதார அமைச்சர் மேற்படி கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் இது தொடர்பில் சாதகமான முடிவை எடுப்பதற்கு அதிகாரிகளை பணித்துள்ளார் என்றும் விரைவில் களநிலவரத்தை ஆராய்வதற்கு குழுவொன்றை அனுப்பி பழைய பாதையை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.சபையின் நிர்வாகம் மறியல் செல்லும் நிலையில்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.12

ஊழியர்களின் சார்பில் செலுத்த வேண்டிய 10 பில்லியன் ரூபா ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பன செலுத்தப்படாதமையால் இலங்கைப் போக்குவரத்துச் சபை நிர்வாகம் மறியலுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

– இவ்வாறு போக்கு வரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச்சாலைகளின் நிலைமைகளை நேரில் அறிந்து கொள்வதற்காக பயணம் மேற்கொண்டிருந்தார். அங்கு ஏறாவூர் சாலைக்குச் சென்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உண்மை நிலையை நான் உங்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும். ஆனால், சிலருக்கு உண்மையைச் சொன்னால் பிடிக்காது. உண்மையான நிலையை அறிந்து கொண்டால்தானே தவறுகளை நாங்கள் சீர் செய்து கொள்ள முடியும். அதனால் உண்மையை சொல்லித்தானாக வேண்டும்.

மேற்சொன்ன இந்த 10 பில்லியன் தொகைக்கு மேலதிகமாக இலங்கைப் போக்கு வரத்துச் சாலை செலுத்த வேண்டிய கடன் தொகை 3 பில்லியன் உள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றைச் செலுத்தவில்லை என்ற காரணத்துக்காக நான் மறியலுக்குச் செல்வதைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

இந்தத் தொகையைப் பெற்று அதனைச் செலுத்தி முடிப்பதற்கு நாம் இப்போது பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளோம்.

இந்தத் தொகைகளை மீளப் பெற்றுக் கொள்வதாயின் இலங்கையிலுள்ள அனைத்துச் சாலைகளும் இலாபகரமான முறையில் இயங்க வேண்டும். அதற்கான முயற்சிகளிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம். – என்றார்.

இந்தப் பயணத்தின்போது அமைச்சின் செயலாளர் நிஹால் சோமவீர, உட்பட அமைச்சின் மற்றுமுள்ள அதிகாரிகளும் கிழக்கு மாகாண போக்குவரத்துச் சாலை பிரதம பிராந்திய முகாமையாளர் ஏ.எல். சித்தீக் உட்பட இன்னும் பல சாலை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ற)

# சம்பூரில் மீள்குடியேறிய குடும்பங்களில் அனைவருக்கும் வீட்டுத் திட்டம் இல்லை

## 59 வீதமானவர்களின் விண்ணப்பம் நிராகரிப்பு

லண்டன், ஒக்.12

திருகோணமலை, சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் இந்திய வீட்டுத்திட்டத்தினை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் 59 வீதமான குடும்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பி.பி.சி வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:–

வீட்டுத் திட்டத்தினைப் பெற்றுக் கொள்ள விதிக்கப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் புள்ளிகளின் அடிப்படையில், விண்ணப்பித்த 59 வீதமான குடும்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பூர் பிரதேசத்தில் 344 குடும்பங்கள் 9 ஆண்டுகளின் பின்னர் தற்காலிக குடியிருப்புகளை அமைத்து மீளக்குடியேறியுள்ளன. அப்பகுதியில் அரச முதலீட்டு வலயத்திற்கு என சுவீகரிக்கப்பட்டு பின்னர், முதல் தொகுதியாக விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் மட்டும் 204 குடும்பங்கள் மீளக்குடியேறியுள் ளன.

இந்த குடும்பங்களே முன்னுரிமை அடிப்படையில் இந்திய வீட்டுத்திட்டத்தில் வீடுகளுக்கு பிரதேச செயலக அதிகாரிகளினால் தெரிவாகியிருந்தன.

இந்திய உதவி வீடமைப்பு திட்டத்தை செயல்படுத்தும் யு.என். ஹபிட்டாஸ் வெளியிட்டுள்ள பட்டியலில் 84 குடும்பங்கள் மட்டுமே அந்த வீடுகளைப் பெற தகுதி பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

இது பற்றிய கூட்டமொன்றில் யு.என் ஹபிட்டாஸ் உட்பட அதிகாரிகளினால் மக்களுக்கு அறிவிக்கப்பட்ட போது அனைத்து குடும்பங்களும் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து, நிபந்தனைகள் அல்லது புள்ளிகள் தொடர்பில் தங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள் ளனர்.

2008, 2009ஆம் ஆண்டுகளின் மதிப்பீடுகளின் அடிப்படையில் தற்போது வழங்கப்படுகின்ற 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தொகை போதுமானதாக இல்லை என்பதால் அதனை குறைந்தபட்சம் 7 இலட்சம் ரூபாவாக அதிகரிப்பதில் இந்திய அரசு கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் மக்கள், அதிகாரிகளிடம் முன் வைத்துள்ளனர்.–என்றுள்ளது. (வ)

# பட்டினிச் சாவிலிருந்து தமிழ் மக்களை காப்பாற்றியது இரணைமடு குளமே

## வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12

இலங்கை அரசு தமிழ் இன அழிப்பை மேற்கொண்ட குற்றச்சாட்டுக்கும், மனித உரிமை மீறல்களை நிகழ்த்திய குற்றச்சாட்டுக்கும் ஆளாகிச் சர்வதேசத்தின் முன்னால் இன்று தலை குனிந்து நிற்கிறது. இந்தக் குற்றச்சாட்டுகளோடு, இலங்கை அரசு தமிழ் மக்களைப் பட்டினியால் கொலை செய்த பட்டினிச்சாவுக் குற்றச்சாட்டுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்திருக்கும். அவ்வாறு ஆளாகாமல் இலங்கை அரசை இரணைமடுக்குளமே காப்பாற்றியது– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில், வன்னியில் 75 ஆயிரம் பேர் வரையிலேதான் உள்ளார்கள் என்று அறிவித்த இலங்கை அரசு அவர்களுக்குத் தேவையான அளவு உணவுப் பொருள்களை மாத்திரமே வன்னிக்குள் எடுத்துச் செல்ல அனுமதித்தது. ஆனால் போர் முடிந்தபோது வன்னி முற்றுகைக்குள் இருந்து 3 இலட்சம் பேர் வரையில் வெளியேறினார்கள். அரசால் அனுப்பி வைத்த உணவை மாத்திரமே நம்பியிருந்தால், இவர்கள் எல்லோரும் பட்டினிச்சாவால் இறந்திருப்பார்கள்.

போர்க் காலத்தில் கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவுக்கு மக்கசேமித்து வைத்திருந்த நெல்லையும் அரிசியையும் எடுத்துச் சென்றார்கள். இந்த நெல்லும் அரிசியும்தான் பட்டினிச்சாவில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றியது.

இங்கு 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெற்செய்கையும் 15 ஆயிரம் ஏக்கரளவில் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப் படுகிறது. இதில் இரணைமடுக்குளத்தின் பங்களிப்பு மிகப் பெரியது.

அந்த வகையில், பட்டினிச்சாவுக் குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல் இலங்கை அரசை இரணைமடுக்குளமே காப்பாற்றியுள்ளது. அண்மையில், இரணை மடுக்குளத்துக்கு அருகாமையில் இலங்கை ஜனாதிபதி தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அப்போது, எமது விவசாயிகளைக் கௌரவிக்கும் முகமாகவே தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தை கிளிநொச்சியில் ஆரம்பித்ததாகக் குறிப்பிட்டிருந்தார். என்றுள்ளது. (ற–21)

# இந்திய மீனவர்களை விடுவிக்க வேண்டும்

## ஜி.கே.வாசன் கோரிக்கை

இலங்கைகடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழகமாநில காங்கிரஸ் தலைவர் ஜீ.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

நாகபட்டினத்தைச் சேர்ந்த 19 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மீனவர் பிரச்சினைக்கு இரு நாடுகளும் தீர்வு காணப்படும் வரையில் மத்திய அரசே இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். தமிழக மீனவர்களை பாதுகாக்க மாநில மத்திய அரசுகள் கூடுதல் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். –என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# பண்பாட்டிலிருந்து விலகும் விடயங்கள் எமது இருப்பை தொலைத்து விடுகின்றன

## பண்பாட்டுப் பெருவிழாவில் முதலமைச்சர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 12

நாம் எமது பண்பாட்டிலிருந்து விட்டுக்கொடுக்கின்ற விடயங்கள் ஒவ்வொன்றும் எமது இனத்தின் இருப்பை விட்டுக் கொடுக்கின்ற விடயங்களாகவே அமைந்துவிடுகின்றன. அதன் சாராம்சம் அழியாது, அடிப்படை தவறாது அவற்றை முன்னேற்ற நாம் ஒவ்வொருவரும் பழகிக் கொள்ள வேண்டும். – இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாணப் பண்பாட்டுத் திணைக்களம், யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவை, யாழ்.மாவட்டச் செயலகம் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்று தொல்காப்பியர் கூறுவதுபோல காலத்திற்கேற்ப பண்பாடு மாற்றமடைவது தவறல்ல. ஆனால் அவ்வாறு மாற்றமடைகின்ற போதும் அந்த மாற்றம் ஆரோக்கியமானதாக அடிப்படைத்தன்மை மாறாததாக இருத்தல் வேண்டும். எமது பண்பாட்டுக் கோலங்களை அறவே அழிக்கின்ற வாழ்வியல் கோலங்கள் எம் இனத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும்.

எமது நுண்கலைகளுடன் வேறு பல தொழிற்கலைகளுக்கும் நாம் இனி புனர்வாழ்வு கொடுக்க வேண்டும். உதாரணத்துக்குச் சில வைத்தியர்கள் தமது பாரம்பரிய வைத்தியம் சார் ஏட்டுச் சுவடிகளை எம்முடன் பகிர்ந்துகொள்ள முன்வருவதில்லை. இந்த நிலை மாறவேண்டும். அவர்களது குடும்பத்தில் அந்த வைத்தியத் தொழிலைக் கொண்டு நடத்த எவரும் இல்லை என்று கண்டால் அந்த அறிவு அவர்களுடன் மடிந்து போக வேண்டும் என்று எண்ணுவது மடமை. நாம் அப்பேர்ப்பட்டவர்களிடம் இருந்து அந்தச் சுவடிகளைப் பெற்று நுண்படமெடுத்து ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். மார்க் ஸிய தத்துவ ஞானத்தில் சில விட யங்கள் கூறப்பட்டுள்ளன. யதார்த்த நிலை அதன் பின்னர் அதற்கு எதிர்ப்படையான ஒரு நிலை உருவாகுதல் பின்னர் அவை சேர்ந்து மூன்றாம் நிலையை உருவாக்குதல். அவ்வாறே எமது பாரம்பரிய நிலை அதற்கு எதிராக உருவாகும் பிற நாட்டுத் தாக்கங்களின் நிலை, அதன் பின்னர் எமது பாரம்பரியமும் நவீனமும் கலந்து ஒரு மூன்றாம் நிலையை உருவாக்குதலை நாம் எதிர்பார்க்கலாம். அந்த நிலையை எதிர்நோக்கியே நாம் உலகெங்கும் அதற்கு முகம் கொடுத்துவருகிறோம்.

கடந்த 15 வருடங்களில் உலக அளவில் ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளில், ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள் தீவிரமானவை. தமிழர் வாழ்விலும் பண்பாட்டுக் கூறுகளிலும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் இந்தப் போக்கின் ஒரு அம்சமே.

ஒரு இனம் இருந்தமைக்கான அவ்வினம் தனியான அடையாளங்களோடு வாழ்ந்தமைக்கான உயரிய சான்றாக அமைவது அவ்வினம் வழிவழியாகப் பின்பற்றிவரும் பண்பாட்டுக் கோலங்களாகும். ஒவ்வொரு மனிதனும் தனது இனத்துக்குரிய அடையாளமாக இருக்கும் பண்பாட்டு மரபுகளைப் பேணிக் கொள்வதும் எதிர்கால சமூகத்துக்கு அவை கிடைக்கக்கூடிய வகையில் கையளிப்பதும் எம் ஒவ்வொருவருக்கும் உரிய கடமையும் பொறுப்புமாகும். எமது உள்ளத்தை வழிப்படுத்தும் கலைகள் சதா வளர வேண்டும்.

யாழ்பாடிகள் வாழ்ந்து யாழ்ப்பாணம் எனப் பெயர் பெறும் அளவுக்குக் கலைகளின் கூடாக விளங்கியது. ஆனால் இன்று யாழ்.வாசிக்கத்தக்க கலைஞர்கள் இல்லை. வீணைகள், சிதார்கள் வாசிப்போர் யாழ்வாசித்துப் பார்க்கலாமே என்றும் முதலமைச்சர் கோரிக்கையாகக் கேள்வியெழுப்பியுள்ளார்.

எமது பாரம்பரிய கலைகளான காவடி, கரகம், கூத்து, நாடகம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் ஆட்டம், வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், சிலம்பாட்டம், இசை, பரதம், இசைக்கருவிகள், கிராமியப் பாடல்கள், கிராமிய நடனம், கும்மி எனப் பல்வேறு கலை மரபுகளோடு அடியொற்றிய பண்பாட்டைக் கொண்டது யாழ்ப்பாணம், அவற்றைச் சிதைவடையாது பாதுகாத்து எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. தவிர பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையும் இணைந்து சிறந்த முறையில் நெறிப்படுத்தப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு உண்டு.

சேதன உரத்தைவிட்டு அசேதன உரத்துக்குப் போன மேலைத்தேயத்தவர்கள், இன்று அசேதன செயற்கை உரத்தைப் புறக்கணித்து மீண்டும் இயற்கை உரத்துக்கு எப்படி நாடிவருகிறார்களோ அவ்வாறு அதேபோல உல்லாசப் பயணிகளாக இங்கு வருவோர் தம்மிடையே கிடைக்கும் பொருள்களுக்காக இங்கு வரமாட்டார்கள். தங்களிடம் இல்லாததை அறிய, பார்க்க, வாங்க, சுவைக்க வருகிறார்கள். அதற்கேற்றதாக நாம் எமது பாரம்பரிய தொழிற்கலைகளுக்கும் புத்துயிர் கொடுத்து வளப்படுத்த வேண்டும். – என்றார். (ற–4,422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகப் போராட்டம் மூலம் விடுதலையைப் பெற வேண்டும்

## ரில்வின் சில்வா எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.12

விடுதலையை நோக்கி பயணிப்பதற்கு பௌதிக வளங்களை இலட்சியமாகக் கொண்டு இருக்காது. ஜனநாயக போராட்டங்களின் மூலம் விடுதலையை நோக்கிப் பயணிக்க வேண்டும் – இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

சேகுவேராவின் நினைவு தின நிகழ்வு யாழ். ரிம்பர் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடமாகாணம் போராலும், முதலாளித்துவ மற்றும் இனவாதத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகம் முழுமையாக கிடைக்கவில்லை. சேகுவேரா இன ஒடுக்கு முறைக்காகப் போராடியவர்.

சிங்கள – தமிழ் முஸ்லிம் என்ற பிரிவினையைத் தவிர்த்து, எதிரிகளை அடையாளம் கண்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அடிப்படை உரிமைகளின்றி வாழ்கின்றார்கள். மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்குவதில் சேகுவேராவின் போராட்டம்எடுத்துக் காட்டாக இருக்கின்றது.

முதலாளித்துவத்தைத் தோற்கடிப்பதற்கு போராட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென்பது சேகுவேராவின் கருத்தாக இருக்கின்றது. பௌதிக வளங்களை இலட்சியமாகக் கொண்டுஇருக்கவில்லை.மாற்றங்கள் எமக்கு கட்டாயம் தேவை. அந்த மாற்றங்களுக்கு வழிகாட்டக் கூடியவராக சே இருக்கின்றார்.

எமது நாட்டில் உள்ள மக்கள் குடும்ப ஆட்சியை தோற்கடிக்க போராடினார்கள். அதில் வெற்றி பெற்றார்கள். ஆனால், எந்தவொரு மாற்றமும் ஏற்படாத நிலை தற்போது இருக்கின்றது. விவசாயம் பொருளாதார ரீதியில் நெருக்கடியாக இருக்கின்றது. எனவே, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக விவசாயிகளின் பிரச்சினைக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். சிறுவர்கள் மற்றும் பெண்கள் வன்முறைகளினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். வன்முறைகளை ஒழிப்பதற்கு சமூகத்தில் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அத்துடன், தேசிய நல்லிணக்கம் அவசியமாக இருக்கின்றது.

அத்துடன், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். ஆனால், அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. வல்லரசு நாடுகளால் எமது நாட்டில் உள்ள பிரச்சினைகளை தீர்க்க முடியாது. எமது நாட்டு ஆட்சியாளர்களினால் அந்த பிரச்சினைகளைதீர்ப்பதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். போராட்டங்களின் மூலம் வடக்கையும், கிழக்கையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.சேயின்வழியில்செல்லவேண்டும். எமது இளைஞர்கள் ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அவற்றால் விடுதலையை நோக்கிப் பயணிக்க முடியும். நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும்– என்றார். (ந–106)

# தற்போதைய கலப்பு அரசு திருடர்களை பாதுகாக்கின்றது

## கே.டி.லால்காந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 12

புதிய கலப்பு அரசு திருடர்களை பாதுகாத்து வருகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டிலால் காந்த குற்றஞ்சாட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் தலைமையிலான கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவே தேசிய அரசைக் கட்டுப்படுத்தி வருகின்றார் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிகாரங்கள் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த கலப்பு அரசு நீதியை நிலைநாட்டும் என எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர், நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் உரிய முறையில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

எனினும், பொலிஸ் மா அதிபரோ அல்லது சட்டமா அதிபரோ உரிய முறையில் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். அரசு வரியின் ஊடாக மட்டுமே வருமானம் ஈட்டி வருகின்றது என்றும் அவர் மேலும் தெரி வித்தார். (ந)

# காட்டிக் கொடுத்தோரை நான் ஆசீர்வதிக்கின்றேன்

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.12

தம்மைக் காட்டிக்கொடுத்து – தமக்கெதிராக சாட்சி சொல்ல தயாராக இருப்பவர்களைத் தாம் ஆசீர்வதிக்கின்றேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அண்மையில் மிரிஹானவிலுள்ள தமது இல்லத்தில் சில முக்கிய தலைவர்களைச் சந்தித்தபோதே மகிந்த தமது ஆதங்கத்தை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

தங்களது இருப்புகளை தக்க வைத்துக் கொள்வதற்காகவே இவ்வாறான காட்டிக்கொடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ள அவர் –தற்போதைய அரசியல் சூழலில் இவ்வாறான விடயங்கள் நடைபெறுவது சாதாரணம் என்றும் இதனை பெரிதுபடுத்த வேண்டிய அவசியமில்லையென்றும் கூறியுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டில் கைதாகி அண்மையில் பிணையில் வெளிவந்த சஜின் டி வாஸ் குணவர்த்தன, துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் முன்னாள் தலைவர் பிரியந்த பந்து விக்ரமமுனி மற்றும் ராஜபக்ச குடும்பத்தாருக்கு சொந்தமான அமைப்பின் தலைவர் விலி கமகே ஆகியோர் மகிந்தவுக்கு எதிராக சாட்சி கூற தயாராகியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவர்கள் அனைவரும் கடந்த ஆட்சிக்காலத்தில் மகிந்தவுக்கு மிகவும் நெருக்கமாக செயற்பட்ட அவரது தீவிர விசுவாசிகளாவர். (ந)

# திருவிழாப் பிரச்சினையை தேசிய பிரச்சினையாக்காதீர்

## அமைச்சர் மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு, ஒக். 12

மத்திய கொழும்பின் பார்பர் வீதி என்ற மகா வித்தியாலய மாவத்தையின் 36ஆம் தோட்டத்தில் அமைந்துள்ள இந்து கோயிலின் தேர்த்திருவிழா இடைநிறுத்தம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை இன்று இந்த குறிப்பிட்ட மகா வித்தியாலய மாவத்தை பிரச்சினை என்ற நிலை மாறி ஒரு தேசிய பிரச்சினையாக உருமாறி வருகிறது. இத்தகைய நிலைமை இந்த நாட்டுக்கு உகந்தது அல்ல – இவ்வாறு தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சரும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.



இதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இது தொடர்பில் நாம் எட்டிக்கு போட்டியாக செயற்படக் கூடாது. எனவே இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொறுப்பை நான் தற்போது கொழும்பு மாநகர முஸ்லிம் சமூக தலைவர்களான அமைச்சர் பைசர் முஸ்தபா, இராஜாங்க அமைச்சர் பௌசி, நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், கொழும்பு மேயர் முசம்மில் மற்றும் நல்லிணக்க இயக்க தலைவர் நாஜா முஹம்மத் ஆகியோரிடம் ஒப்படைத்துள்ளேன்.

பல மதங்கள், இனங்கள் வாழும் இந்த நாட்டில் பொலிஸ் பாதுகாப்புடன் மத விழாக்களை நடத்த முடியாது. கடந்த காலங்களில் கோயில்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியவற்றுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சம்பவங்களை இது ஞாபகப்படுத்துகிறது. இன்றைய இந்தச் சூழல் கடந்த காலங்களில் பள்ளிவாசல் தகர்ப்புகளுக்கு எதிராக முன்னின்று போராடிய என் மனதை காயப்படுத்தி உள்ளது.

ஏட்டிக்கு போட்டியாக திருவிழா நடத்துவது நல்லிணக்கத்துக்கு உகந்தது அல்ல. அது நிரந்தரத் தீர்வும் அல்ல. அதேவேளை, இந்த சட்ட விரோத மற்றும் மத நல்லிணக்க விரோத செயல்களுக்கு மிகப்பெருவாரியான முஸ்லிம் மக்களும், இஸ்லாமிய தலைவர்களும் எதிர்ப்பையும், அதிருப்தியையும் தெரிவித்து வருகிறார்கள் என்பதையும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். எனவே திருவிழா எந்தவித தடையும் இன்றி நடைபெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு விரைவில் நிறைவேறும் – என்றார். (ந–10)



உலக மனநல ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு அதன் சின்னமான வண்ணத்துப்பூச்சி படம் பொறிக் கப்பட்ட சின்னம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து அணிவிக்கப்பட்டது. சுகாதார வாடிக்கையாளர் அதிரடி வலையமைப்பின் பணிப்பாளர் கே. கே. நாணயக்கார முதல் சின்னத்தை ஜனாதிபதி அவர்களுக்கு வழங்கினார். (ந)

# சாவுத் தண்டனைகள் தொடர்ந்தும் விதிக்கப்படும்

## நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.12

சாவுத் தண்டனை நிறுத்தப்பட மாட்டாது. தொடர்ந்தும் சாவுத் தண்டனை விதிக்கப்படும்.– இவ்வாறு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஒருசில காரணங்களுக்காகவே சாவுத் தண்டனையை ஒத்திவைப்பதற்கு இலங்கை அரசு சர்வதேச அரங்கில் வாக்களித்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

சாவுத் தண்டனையை நிறைவேற்றுவதால் குற்றச்செயல்களில் மாற்றம் ஏற்படாது என்று சமூக ஆர்வலர்களும், புத்திஜீவிகளும் தெரிவித்துள்ளமையையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டில் அதிகரித்துச் செல்லும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றை ஒழிக்க சாவுத் தண்டனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அண்மைய காலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அண்மையில் நாடாளுமன்றத்தில் இது குறித்து ஒத்திவைப்பு வேளை விவாதமொன்றும் நடைபெற்றது.

சாவுத் தண்டனையை சிறிது காலத்துக்காவது நிறைவேற்றி குற்றச் செயல்களை குறைக்க ஆவன செய்யவேண்டுமென பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இலங்கையில் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்படுகின்றபோதும், அது நிறைவேற்றப்படாத காரணத்தால் ஆயுள் தண்டனையாக மாற்றமடைகின்றது.(ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேடம்:** எண்ணம், செயலில் உற்சாகமாக இருப்பீர்கள்.தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், ஆர்வத்துடன் படித்து முன்னேறுவர்.

**இடபம்:** தேவை அனைத்தும் எளிதில் பூர்த்தியாகும். உறவினரின் பேச்சை பெரிதுபடுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:** யாரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். பெற்றோர் உடல் நலனில் அக்கறை உண்டாகும். தொழில், வியாபாரத்தில், போட்டி ஏற்படலாம். இலாபம் சுமாராக இருக்கும். பயன் அறிந்து வெளியூர் பயணம் மேற்கொள்வது நல்லது.

**கடகம்:** தடைகளை சாமர்த்தியமாக சரி செய்து முறியடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் பன்மடங்கு உயரும். குடும்பத் தேவை அனைத்தையும், பூர்த்தி செய்வீர்கள். மனைவியின் வழியில், நல்ல செய்தி வந்து சேரும்.

**சிங்கம்:** மறதியால் சிரமத்துக்கு ஆளாகலாம் கவனம். தொழில், வியாபாரத்தில், வருமானம் மிதமாக இருக்கும். உடல் நலனில் அக்கறை காட்டத் தொடங்குவீர்கள். மாணவர்கள், படிப்பில் நாட்டத்துடன் ஈடுபடுவர்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

**கன்னி:** நீண்ட நாள் ஆசை இனிதே நிறைவேறும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், அமோக இலாபம் காண்பீர்கள். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**துலாம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச்செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். உறவினர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதல் அளிக்கும்.

**விருச்சிகம்:** எதிரியால் ஏற்பட்ட பிரச்சினை மறையும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான இலாபம் கிடைக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். புதிதாக சொத்து வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு :** இலட்சிய மனத்துடன் பணியாற்றி வருவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** அனைவரிடமும் பெருந்தன்மையுடன் நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியால் ஆதாயம் உயரும். உடல் நலனுக்காக, மருத்துவ சிகிச்சை செய்ய நேரிடும். மனைவியின் அன்பும், ஆதரவும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கும்பம்:** நண்பரின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். ஆரோக்கிய விபியத்தில் அக்கறை செலுத்துவீர்கள். வாகனப் போக்குவரத்தில், மிதவேகம் கடைபிடிக்கவும்.

**மீனம்:** புதியவர்களின் நட்பால், நன்மை அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். இலாபம் கூடும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். உறவினர் வருகையால், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

# நன்றியுள்ள மாணிக்கம்

**நேயர் :** வணக்கம், பாட்டுச் சனலா? நான் மாணிக்கம் கதைக்கிறன்.

**தொகுப்பாளர்:** ஓம்! அண்ணா, உங்கள் மனதில் உள்ளதை அனைவருடனும் பகிர்ந்து கொள்கிற நிகழ்ச்சி அண்ணா இது.

**நேயர்:** ஓ..! அப்படியா தங்கச்சி.

**தொகுப்பாளர்:** ஓம் அண்ணா. பிறகு நீங்கள் கேட்ட பாட்டை யாருக்குக்காக போடச் சொல்றீங்களோ, நாங்க அவங்களுக்காக அதை ஒளிபரப்புவோம் அண்ணா.

**நேயர்:** சரி தங்கச்சி. நான் ஒரு விடயத்தை உங்கட நிகழ்ச்சியில பகிர்ந்துகொள்ளலாம் என்று நினைக்கிறன்.

**தொகுப்பாளர் :** நிச்சயமாக சொல்லலாம் அண்ணா.

**நேயர்:** அதாவது இன்டைக்கு காலையில் நான் சந்தைக்குப் போகும்போது, பணப்பை ஒன்டு றோட்டில கிடந்தது. அதை எடுத்து திறந்து பார்த்தேன். அதுக்குள்ள பத்தாயிரம் ரூபா பணமும், கிரெடிட் கார்டும், ஒரு தங்கக்காசும் கிடந்தது தங்கச்சி.

**தொகுப்பாளர்:** அப்படியா அண்ணா, பிறகு என்ன நடந்தது?

**நேயர்:** அதில அவற்ற விலாசம், மற்றும் ரெலிபோன் நம்பரும் இருந்தது தங்கச்சி. அவற்ற பெயர் பழனிச்சாமி.

**தொகுப்பாளர் :** அண்ணா நீங்கள் நல்ல தங்கமான மனசு உள்ளவர் பிறகு அந்த பணப்பையை அவருக்கு அனுப்பிட்டிங்களா?

**நேயர்:** இல்ல தங்கச்சி. அவருக்காக நீங்கள் ஒரு பாட்டுப் போட வேணும் என்டு விரும்புறன். நன்றி சொல்ல உனக்கு, வார்த்தை இல்லை எனக்கு நான் தான் தயங்குறன் இந்தப்பாட்ட அவருக்காக கட்டாயமாப் போடுங்க தங்கச்சி. போனில நன்றி சொல்லலாம் என்டால், அவற்ற ரெலிபோன் நம்பர் வேலை செய்யேல்ல. நேரடி யாகப் போய் நன்றி சொன்னால் அது நாகரிகமாவும் இருக்காது தானே. அதுதான் உங்கட நிகழ்ச்சி மூலமாச் சொல்லுறன். சரி தங்கச்சி நான் வைக்குறன்.

**தொகுப்பாளர் :** அடப்பாவி...களவாணிப் பயல் கூடவா இவ்வளவு நேரமும் கதச்சுக் கொண்டிருந்தனான்.



# விஜய்க்காகக் காத்திருக்கும் இயக்குநர்

கோலிசோடா என்ற படத்தின்மூலம் திரையுலகில் பேசப்பட்டவர், விஜய் மில்டன். அடுத்து இவர் விக்ரமை வைத்து இயக்கியிருக்கும், 10 எண்றதுக்குள்ள திரைப்படம் படம் வெளியாகவிருக்கிறது. இதையடுத்து, விஜய்யை வைத்து படம் இயக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் மில்டன். தற்போது அட்லி படத்தில் நடித்து வரும் விஜய் அடுத்து எஸ்.ஜே.சூர்யாவின் இயக்கத்தில் நடிப்பார் என பேசப்படுகிறது. இது பேச்சு மட்டும்தான் அதிகாரபூர்வமாக இன்னும் முடிவாக வில்லை என்கிறது சினிமாத்தரப்பு. எஸ்.ஜே.சூர்யா விடம் கேட்டால், இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது என்று நழுவிக் கொள்கிறார்.

10 எண்றதுக்குள்ள முன்னோட்டத்தைப் பார்க்கும் யாருக்கும், விஜய் மில்டன் இயக்கத்தில் நடிக்க ஆசைவரும். படம் வரும் 21 ஆம் தேதி வெளியாகவுள்ளது. கோலிசோடா மாதிரி இதுவும் வெற்றியடைந்தால், விஜயின் திகதி விஜய் மில்டனுக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்கிறது திரையுலக வட்டாரம். தற்போது ஒரு படம் முடிவதற்கு முன்பே அடுத்த படத்தை ஒப்பந்தம் செய்துவிடும் விஜய். கடந்த சில வருடங்களாக இப்படி இடைவெளிகள் இல்லாமல் நடித்து வருகிறார். இந்தநிலையில் புலி வெளியாகும் முன்பே அட்லி இயக்கும் புதிய படத்தில் விஜய் நடிக்க ஆரம்பித்தார்.

தற்போது அட்லியின் படத்தின் பாதிக்குமேற்பட்ட வேலைகள் முடிவடைந் துள்ள நிலையில், அடுத்தப் படம் என்ன எனபதுபற்றி கடுமையான ஆலோசனையில் உள்ளார் விஜய். ஆனால் அண்மைத் தகவல்களின்படி விஜய் எஸ்.ஜே.சூர்யா இயக்கும் படத்தில் நடிக்கவுள்ளார் என்றும், இந்தப் படத்தை அஜித்தின் ஆரம்பம், என்னை அறிந்தால், வேதாளம் படங்களை தயாரித்துள்ள ஏ.எம்.ரத்னம் தயாரிக்கவுள்ளார் எனறும் தகவல்கள் வெளியாகியுள்ளது.


# பேஸ் புக்கில் பிடித்தவை...











**இதுதான் கைபேசியின் தத்துவம்**

**கைபேசியில்:**
**நடந்து கொண்டே கதைத்தால் அது வேலை,**
**நின்று கொண்டு கதைத்தால் அது நட்பு,**
**படுத்துக் கொண்டு கதைத்தால் அது காதல்!!**

## எங்கே செல்கிறது சமுதாயம். அப்பாவின் மின்னஞ்சல்..

அன்புள்ள ரவி, நலமா? உன் தாயும் நானும் நலமாக இருக்கிறோம். விருந்துக்காக உன் அக்காள் வீட்டினர் வந்துள்ளனர். நீ அருகில் இல்லாதது பெரிய குறையாக இருக்கிறது. உன் அறையில் கணினியைக் கொஞ்சம் மூடிவைத்து விட்டு கீழிறங்கி வந்து சாப்பிடு. அன்புடன் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பெருநிலப்பிரப்பில் இன்றுமுழங்கும் தருமமுழக்கம்

## கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி(1AB supper)

## கிளி/ முழங்காவில் மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை




தர்மபுரம் மத்திய கல்லூரி

*இடம் இருந்து வலம்:*

**R. சயந்தன் (கப்டன்), பி. யோகேசன், (Couch) S.பூலோகராஜா (அதிபர் )M.சசிகுமார் (முகாமை யாளர்), T. நிதுசன் (உபதலைவர்)**

*இடம் இருந்து வலம்:*

**N. யதுசன், P.அனோஜன், K.ரொசான், R.மிதுசன், நகுலன், R.விக்சன், T.திரோசன், M.பிந்துசன், P.ரஜிதன்,துஸ்யந்தன், A. லோஜிதன் S.நிலவன், L.பாவலன்.**




முழங்காவில் M.V.(தேசிய பாடசாலை)

*வலம் இருந்து இடம்:*

**R. நிசாந்தன் (கப்டன்),ருபன், (Couch) சசிதரன் (பிரதி அதிபர்), ஆனந்தராசா (அதிபர்), ரஞ்சன் (உபஅதிபர்),ஜெயராசா (முகாமையார்), நிரஞ்சனா (PT), துஸ்யந்தன் (முகாமையாளர்) பிரணவன் (உபதலைவர்).**

*வலம் இருந்து இடம்:*

**கஜன், சஞ்சீவன், டினோஜன், தனுராஜ்,கபில், சுலக்சன், கிருஸ்ணராஜ், பிரதீபன், வாசிங்டன், டிலைக்சன், தனுஜன், நிரோஜன், சிவ தினேஸ்.**

யுத்தம் தந்தகாலவடுக்களின் பின் கிளிநொச்சிமண்ணில் சிதைந்துபோன விளையாட்டுத் துறையினைமேம்படுத்து வதற்காகபல் வேறுசெயற்றிட்டங்களை முன்னெடுத்துவருகின்றனர். கிளிநொச்சிதருமபுரம் மத்தியகல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் செல்விவிதுஷா ஜீவராசாஎனும் மாணவியின் தனியாள் செயற்றிட்டத்தில் இரு பாடசாலகளின் விளையாட்டினைமேம்படுத்தும் வகையிலும் மாணவர் களிடையே நல்லுறவைஏற்படுத்தும் நோக்குடனும் முதல்முயற்சியாக இவ் வன்பந்துதுடுப்பாட்ட இனிங்ஸ் போட்டியினை ஒழுங்குபடுத்தியுள்ளனர்.

தருமமுழக்கம் இன்றுதிங்கட் கிழமைதருமபுரம் பொதுவிளையாட்டுமை தானத்தில் காலை 8.30மணிக்கு முழங்க இருக்கின்றது.கிளி/தருமபுரம் மத்தியகல்லூரி ( 1AB supper) அணியைஎதிர்த்துகிளி/முழங்காவில் மகாவித்தியாலய(தேசியபாடசாலை ) அணி மோதவிருக்கின்றது. தருமபுரம் மத்தியகல்லூரியின் முதல்வர் திரு.ச.பூலோகராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்குமுதன்மைவிருந்தினராகபாராளுமன்றஉறுப்பினர் கௌரவசிவ ஞானம் ஸ்ரீதரன் அவர்களும்,சிறப்புவிருந்தினராககிளிநொச்சிகல்விவலய உடற்கல்வி உதவிக்கல்விபணிப்பாளர் திரு பி.விஸ்ணுஅவர்களும் கௌரவவிருந் தினர்களாகமுன்னாள் ஆசிரியர் திரு.இ.கிரிசாந்தன் கலந்துகொள்ளவுள்ளனர்.

### ஆசிச்செய்தி



கிளிநொச்சி மாவட்டம் தருமபுரம் பதியிலே வரலாற்றில் முதன் முறையாக தருமபுரம் பொது விளையாட்டு மைதானத்திலே இன்று (12.10.2015) திங்கட்கிழமை மிகவும் பிரமாண்டமான முறையிலே பாடசாலை மாணவர்களுக்கிடையே இடம்பெறவிருக்கும் துடுப்பாட்ட நிகழ்வானது சிறப்பாக நடைபெறவும் விளையாட்டு வீரர்கள் உடல் உள ஆரோக்கியம் நிறைந்து சிறப்பாகத் துடுப்பாடவும் வெற்றியைத் தமதாக்கி தம் கல்லூரிக்கு பெருமை சேர்க்கவும் எல்லாம்வல்ல கரைச்சி புளியம்பொக்கணை ஸ்ரீ நாகதம்பிரான் திருவருளோடு கூடிய எனது நல்லாசிகளை வழங்கி பெருமகிழ்வடைகின்றேன்.

அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம்
புளியம்பொக்கணை

### முக்கியத்துவம் வாய்ந்த போட்டி



கிளி / தருமபுரம் மத்திய கல்லூரிக்கும், கிளி/ முழங்காவில் மகா வித்தியால யத்திற்கும் இடையில் நடைபெறுகின்ற வன்பந்து துடுப்பாட்ட போட்டியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தாக அமையும் என்றே எண்ணுகின்றேன் . விளையாட்டு மனிதனின் உள, உடல் ஆரோக்கியத்தை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது. உள்ளம் மகிழ்வாக இருத்தால் மட்டுமே உற்சாகத்துடன் விளையாட் டில் ஈடுபட முடியும். தொடர்ச்சியாக பயிற்சியில் ஈடுபட்டு விளையாடுவதன் மூலம் உடல் ஆரோக்கியமடைகிறது.

தருமபுரம் மத்திய கல்லூரி1959 ஆம் ஆண்டும், முழங்காவில் மத்திய கல்லூரி 1971.08.21 ஆம் திகதி படித்த வாலிபர் திட்டம் உருவாக்கப்படும் போதும் ஆரம்பிக்கப்பட்டது. இப்பள்ளிகள் சிறிய பாடசாலைகளாக ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக பரிணாம வளர்ச்சி கண்டு கல்வியிலும் புறக்கிருத்தியத்திலும் மாணவர்கள் உரிய வகையில் தத்தம் ஆற்றல் களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கி இன்று மிகப்பெரிய பாடசாலைகளாக வளர்ந்து நிற்கின்றன. இவ்விரு பாடசாலைகளும் கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்கு மற்றும் மேற்கு புறங்களில் அமைந்திருக்கிறது. இரு பாடசாலைகளுக்குமிடையில் பரந்த இடைவெளி காணப்படுகிறது.

சில பாடசாலைகள் அண்மைக்காலங்களாக கடின துடுப்பாட்டத்தை அறிமுகப்படுத்தி மாணவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளனர். இக்காலகட்டத்தில் வடக்கு மாகாணத்திலுள்ள அதிகமான பாடசாலைகள் வன்பந்து துடுப்பாட்டத்தில் மோதுவது நவீன கலாசாரமாக மாறியுள்ளது. வடக்கு மாகாணத்தில் இவ்வாறான துடுப்பாட்டப் போட்டிகள் நடத்துவருவது அதிகரித்துக் காணப்படுகிறது.

மேலும் வெற்றி தோல்விகளைச் சமனாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் ஒழுக்கக்கட்டுப்பாடு. நேரமுகாமைத்துவம் போன்ற பண்புகளை வளர்க்கும் ஒரு தூணாக விளையாட்டுக்கள் அமைகின்றன. வெற்றி தோல்விகளை சமனாக ஏற்கும் மனப்பக்குவம் எப்போது மாணவர்களிடம் வருகின்றதோ அன்று வன்முறையற்ற ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்க முடியும். இதனடிப்படையிலேயே முதலாவதாக நடைபெறுகின்ற வன்பந்து துடுப்பாட்டம் இரண்டு பாடசாலைகளையும் இணைக்கும் ஒரு களமாக அமைவதோடு மாணவர்களுக்கு புத்துயிர் அளிக்கின்ற புறக்கிருத்திய சமராக அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

[illegible]
கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்வடக்கு மாகாணம்.

### விளையாட்டு மனிதனைப் பூரணமாக்குகின்றது



கிளி/தருமபுரம் மத்திய கல்லூரியும் கிளி/முழங்காவில் மகாவித்தியாலயமும் (தேசியபாடசாலை) இதருமமுழக்கம்சு என்ற பெயர் சூட்டி இன்று ஆரம்பிக்கவுள்ள துடுப்பாட்டப் பெரும்போட்டிக்காக ஆசி கூறி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றிலிருந்து புதியதொரு துடுப்பாட்ட வரலாற்றை இப்பாடசாலைகள் ஆரம்பிக்கின்றன. பாடசாலைக்கல்வியுடன் விளையாட்டும் இரண்டறக்கலந்து மாணவர்களை முழு வளர்ச்சிக்கு இட்டுச் செல்கின்றன. இன்று உலகளாவிய ரீதியில் துடுப்பாட்டம் அனைவரையும் கவர்ந்த ஒரு விளையாட்டாக உள்ளது என்பது யாவரும் அறிந்ததே. போருக்குப்பின் எமது வன்னிப்பிரதேச மாணவர்கள் துடுப்பாட்ட விளையாட்டில் அதிக ஆர்வம் காட்டி வருவது வெள்ளிடைமலை. இந்த வகையில் இப்பாடசாலைகள் ஆண்டுதோறும் விளையாடும் நோக்கில் இன்று முதன் முறையாக இச்சிநேக பூர்வ துடுப்பாட்டத்தை ஆரம்பிக்கின்றார்கள். பலருடைய தியாகத்தின், அர்ப்பணத்தின், முயற்சியின் விலையாக நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்படவுள்ள இச்சிநேகபூர்வ துடுப்பாட்டம் மாணவர்களிடையே ஆளுமையையும், தன்னம்பிக்கையையும் வெற்றிதோல்விகளை சமனான மனநிலையுடன் ஏற்றுக்கொள்ளும் பண்புகளையும் வளர்க்க வேண்டுமே தவிர பகைமைகளையும் வெறுப்பையும் வன்முறைகளையும் வளர்க்கின்ற களமாக இருக்கக் கூடாது. ஆகவே இரு பாடசாலை அணிகளையும் பாடசாலை சமூகத்தையும் வாழ்த்தி தொடர்ந்து இத்துடுப்பாட்டம் வரலாறுகளில் தடம்பதித்து வளரவும் இதில் இருந்து தேசிய அணிக்கு எம் வீரர்கள் தேர்வு செய்யப்படவும் இறை ஆசி வேண்டிவாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்தந்தை ஆ. அன்ரன் புனிதகுமார்
பங்குத்தந்தைதூய சவேரியார் ஆலயம்தர்மபுரம்.

### வலயக் கல்விப் பணிப்பாளரின் செய்தி



கிளிநொச்சியின் தொன்மை வரலாற்றை நிறுவும் புராதன கிராமங்களை உள்ளடக்கிய எமது பிரதேசத்தின் கல்வி, விளையாட்டுத் துறைகளில் வளர்ச்சிபெற்ற கற்றல்மையமாக சமூகத்தின் இருப்பைப் பேணிவரும் பாடசாலைகளில் கிளி/தருமபுரம் மத்திய கல்லூரியும் கிளி/முழங்காவில் மகாவித்தியாலயமும் குறிப்பிடத்தக்கவை.

இந்த இரு பாடசாலைகளுக்கும் இடையில் நடைபெறுகின்ற வன் பந்துத் துடுப்பாட்டப்போட்டியானது ஏனைய பாடசாலைகளுக்கு எடுத்துக்காட்டாக அமையும் என நம்புகிறேன். தரும முழக்கம், என்னும் பெயர் சூட்டப்பெற்று நடைபெறவுள்ள இப்போட்டியானது இரண்டு பாடசாலைகளுக்கிடையிலான சமூக உறவுகளை வளர்த்தெடுக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

விளையாட்டு வீரர்களுக்கு இருக்கவேண்டிய பண்புகளில் வெற்றி தோல்விகளைச் சமனாக மதிக்கும் மனப்பாங்கு முக்கியமானது. இதனை வளர்த்தெடுக்கும் களமாக அமைகிறது. இப்போட்டி சிறப்பாக நடைபெற எனது நல்லாசிகளை நல்குவதில் பேருவகையடை கின்றேன்.

க.முருகவேல்
வலயக்கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/சிறீ சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர்

2015 ஆம் ஆண்டு சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்ற எமது அதிபர் உயர்திரு இளையதம்பி செல்வநாயகம் அவர்கள் மேலும் பல சேவைகள் செய்து விருதுகள் பெறவும், பல்லாண்டு காலம் சீருடன் வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
சி. சிவநாதன் ஆசிரியர் குடும்பம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/புத்தூர் மேற்கு இந்து ஆரம்ப பாடசாலை மாணவி

**செல்வி சற்குணம் அபிஷா**

2015ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 156புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும்,ஆசிரியர்களுக்கும்,பெற்றோருக்கும் கிராமத்திற்கும் பெருமை தேடி தந்துள்ள இவர் மேல பல சாதனைகளை படைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பாராட்டி வாழ்த்துகிறோம்.



வாழ்த்துவோர்: செல்வராசா, சின்னப்பா ரஞ்சித், ரமேஷ், ரதீஸ் ரவிராம்,ரதுபரன், சிவமலர் நவனேஸ்வர்,உ.தபராந்தன், கோனேஸ்வர், கலைமதி வீதி, புத்தூர் மேற்கு.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
**சதுர்யா ஜெகதீஸ்வரன்**

மானிப்பாய் சத்ய சாயி பாடசாலையில் கல்வி பயிலும் ஜெ.சதுர்யா அவர்கள் 2015ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் **156** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்கு வாழ்த்துவதோடு மேலும் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும் என்றும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாளை வேண்டுகின்றோம். மேலும் இவருக்கு பக்க பலமாகவும் ஊக்குவிப்பாளருமாக இருந்த அன்னை சுதர்சினியையும் அவரது குடும்பத்தினரையும் கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
பெரியப்பா குடும்பத்தினர்
(கஜேந்திரவரதன் குடும்பத்தினர்.)
சுதுமலை வடக்கு, சுதுமலை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/முக்கொம்பன்
அரசினர்
தமிழ்க் கலவன்
பாடசாலையைச் சேர்ந்த

**மருதலிங்கம் கோவண்ணன்**

2015 தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் 37 ஆவது நிலையில் சித்தியடைந்துள்ளார். இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்,

வாழ்த்துவோர்: **பாடசாலைச் சமூகம்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவி

**செல்வி புஸ்பராஜா பிரவீனா**



2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக இவரை வழிப்படுத்திய கல்லூரி அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு இவர் மேலும் பல பெருமைகளைத்தேடி சாதனை படைக்க இறைவனை வேண்டி இவரை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பு.தனுராஜ், பு.கபிலராஜ்
குமரகோட்டம், கோண்டாவில்.

Best Wishes

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித ஜோண் பொஸ்கோ
வித்தியாலய மாணவி

செல்வி
**நிக்சன்ரஞ்சித்குமார்**
**போனபாக் தேவஅமிர்தா**
(அம்மு)

2015 தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகள், தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டி பிரிவு - 01 பாவோதல் முதலாமிடம்.

முல்லை பூத்த மண்ணில் பிறந்தாய்
முள்ளிவாய்க்கால் நெருப்பைக் கடந்தாய்
முத்தமிழ் மூன்றிலும் முன்னிலை பெற்றாய்
வடநிலக் கலைஞர் விருதை கையில் எடுத்தாய்
பாவோதுலெனும் நாவண்மையில்
முதலிடம் வென்றாய்
தேசிய சாதனை படைத்தாய்
புனித பொஸ்கோவின் வைரவிழா மகுடத்தில்
வெள்ளி முத்தொன்றைப் பதித்தாய்
தரம் ஐந்து புலமையிலும் தடைதாண்டி நின்றாய் -
கிள்ளையே நீ இறை அற்புதம் பெற்ற தேவ
மகளாய் பல்கலை பெற்று வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நி.பாழ்நிலா (தரம் - 11) }
நி.எழிலோவியா (தரம் - 09) } அக்காமார் [illegible] உ[illegible] பாடசாலை
அம்மம்மா, மாமாமார், குடும்பத்தினர்.

(65365.11.15.16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவி

செல்வி
**இராமச்சந்திரன்**
**தர்ணிகா**

2015ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று, **மாவட்ட மட்டத்தில் 72 ஆவது** நிலையைப் பெற்று சித்தியடைந்தமைக்காக இவரை வழிப்படுத்திய கல்லூரி அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களை பாராட்டுவதோடும் இவர் மேலும் பல பெருமைகளைத் தேடி சாதனை படைக்க இறைவனை வேண்டி இவரை வாழத்துகின்றோம்.

109, அம்மன் கோவில் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.

(e18763.11.16)

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**மாலசுதன் சுருதிகா**

சித்தன்கேணியைச் சேர்ந்த, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்று 2015 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 179 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும் சங்கானைக் கோட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்ற இவரை பாராட்டி வாழ்த்துவதோடு, மென்மேலும் பல பட்டங்கள்பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**ஜெயானந்தம் - குடும்பம்.**
டச்சு றோட், சித்தன்கேணி.

(65363) (13.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 5 புலமைப் பரிசில் பாராட்டும் சிறப்பிதழ் - 2015

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்



செல்வி ச.மதுஜா

(157 புள்ளிகள்) அவர்கள்

2015 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். மேலும் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

ரு.விஜுசன் - 151
கி.பவித்திரன் - 115
ம.தனுஷ் - 108
கு.யசோதா - 78

இம் மாணவர்கள் அனைவரையும் தரம் 1 தொடக்கம் தரம் 4 வரை கற்பித்த ஆசிரியர் நா.இந்திரகுமார் அவர்களையும் வழிகாட்டிய அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகத்தினர்.

(61876) (14.15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவன்

செல்வன் மதிவதனன் சுடரகன்

2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். செல்வன் சுடரகனை வாழ்த்தி இவர் மேலும் சாதனைகள் படைக்க இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்

அம்மப்பா, அம்மம்மா, மாமா, அத்தை, சித்தி, சித்தப்பா

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவி

செல்வி ஸ்ரீசங்கவி ஸ்ரீதரன்

2015 இல் நடைபெற்ற தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் 156புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

அவர் மேன்மேலும் முன்னேற வாழ்த்துபவர்கள்.

அப்பா, அம்மா, கொழும்பு அப்பப்பா, அப்பம்மா,
ஸ்ரீபெரியப்பா, துஷ்சர் - சித்தப்பா, லோகேஸ் பெரியம்மா, தர்சி அக்கா,
இலங்கைநாயகி அம்மன்கோவிலடி, கல்வியங்காடு



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன்

மனோரஞ்சிதன் கிசாந்

புள்ளி - 184 (மாவட்ட நிலை - 20)

கடந்த 2015 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யா/புனித யோண்பொஸ்கோ வித்தியால மாணவன் செல்வன் மனோரஞ்சிதன் கிசாந் (அன்பு) 184 புள்ளிகளைப் பெற்று பெற்றோருக்கும், கற்பித்த ஆசிரியர்களுக்கும் எமக்கும் பெருமை தேடித் தந்துள்ளார். இவர் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பாராட்டுகின்றோம்.

ஜனார்த்தன் சித்தப்பா குடும்பம்
கேதாரநாதன் குடும்பம்
சங்கத்தானை, சாவகச்சேரி.



(63560) (14.15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2015 இல் தோற்றி 164 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மாணவி

செல்வி

அபிசனா நீதீஸ்வரன்

அவர்களையும், பரீட்சையில் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்ற மாணவச் செல்வங்களான

| | |
|---|---|
| ந.மெல்ஸியா - 149 | தி.விந்துஜன் - 118 |
| பே.மேனுஜா - 149 | தி.சஞ்சீவன் - 118 |
| சி.கஜேந்திரா - 146 | ஜெ.லக்ஸியா - 115 |
| ஞா.கனிஸ்ரன் - 128 | வி.விதுசனா - 105 |
| சி.துசிந்தா - 123 | கி.பிராயினி - 105 |

ஆகியோரை பாராட்டுவதுடன் இவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர் செல்வி கமலாம்பிகை சின்னத்துரை ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மாணவி

செல்வி பிரதீபன் சயந்திகா

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக இவரை வழிப்படுத்திய பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு இவர் மேலும் பல பெருமைகளைத் தேடி சாதனை படைக்க இறைவனை வேண்டி இவரை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

அப்பா, அம்மா, அன்புத்தம்பி.

மீசாலை வடக்கு, இராமாவில், கொடிகாமம்.

(60626) (14.15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி N. நிவேதா

புள்ளி (185) பாடசாலை மட்ட நிலை (2) மாவட்ட நிலை (14)

கடந்த 2015 தரம் -5 புலமைப்பரி சில் பரீட்சையில் யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவி செல்வி நந்தகுமாரன் நிவேதா 185 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் மென் மேலும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துவதோடு

உயர் பெறுபேறு பெற வைத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம்.

அதிபர்



K.K. யோகநாதன்

ஆசிரியர்கள்




பொன்னையா பொன்னம்பலம்



பொன்னையா பரமேஸ்வரன்

வாழ்த்துவோர்: தாத்தா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார் பெரியம்மாமார், மற்றும் காந்தன் குடும்பம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மண்கும்பானைச் சேர்ந்த

செல்வி சிவகுமார் ஸ்ரீகோபியா

அவர்கள் 160 புள்ளிகளைப் பெற்று மண்கும்பானில் முதலாவது இடத்தைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவர் மேலும் மேலும் கல்வியில் சிறப்புற மிளிர திரு திருமதி முரளி ஆகிய நாம் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

திரு.திருமதி சுபத்திரா முரளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.த.அருமைநாயகம் (அதிபர்) SLPS - 1
திரு.பொ.ஆறுமுகரஞ்சன் (ஆசிரியர்) SLPS - 2 - II

எமது பாடசாலை அதிபர் திரு.த.அருமைநாயகம் அவர்கள் பல்துறை ஆற்றல், ஆளுமைமிக்க முதல்வருக்கான "பிரதீபா பிரபா" விருதினை இவ்வாண்டு பெற்றுக் கொண்டார்.
எமது பாடசாலை ஆசிரியர் திரு.பொ.ஆறுமுகரஞ்சன் அவர்கள் நல்லாசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருதினை இவ்வாண்டு பெற்றுக் கொண்டார். இவர்களுக்கான விருதினை 06.10.2015 இல் பண்டாரநாயக்க சர்தேச மாநாட்டு மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.
இவர்கள் இருவரது சேவையும் மென்மேலும் சிறப்படைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி சித்திராமாலினி ஜெயக்குமார் ஜனாதிபதியிடம் சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருதினை பெற்றுக் கொண்டமையை யிட்டுப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அதிபர்,ஆசிரியர்கள்
கிளி/ கட்டைக்காடு அ.த.க பாடசாலை



கரைச்சி வடக்கு ப.நோ. கூ. சங்கம் - பரந்தன்

வாடகைக்கு

01.A9 வீதி பரந்தன் சந்தியில் அமைந்துள்ள எமது தலைமை அலுவலக கட்டடத்தொகுதியினைச் சேர்ந்த கடைத் தொகுதி நீளம் 40 அடி அகலம் 30 அடி கொண்ட கட்டடம் வாடகைக்கு உண்டு.
02. உணவகத்துக்கு அருகில் கடைக்கட்டடம் அமைப்பதற்குரிய காணியும் கட்டடமும் வாடகைக்கு விடப்படும். (நிபந்தனைகளுடன்)

விற்பனைக்கு

எமது சங்கத்துக்கு சொந்தமான பாரவூர்தி 43- 1019 இசுசு பாரவூர்தி விற்பனைக்கு உண்டு.
குறிப்பு -
மேலதிக விவரங்களுக்கு
* அலுவலக நாள்களில் பாரவூர்தியினை அல்லது கட்டடத்தினை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை பார்வையிடலாம்.
* கோரிக்கையினை மூடிய தபால் உறையினுள்- தலைவர், கரைச்சி வடக்கு ப.நோ. கூ. சங்கம்,பரந்தன் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ 25.10.2015 இற்கு முன் அனுப்பிவைக்கவும்

தொடர்புகளுக்கு: 024 324 8302
021 228 0037

தலைவர்
கரைச்சி வடக்கு ப.நோ. கூ. சங்கம்- பரந்தன்.



STUDY IN SINGAPORE - MALASIYA

யாழ்
எமது மாணவர்களுக்கு தொழில்சார் பயிற்சி/ உயர்கல்விகளை வெளிநாட்டில் தொடர சிறந்த உத்தரவாதத்துடன் கூடிய வாய்ப்பு

HOTEL MANAGEMENT | BUSINESS
TRAVELS & TOURS | IT
CULINERY ARTS | ENGINEERING, MEDICINE
(100 இற்கும் மேற்பட்ட பாடநெறிகள்)

Spot Admission 17/10/2015

ScholorShip Up To(1500 - 2000$)
1 வார இலவச தங்குமிட வசதி

* 100% உத்தரவாதத்துடன் கூடிய நெறியாள்கை
* வேலை வாய்ப்புடன் கூடிய பாடநெறிகள்
* குறைந்த கல்வித்தகைமை (க.பொ.த சாதாரணதரம்)
* அனுமதி - விசா - தங்குமிட வசதி அனைத்தும் எமது சேவையின் கீழ்.

STUDY SINGAPORE www.edusingapore.sg
SDH
edutrust

SIO International
Study Visa Consultant
80/37, Kasthuriyar road, Jaffna.
Hot line- 0722364651, 0212217865.
Email- edusio.lk@gmail.com


# சாரதி அனுமதிப்பத்திரம் நீதிமன்றில் தடுத்து வைப்பு

## மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டு

சாவகச்சேரி,ஒக்.12

மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவரின் சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒரு வருடத்துக்கு நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிடப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால், மதுபோதையில் வாகன வரிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்கை விசாரித்த நீதிவான் சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 10 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன் அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒரு வருட காலத்துக்கு நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு பதிவாளருக்கு உத்தரவிட்டார்.இதுவரை காலமும் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரின் சாரதிய அனுமதிப் பத்திரங்கள் 3 மாதங்களே தடுத்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை – வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றி வந்த வாகனச் சாரதிக்கு 20 ஆயிரம் ரூபாவும், அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த வாகனச் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ–9)

# நூல்கள் அன்பளிப்பு

கைதடி, ஒக்.12

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கி வரும் கைதடி பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. கைதடி தென்கிழக்கைச் சேர்ந்த சின்னப்பொடியன் வீரகத்தி ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் இந்த நூல்களை வழங்கியுள்ளனர்.

(ஐ–288)


விற்பனைக்கு

70 ஸ்ரீ 550 லாண்ட்மாஸ்ரர் பெட்டியுடனும் AAY xxxx புதிய ஆட்டோவும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 869 1461



உங்கள் மின்கட்டணத்தை ZERO ஆக குறைப்பதற்கான ஒரே தீர்வு




மின்கட்டண செலவின் பயமின்றி வீதிகள், ஒழுங்கைகள், ஆலயவெளிவீதிகள், பாடசாலைகள், கலாசார மண்டபங்கள், பொதுஇடங்கள், Hotel வெளிபகுதிகள், நீர்த்தடாகங்கள், கடற்கரையோரங்கள் போன்ற பல.
15 வருடங்களுக்கு மேல் பாவனைக்காலம், வயறிங் இல்லை/ பராமரிப்பு இல்லை/ தானியங்கி.

பயிர்செய்கை/ மனித, கால்நடை கழிவிருத்தி திட்டம், நீச்சல் தடாகம்.
1 HP - 60 HP வரை . Single & 3 Phase.

Hot Line: 077 - 3076409

MICRO PC SYSTEMS 19 Yrs EXCELLENCE

| | |
|---|---|
| # 115 C, W.A. Silva MW, Colombo 06 | : 077 3076409 |
| # 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | : 077 312 6712 |
| பிரதான வீதி நெல்லியடி (HNB முன்பாக) | : 077 3039536 |
| A9 வீதி, கிளிநொச்சி (கச்சேரி முன்பாக) | : 077 3126712 |
| குருக்குத்தெரு, வவுனியா | : 077 742 5973 |
| திருகோணமலை | : 077 396 3284/ |
| | : 071 742 5973 |

Go Solar! Save Money! Clean Energy & Green Sri Lanka!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடோப் போட்டோஷொப்பின் அட்டகாசமான வசதி



புகைப்படங்களை எடிட் செய்யும் சிறந்த போட்டோ ஷொப் மென்பொருளை வடிவமைத்த அடோப் நிறுவனம் தொடுபேசி கமராக்களுக்கென விசேட வசதி ஒன்றை உள்ளடக்கியுள்ளது.
நினைவுச்சின்ன முறை எனும் இந்தப் புதிய வசதியின் ஊடாக புகைப் படங்கள் எடுக்கும்போது அந்தக் காட்சிகளில் தோன்றும் மனிதர்களைத் தானாக்வே நீக்க முடியும். சிறந்த பின்னணிக் காட்சிகளைப் படம் பிடிக்க விரும்புபவர்களுக்கு இந்த வசதி பெரிதும் உதவியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முதல் படம்பிடிக்கப்பட்ட பின்னரே அந்தப்படத்தை எடிட் செய்து தேவையற்ற காட்சிகள் அல்லது பொருள்களை நீக்கக்கூடியதாக இருந்தது. ஆனால், இந்த வசதி மூலம் படம்பிடிக்கும் நேரத்திலே இந்த வசதி கிடைக்கப் பெறுதல் விசேட அம்சமாகும்.



## பேஸ்புக்கில் புத்தம் புதிய வசதி!

சமூக வலைத்தளங்களில் முடிசூடா மன்னனாக விளங்கும் பேஸ்புக், டிஸ்லைக் பட்டனுக்குப் பதிலாக ஆறு உணர்வுகளை வெளிப்படுத்தும் ஸ்மைலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
பேஸ்புக்கில் டிஸ்லைக் பட்டன் தேவை குறித்து நாளுக்கு நாள் விவாதங்கள் எழுந்த நிலையில், முதல் படியாக லைக் பட்டனுடன் ஆறு உணர்வுகளை வெளிப்படுத்தும் ஸ்மைலிகளை அறிமுகம் செய்துள்ளது.
அதன் படி அன்பு, , சோகம் மற்றும் கோபம் உட்பட ஆறு வகையான அந்தப் பட்டன்களில் ஒன்றை பயனாளர்கள் தங்களது லைக்குடன் கிளிக் செய்து உணர்வுகளைப் பகிரலாம். இது முதற்கட்டமாக அயர்லாந்து மற்றும் ஸ்பெயின் நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அந்த நாடுகளின் பயனாளர்களிடம் அனுபவத்தைக் கேட்டறிந்த பின்னர், உலகம் முழு வதும் அறி முகம் செய்யப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகி யுள்ளது.

## தகவல்களைத் திருடும் அப்பிளிக்கேஷன்கள்




ஸ்மார்ட் தொழில்நுட்பத்தைக் கொண்ட மொபைல் சாதனங்களுக்கான பல்வேறு இலவச அப்பிளிக்கேஷன்கள் காணப்படுகின்றமை அறிந்ததே. இவற்றில் அதிகளவில் விளம்பரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். இவ்வாறான விளம்பரங்களைத் தடைசெய்வதற்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட மென்பொருள்களின் ஊடாக மொபைல் சாதனங்கள் இரகசியமாகக் கண்காணிக்கப்படுவதுடன், தகவல்கள் திருடப்படுவதை அப்பிள் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. இதனால் இவ்வாறான அப்பிளிக்கேஷன்களை தனது அப்ஸ் ஸ்டோர் தளத்திலிருந்து அதிரடியாக நீக்கியுள்ளது. இதனை அப்பிள் நிறுவனமே உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. எனினும் இவ்வாறு நீக்கப்பட்ட சில அப்பிளிக்கேஷன்களை அப்ஸ் ஸ்டோர் தளத்தில் மீண்டும் பதிவேற்றம் செய்வதற்கான விண்ணப்பங்கள் மீளவும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பனம் விதை நடுகை விழா

யாழ்ப்பாணம்,ஒக்.12
பனை அபிவிருத்திச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட பனம் விதை நடுகையின் ஆரம்ப விழா இன்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. மருதங்கேணி மாமுனையில் உள்ள சபையின் பனை மாதிரிப் பண்ணையில் இந்தப் பனம் விதை நடுகையின் ஆரம்ப விழா இடம்பெறும். சபையின் தலைவர் எஸ்.கோகுலதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்தப் பனம் விதை நடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார். இந்தப் பனை மாதிரிப் பண்ணையில் சுமார் 50 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் கோகுலதாசன் தெரிவித்துள்ளார். பனம் விதைநடுகையின் ஆரம்பவிழாவுக்கு பொது அமைப்பினர், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு இந்த நடுகைத் திட்டத்தை வெற்றி பெறுவதற்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. இந்தப் பனம் விதைகளைக் குடாநாடு பூராகவும் நடுகை செய்வதற்கும் முழுமையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-17-422)

## மதுபோதையில் இடையூறு; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,ஒக்.12
மதுபோதையில் பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட நாவற்குழி கோவிலாக் கண்டி வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டுள்ளது. சாவகச்சேரி, பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 8 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப் பட்டது. வழக்கை விசாரித்த நீதி வான் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-9)

## விவசாயிகளுக்கு உர விநியோகம்

வரணி, ஒக்.12
வரணி வடக்கு விவசாயிகளுக்குரிய மானிய உரவிநியோகம் இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் கா[illegible] தொடக்கம் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்[illegible] விவசாயிகள் தவறாது தமக்குரிய உரவகைகளை பெற்றுக்கொள்ளு மாறு சம்மேளனச் செயலாளர் க.தியாகராசா அறிவித்துள்ளார். (ஐ-122)

# கலாசார மையத்துக்கு அடிக்கல் நாட்டு விழா



வலி வடக்கு,ஒக்.12
அரசின் நூறு நாள் வேலத்திட்ட நிதிப்பங்களிப்பில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் கலாசார மையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று இடம்பெற்றது. [illegible] மாவிட்டபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் கலாசார மண்டபத்துக்கான அடிக்கல்லை யாழ் மாவட்ட அரச அதிபர் நாக லிங்கம் வேதநாயகன் நாட்டி வைத்தார். வலி. வடக்கு பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயப் பிரதம குரு ச. இரத்தினசபாபதிக்குருக்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலர் எஸ்.பிரபாகரமூர்த்தி. மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் க.பேரின்பநாயகம் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.
அரசின் நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 25 லட்சம் ரூபா நிதியில் கலாசார மண்டபத்துக்கான முதற் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக் பார்த்துக் குழந்தையை கவனிக்க மறந்த தாய்க்கு சிறை

லண்டன், ஒக்.12

தனது குழந்தை நீரில் மூழ்கிய போது அதனைக் கவனிக்காமல் தனது அலைபேசியில் 'பேஸ்புக்' பார்த்துக் கொண்டிருந்த பெண்ணுக்கு 5 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் கிழக்கு யார்ஷயரில் வசிக்கும் 31 வயதான கிளாரி பார்னெட் என்ற அந்த பெண்ணின் இரண்டு வயது மகன் யோசுவா பார்னெட் தனது வீட்டுத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது எதிர்பாராதவிதமாகக் குளத்துக்குள் விழுந்துள்ளான். ஆனால் அதனைச் சற்றும் கவனிக்காத பார்னெட் தனது முழுக்கவனத்தையும் 'பேஸ்புக்'கில் செலுத்தியுள்ளார்.

பின்னர் தனது மகனைத் தேடியபோது அவன் குளத்தினுள் விழுந்தது தெரியவரவே உடனடியாக அவனை மீட்டு மருத்துவ மனையில் சேர்த்துள்ளார். ஆனால் அன்றைய தினமே குழந்தை மருத்துவ மனையில் பரிதாபமாக உயிரிழந்தது. இந்தச் சம்பவம் 2014ஆம் ஆண்டு நடந்துள்ளது.

இது தொடர்பான வழக்கு நீதிமன்றில் நடந்து வந்தது. தற்போது வழக்கு விசாரணைகள் முடிவுற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. குழந்தையைக் கவனிக்கத் தவறியமைக்காக கிளாரி பார்னெட்டுக்கு 5 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள நீதிமன்றம், கிளாரியை நம்பி எந்தக் குழந்தை ஒப்படைக்கப்பட்டாலும் அக்குழந்தைக்கு அது ஆபத்துதான் என தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஒருமுறை யோசுவா வீதியில் விளையாடிக் கொண்டிருந்த போது அதனைக் கவனிக்கக் கிளாரி தவறியுள்ளார். அப்போது ஒரு காரில் அடிபடுவதிலிருந்து யோசுவா அக்கம்பக்கத்தினர் உதவியுடன் தப்பியுள்ளார். இந்தத் தவறையும் கிளாரி ஒப்புக் கொண்டுள்ளார். (ற)



துருக்கித் தலைநகர் அங்காராவின் மத்திய பகுதியில் உள்ள ரயில் நிலையம் அருகே இடம்பெற்ற ம
97 பேர் உயிரிழந்துள்ளனர். 120 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். அங்காரா நகரின் ம
நிலையத்துக்கு அருகிலுள்ள வீதியில் நேற்றுமுன்தினம் காலை அமைதிப் பேரணி ஒன்று ந
பேரணிக்காக மக்கள் திரண்டு நின்றுகொண்டிருந்தனர். அப்போது அந்தப் பகுதியில் இரு மனித
இடம்பெற்றுள்ளன.





தமது நாட்டு வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக சீனாவில் கொம்யூனிஸ்ட் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. 3 லட்சம் சதுர அடி பரப்புக் கொண்ட சவுத் லேக் ஹப்பினஸ் வாட்டர் பார்க்கில் இது அமைக்கப்பட்டுள்ளது. இந்த பூங்காவில் சீனாவின் கொம்யூனிஸ்ட் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அம்சங்கள் உள்ளடங்கப்பட்டுள்ளன. இளையோரைக் கவரக்கூடிய விதத்தில் கட்சியின் வரலாறுகள், தலைவர்களின் , படங்கள் , சின்னங்கள் என்பன பூங்காவில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. (ற-ரி4)

## ஆப்கனில் கார்க்குண்டு தாக்குதல்

காபூல், ஒக்.12

ஆப்கன் தலைநகர் காபூலில் நேற்று ராணுவத்தின் கவச வாகனம் மீது தீவிரவாதிகள் கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதில் 3 பேர் காயமடைந்துள்ளனர் என்று காபூல் பொலிஸ் தலைமை அதிகாரி தெரிவித்தார்.

தாக்குதலுக்குள்ளான ராணுவத்தின் கவச வாகனம் அமெரிக்காவின் கவச வாகனம் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகள் பெறுப்பேற்றுள்ளனர். (ற)

# அமெரிக்காவின் வ குடியேற்றவாசிகளே

### வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி

வொஷிங்டன், ஒக்.12

அமெரிக்காவின் இன்றைய வளர்ச்சி அங்கு குடியேறி யவர்களால் மட்டுமே சாத்தியமாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார் அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி.

வேறு நாடுகளில் இருந்து வந்து குடியமர்ந்தவர்களால் மட்டுமே அமெரிக்கா ஸ்திரத்தன்மை கொண்ட நாடாக விளங்குகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். வொஷிங்டனில் நடைபெற்ற குஹோ பல் டயோஸ் போரா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:-

வேறு நாடுகளில் இருந்து அமெரிக்காவில் குடியமர்ந்தவர்களால்தான் நாடு ஸ்திரத்தன்மை கொண்டதாக மாறியுள்ளது. அடுத்த ஆண்டுக்

# ஆஸ்திரேலிய பண்பாடுகள் பிடிக்காதவர்கள் தாராளமாக நாட்டிலிருந்து வெளியேறலாம்

### அந்த நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு

மெல்பேர்ன், ஒக்.12

ஆஸ்திரேலியாவின் பண்பாடு பிடிக்காதவர்கள் நாட்டை விட்டு வெளியேறலாம் என அந்த நாட்டுப் பிரதமர் மால்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார்.



கடந்த வாரம் 15 வயதுச் சிறுவனான ஃபர்ஹாத் ஜாபர் தீவிரவாத நோக்கில் பொலிஸ் அதிகாரியான நிதிப் பிரிவில் பணியாற்றி வந்த கர்டிஸ் செங் என்பவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மக்கள் மதவாதம், தீவிரவாதத்திலிருந்து விலகியிருக்க வேண்டும். இங்குள்ள யாருக் காவது ஆஸ்திரேலியாவின் பண்பாடு பிடிக்காவிட்டால் அவர்கள் நாட்டை விட்டுத் தாராளமாக வெளியேறலாம். - என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அவர்கள் தொடர்ந்து இங்கேயே தங்கிருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. அவர்களுக்காகப் பரந்த உலகம் காத்துக் கொண்டிருக்கிறது. மதத்தின் பெயரால் தவறாக வழி நடத்தப்பட்ட 15 வயதுச் சிறுவன் பொலிஸ் அதிகாரியை சுட்டுக் கொன்றுள்ளார்.

இதுபோன்ற தீவிரவாதப் போக்கை அனைத்து ஆஸ்திரேலியர்களும் ஒற்றுமையுடன் எதிர்கொள்ள வேண்டும். பிற இனத்தினர் மீது வெறுப்புக் கொள்வதோ, மதவாதத்தில் ஈடுபடுவதோ ஆஸ்திரேலியாவின் அடிப்படைத் தன்மையை அழித்து விடும். - என்றார். (ற)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ற மனிதக் குண்டுத் தாக்குதலில்
ன் மத்திய பகுதியில் உள்ள ரயில்
நடைபெற இருந்தது. குறித்த
த வெடி குண்டுத் தாக்குதல்கள் (ற)

# சிரியாவில் ரஷ்யா கடும் தாக்குதல்

## 300க்கும் அதிகமான ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என அறிவிப்பு

மொஸ்கோ, ஒக்.12

சிரிய ஜனாதிபதி பஸர் அல் அசாத்துக்கு ஆதரவாக – ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது ரஷ்யா கடும் வான் வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. அதில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் 60 தளங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் 300க்கும் அதிகமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

தினமும் 10 ஐ.எஸ். நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது என்று ரஷ்யா கூறியிருந்த நிலையில் தற்போது தாக்குதல்கள் இன்னமும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 4 ஆண்டுகளாக பஸர் அல் அசாத் தலைமையிலான அரசைப் பதவியில் இருந்து இறக்கும் நோக்கத்தில் அவரது அதி ருப்தியாளர்கள் தொடங்கிய போராட்டம் பின்னர் உள்நாட்டுப் போராக உருவெடுத்தது. அதையடுத்து சிரியா மற்றும் ஈராக்கில் முக்கிய நகரங்களைக் கைப்பற்றியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் அங்கு பல அட்டுழியங்களை அரங்கேற்றி வருகின்றனர். அதையடுத்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஐ.எஸ். நிலைகள் மீது வான்வழித் தாக்குல்களை நடத்தி வருகின்றன.

இந்தப் பின்னணியில் தற்போது அமெரிக்க கூட்டுப் படைகளுடன் சேராமல் ஜனாதிபதி பஸர் அல் அசாத்க்கு ஆதரவாக ரஷ்யா தனியாக தாக்குதலை தொடங்கியுள்ளது.

ரஷ்யாவின் தாக்குதல்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளை மட்டும் இலக்காகக் கொண்டு நடத்தப்படவில்லை என்றும், சிரிய ஜனா திபதிக்கு எதிரான கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்தும் நடத்தப்படுகின்றன என்றும் அமெரிக்காவும், நேட்டோ படைகளும் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றன. (ற)

# கட்டுக்கடங்காத காட்டுத் தீயால் குரங்குகளுக்கு ஆபத்து

லண்டன், ஒக்.12

இந்தோனேஷியாவில் பரவி வரும் கட்டுங்கடங்காத காட்டுத் தீயால் அந்தப் பிராந்தியங்களுக்கு அண்மையிலுள்ள மறுவாழ்வு மையத்தில் பராமரிக்கப்படும் மனிதக் குரங்குகளின் பாதுகாப்புக் கேள்விக் குறியாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுத் தீ பரவி வரும் சுமாத்ரா மற்றும் ஹலிமன்டன் பகுதிகளில் இருந்து 60 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்த மறுவாழ்வு மையத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மனிதக் குரங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்தோனேஷியாவில் பரவி வரும் காட்டுத் தீயால் அடர்த்தியான கரும் புகை இந்தோனேஷியாவின் பல்வேறு பகுதிகளிலும் மட்டுமன்றி, அண்மைய நாடுகளான மலேசியா, சிங்கப்பூர் போன்றவற்றிலும் பரவியுள்ளது. அதனால் அந்த நாடுகளில் உள்ள மக்கள் சுவாசப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள் ளனர்.

சுவாசக் கோளாறு காரணமாக 16 குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவில் இந்தோனேஷிய மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த புதன் கிழமை இக்காடுகளில் தீ வைத்திருப்பார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 240 நபர்களின் பெயர்ப் பட்டியலை இந்தோனேஷிய அரசு வெளியிட்டது. அதில் இந்தோனேஷியாவின் பிரபல தொழிலதிபர் ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தொடர்பான விசாரணைகளை இந்தோனேஷிய பொலிஸார் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். (ற)



# ...ளர்ச்சிக்கு ...காரணம்

...ரி தெரிவிப்பு



...குள் சிரிய நாட்டவர்கள் உட்பட ஒரு லட்சம் பேரை அமெரிக்காவில் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அமெரிக்கா புகலிடம் கோருவோரை வரவேற்கின்றது.- என்றார். (ற)

# சிலிண்டர் வெடித்ததில் சீனாவில் 17 பேர் சாவு

பீஜிங், ஒக்.12


சீனாவின் அன்ஹயி மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள ஜின்கு மாவட்டத்தில் உள்ள வூஹ நகரில் உள்ள உணவகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் எரிவாயு சிலிண்டர் வெடித்துச் சிதறியதில் 17 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ் விபத்தில் காயமடைந்த இருபதுக்கும் அதிகமானோர் அருகாமையில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த விபத்துக்கான உடனடிக் காரணம் என்ன என்பது தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ற)

## விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நிறம் மாறிய வெள்ளை மாளிகை



வொஷிங்டன், ஒக்.12

உலகம் முழுதும் ஆண்டுதோறும் ஒக்ரோபர் மாதம் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. அதை முன்னிட்டு மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக அமெரிக்காவின் வொஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகை இளஞ்சிவப்பு நிறத்துக்கு ஒளியூட்டப்பட்டுள்ளது. பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறு ஒளியூட்டப்பட்டுள்ளது.

இந்த நோய் குறித்து அந்த நாட்டின் தேசிய மார்பக புற்றுநோய் அமைப்பு தெரிவித்துள்ளதாவது:-

இந்த நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் முற்றிலும் குணப்படுத்த முடியும். அமெரிக்காவில் 8இல் ஒரு பெண்ணுக்கு மார்பகப் புற்றுநோய் இருக்கின்றது.

உயிர்கொல்லி நோயில் அமெரிக்காவில் இரண்டாவது பெரிய நோயாக மார்பகப் புற்றுநோய் கருதப்படுகின்றது. பெண்கள் ஆண்டுதோறும் மார்பகப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



மறைந்த பழம் பெரும் நகைச் சுவை நடிகை மனோரமாவின் உட லுக்கு அரசியல் தலைவர்களும், திரையுலகினரும், பொதுமக்களும் நேற்று அஞ்சலி செலுத்தினர். சென்னை தியாகராய நகரில் நீலகண்ட மேத்தா தெருவில் மனோரமாவின் இல்லத்தில் உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.



சர்வதேச பலூன் திருவிழா ஆல்பகர்கீயில் நடைபெற்றது. பல விதமான உருவங்களில் பலூன்கள் ஏற்றப்பட்டன. 9 நாள்கள் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. 1972ஆம் ஆண்டு 13 பலூன்களுடன் இந்தத் திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. தற்போது ஒருலட்சத்துக்கும் மேற்பட்ட பலூன்கள் பங்கு கொள்கின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் மறக்கப்பட முடியாத திரையுலகின் ஆச்சி மனோரமா

தொகுப்பு: சோபனா

தமிழ்த் திரையுலகினராலும், ரசிகர்களாலும் அன்போடு 'ஆச்சி' என்று அழைக்கப் பட்ட நடிகை மனோரமா, தமிழ்ப்பட உலகில் தனி முத்திரை பதித்தவர். ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்த பெருமை பெற்றவர். மூன்று தலை முறை நடிகர்களுடன் நடித்தவர். நாடகத்துறை, சின்னத்திரை, வெள்ளித்திரை என நடிப்பின் அனைத்துப் பிரிவுகளிலும் தனது பெயரை நிலை நாட்டியவர். இவர் நடிக்காத பாத் திரங்களே இல்லை எனக் கூறு மளவுக்கு நடிகை, அம்மா, ஆச்சி, வில்லி,



நகைச்சுவை, பாடல் என அனைத்துப் பாத் திரங்களிலும் கொடிகட்டிப் பறந்தவர். நடிப்பில் 50 வருடங்களைக் கடந்து 'பொன் விழா' கொண்டாடியவர். திருவாரூர் மாவட்டம் மன்னார் குடியில் 1937 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி காசி குலோகுடையார் ராமாமிர்தம் தம்பதிகளுக்கு மகளாக மனோ ரமா பிறந்தார். இவரது இயற்பெயர் கோபி சாந்தா. பெற்றோர் வைத்த பெயர் கோவிந்தம் மாள். பின்னர் இவரது குடும்பம் வறுமை காரணமாக காரைக்குடி அருகில் உள்ள பள்ளத்தூர் என்ற இடத்துக்கு குடி பெயர்ந்தது. மனோரமா தனது 12 வயதில் நாடகத்தில் நடிக்கத் தொடங்கினார். 'யார் மகன்' என்பது தான் இவரது முதல் நாடகம். 'அந்தமான் கைதி' என்ற நாடகம் இவர் நடித்ததில் புகழ்பெற்ற நாடகம்.

நாடகங்களில் நடிப்பு மட்டுமல்லாமல் பாட வும் தொடங்கினார். நாடக இயக்குநர் திரு வேங்கடம் என்பவர் இவருக்கு 'மனோ ரமா' என்று பெயர் வைத்தார். முன்னாள் முதல்வர் அண்ணாதுரை எழுதிய 'வேலைக் காரி' உள்ளிட்ட சில நாடகங்களில் அவருடன் மனோரமா நடித்துள் ளார். கருணாநிதி எழுதிய 'உதய சூரியன்' நாடகத்தில் கருணாநிதி கதாநாயகனாகவும், மனோரமா கதாநாயகி யாகவும் நடித்தனர். இவர் ஆயிரம் நாடகங் களுக்கு மேல் நடித்துள்ளார். நாடகத்தில் நடித்து வந்த மனோரமா 1958 இல் 'மாலை யிட்ட மங்கை' என்ற படத்தின் மூலம் வெள் ளித்திரையில் கால்பதித்தார். இவரை சினிமா வுக்கு அறிமுகப் படுத்தியவர் கண்ணதாசன். முதல் படத்தில் நகைச்சுவைப் பாத்திரத்தில் இவர் நடித்தார்.

ஆரம்பக்காலத்தில் நகைச்சுவை யில் மட்டுமே கவனம் செலுத்தினர். முன்னணி நகைச்சுவை நடிகர் நாகேஷ் – மனோரமா பல படங்களில் ஜோடியாக இணைந்து நகைச்சுவையில் கலக் கினர். இவர்கள் இருவரும் திரையில் தோன் றினாலே திரையரங்குகளில் சிரிப்பு மழை பொழிய ஆரம்பித்து விடும். அந்தளவுக்கு இருவரும் நகைச்சுவையில் கலக்கினர்.

'மகளே உன் சமத்து' என்ற படத்தில் முதன் முதலாகப் பாடினார் மனோரமா. தயாரிப் பாளர் குமார் என்பவர் இந்த வாய்ப்பை வழங்கினார். 'தாத்தா தாத்தா பிடி கொடு... இந்தத் தள்ளாத வய சில சடுகுடு' என்று அந்தப் பாடல் தொடங்கும். இருப்பினும் இவர் பாடிய 'வா வாத்தியாரே வூட் டான்ட' என்ற பாடல் மனோரமா வின் முதல் ஹிட் பாடலாக அமைந்தது. 'டில்லிக்கு ராஜாவானாலும் பாட்டி சொல்லைத் தட்டாதே', 'நாட்டு புற பாட்டு ஒன்னு...', 'மெட்ராச சுத்தி பாக்க போறேன்...', உள்ளிட்ட பல பாடல்களைப் பாடி யும் அவர் அசத்தியுள்ளார்.



மனோரமா தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி மற்றும் சிங்களம் என ஆறு மொழிப் படங்களில் நடித்துள்ளார். எவ்வளவு பக்க வசனம் என்றாலும் ஒரு முறை சொல் லிக்கொடுத்தாலே, நச்சென்று பேசிவிடக் கூடிய ஆற்றல் பெற்றவர். 'தில்லானா மோக னம்பாள்', மனோரமாவின் நடிப்பில் ஒரு மணி மகுடம். இந்தப் படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், நாட்டியப் பேரொளி பத்மினி ஆகியோருடன் மனோரமா நடித் தார். இந்தப்படத் தில் 'ஜில் ஜில் ரமாமணி' என்ற பாத்திரத்தில் வரும் மனோரமாவின் நடிப்பு அனைவரையும் கவர்ந்தது. டி.எஸ். பாலையா, சிவாஜி உள்ளிட்ட முன்னணி நடிகர்களுக்கு முன் நடிப்பதால் முதலில் இந்தப் படத்தில் நடிப்பதற்கு மனோரமா தயங்கியுள்ளார். பின்னர் இயக்குநர் தைரியம் ஊட்டி இவரை நடிக்க வைத்தார். 1989 ஆம் ஆண்டு 'புதிய பாதை' என்ற படத்தில் நடித்தற்காக, 'சிறந்த துணை நடிகைக்கான' தேசிய விருது மனோரமாவுக்கு வழங் கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு மத்திய அரசின் உயரிய விருதுகளுள் ஒன்றான 'பத்ம ஸ்ரீ' விருதை மனோரமா பெற்றார்.





தமிழக அரசின் 'கலைமாமணி' விருதையும் மனோரமா பெற்றுள்ளார். ஆச்சியின் நடிப்பை அங்கீகரிக்கும் விதமாக கலிபோர்னியா பல்கலைக்கழகம் இவருக்கு 'கௌரவ டாக்டர்' பட்டம் வழங்கியது. அதிக படத்தில் நடித் ததற்காக கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றார். தன்னுடைய முதல் திரைப்படத்துக் குப் பிறகும், பல நாடகங்களில் நடித்து வந்த அவர், 'மாலையிட்ட மங்கை','களத் தூர் கண்ணம்'மா', 'கொஞ்சும் குமரி', 'பாலும் பழமும்','பார் மகளே பார்', 'திருவிளையாடல்', 'அன்பே வா', 'தில்லானா மோகனாம்பாள்', 'சரஸ்வதி சபதம்', 'கந்தன் கருணை', 'எதிர் நீச்சல்','கலாட்டா கல்யாணம்', 'ஆயிரம் பொய்', 'பட்டிக்காடா பட்ட ணமா','காசேதான் கட வுளடா' 'புதிய பாதை', 'நெஞ் சில் ஓர் ஆலயம்','ரத்தத்திலகம்','கொஞ் சும் குமரி', 'அன்பே வா', 'எங்கள் தங்கம்',, 'அந்த மான் காதலி', 'வாழ நினைத்தால் வாழலாம்', 'என் கேள் விக்கு என்னபதில்', 'குப்பத்து ராஜா', 'பில்லா', 'காளி', 'தீ', 'வாழ்வே மாயம்', 'போக்கிரி ராஜா', 'தங்க மகன்', 'பாயும் புலி', '[illegible]சு', 'சம்சாரம் அது மின்சாரம்', 'நான் அடிமை இல்லை', 'அன்னை என் தெய்வம்','பேர் சொல்லும் பிள்ளை', 'உன் னால் முடியும் தம்பி','பாட்டி சொல்லத் தட் டாதே', 'இது நம்ம ஆளு', 'குரு சிஷ்யன்', 'அபூர்வ சகோதரர்கள்','நடிகன்', 'மன்னன்', 'எங்கிட்ட மோதாதே', 'மைக்கேல் மதன காமராஜன்', 'இதயம்', 'சின்னத் தம்பி', 'சின்னக் கவுண்டர்', 'சிங்கார வேலன்', 'அண்ணா மலை', 'எஜமான்', 'ஜென் டில்மேன்', 'வியட் நாம் காலனி', 'மே மாதம்', 'காத லன்', 'நந்தவனத் தேரு', 'நான் பெத்த மகனே', 'முத்துக் காளை', 'இந்தியன்', 'லவ் பேர்ட்ஸ்', 'அருணா சலம்','மறுமலர்ச்சி', 'புதிய பாதை', 'பாண்டவர் பூமி', 'மாயி', 'சாமி', 'பேரழகன்'. எனத் தொடர்ந்து பல வெற்றிப்படங்களில் நடித்து, தமிழ் சினிமாவில் தனக்கெனத் தனி இடம் பிடித்தார். நகைச்சுவைக் கதாபாத் திரங் களில் தனது திறனை வெளிப்படுத்திய இவர் ஆயிரத்து 200 திரைப் படங்களுக்கு மேல் நடித் துள்ளார். ஒரு சாதாரண மேடை நடி கையாகத்தன்னுடைய கலை யுலக வாழ்க்கை யைத் தொடங்கி, சினி மாவில் எம்.ஜி.ஆர், சிவாஜி என அன்றைய காலம் முதல் இன் றைய தலைமுறை வரை சுமார் 50 ஆண்டு களுக்கும் மேல் மனோரமா தமிழ்த் திரை யுலகை ஆட்சி செய் தார் என்று கூறினால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைகளில் வேறுபாடு வேண்டாம்

கடந்த வாரம் சுன்னாகம் நகரப் பகுதியில் அமைந்துள்ள பழக்கடை ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அங்கே மிகப்பருத்த காய்களைக் கொண்ட கப்பல் வாழைக்குலையொன்று தொங்கவிடப்பட்டிருந்தது. அதன் விலையைக் கேட்டபோது கிலோ 200 ரூபாவெனக் கடை உரிமையாளர் கூறினார். அது சற்று அதிகமாகவே எனக்குப் பட்டதால் பழத்தை வாங்காது சென்று விட்டேன்.

பின்னர் வேறொரு பழக்கடைக்குச் சென்றேன். அங்கும் கப்பல் வாழைக்குலையொன்று தொங்கிக் கொண்டிருந்தது. விலையைக் கேட்டபோது கிலோ 130 ரூபாவெனப் பதில் வந்தது. கதலிப் பழம் கிலோ 100 ரூபாவெனவும் தெரிவிக்கப்பட்டது. நான் கப்பல் பழத்தையே வாங்கிச் சென்றேன். அந்தப் பழங்கள் உருவத்தில் சற்று சிறியனவாக இருந்தாலும் சுவையில் குறையொன்றும் இருக்கவில்லை.

ஒரு கிலோ பழத்துக்கு 70 ரூபா வித்தியாசம் காணப்பட்டது. சிலவேளை முன்னைய கடை உரிமையாளர் அதிக விலை கொடுத்தும் அந்த வாழைக் குலையை வாங்கியிருக்கலாம். ஆனால் நுகர்வோரைப் பற்றியும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இவ்வாறுதான் சுன்னாகம் சந்தையிலும் வேறுபட்ட விலைகளில் மரக்கறி வகைகள் விற்பனை செய்வதைக் காண முடிகின்றது. இதனால் ஒவ்வொரு இடமாக விலைகளைக் கேட்டு மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. வியாபாரிகள் ஒரே சீராக விலைகளை நிர்ணயம் செய்தால் நுகர்வோர் சிரமம் இல்லாமல் பொருள்களைக் கொள்வனவு செய்யமுடியும்.

*பா.தவமணி, சுன்னாகம்*

# பயணிகள் சிந்திப்பார்களா?

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாகம் நோக்கி மினிபஸ் ஒன்றில் பயணம் செய்தேன். பஸ் சுன்னாகத்தை அடைந்தது. அப்போது அங்கு பஸ்சுக்குக் காத்திருந்தவர்கள். இடிபட்டுக் கொண்டு பஸ்சினுள் ஏறினார்கள். ஆனால் ஏறியவர்கள் பஸ்சின் பின்புறம்செல்லாமல் முன் பக்கத்திலேயே அடைபட்டுக் கொண்டு நின்றனர். பஸ்சின் நடத்துநர் பின்னுக்குச் செல்லுமாறு பல தடவைகள் கூறியபோதிலும் அவர்கள் செவி மடுக்கவில்லை. ஆனால் பஸ்சின் பின்புறத்தில் நிறையவே இடம் இருந்தது.

நான் இறங்குகின்ற இடமும் வந்தது. ஆனால் இறங்க முடியவில்லை. பஸ்சின் முன்பகுதியில் நின்றவர்கள் இடிபட்டுக் கொண்டு நின்றதால் பலத்த சிரமத்தின் மத்தியின் கீழே இறங்க முடிந்தது. இதில் எனது ஒரு செருப்புத் தவறிவிட்டது. அதைத் தேடிக் கண்டுபிடிப்பதில் நான் பட்டபாடு அந்த இறைவனுக்குத்தான் தெரியும்.

பயணிகள் பஸ்களில் பயணத்தை மேற்கொள்ளும் போது சிறிது பொது அறிவையும் பயன்படுத்த வேண்டும். மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு நடந்து




கொள்ளப் பழகுதல் வேண்டும். இவர்கள் இவ்வாறு நடந்து கொள்ளாதுவிட்டால் பஸ் நடத்துனர் கண்டிக் கவே செய்வார். பின்னர் அவர் மீது குற்றம் சுமத்து வதில் பயனொன்றும் இல்லை. பயணிகள் சிந்திப் பார்களா?

*ம.லலிதாதேவி, மல்லாகம்*

# தமிழை வளமாக வளருங்கள்

தமிழ் மொழியில் திருமணம் இடம்பெற வேண்டும் என்ற தலைப்பில் கடந்த மாதம் 22 ஆம் திகதி அன்று உதயனில் வெளிவந்த கட்டுரையை வாசித்தோம். சிந்திக்கத்தக்கதாக இருந்தது. தமிழ்மொழியின் தொன்மையை, சிறப்பை மிகவும் நன்றாகவே சங்கத்தினர் குறிப்பிட்டிருந்தனர். சங்கத்தமிழ் வளர்ந்த வரலாற்றைத்தவிர முன்னாள் தமிழ்ச் சங்கத்திலே விவாதத்தின் போது சங்கப் பலகையே நீண்டு கற்றோர்க்கு இடமளித்ததாக வரலாறு. கட்டுரையில் இன்னோர் மொழியை, இனத்தை அவமரியாதையாகக் குறிப்பிட்டிருப்பது ஏற்புடையதாக இல்லை.


தமிழ்ச்சங்கம் விரும்பியவாறு எந்தச் சடங்கையும் செய்யலாம். ஆனால் கட்டாயப்படுத்துவதாக அமையாமல், மதமாற்ற நிகழ்வு போலவும் அமையாதிருந்தால் நல்லதே. கோழி முட்டையிடுவதும் மாடு கருத்தரிப்பதும் எந்த மொழிச் சிறப்பாலும் அல்ல. விலங்குகளுக்கும் மனிதனுக்கும் இயற்கையான உணர்ச்சியின் பகிர்வே அது. கௌரவமான தமிழ்ச்சங்கத்திலிருந்து சிறுபிள்ளைத்தனமான கூற்றுக்கள் வெளிவருவது அழகல்ல. சங்கம் விரும்பினால் கோயில் விழாக்கள் சடங்குகள் எல்லாவற்றையும் தமிழிலேயே செய்யட்டும். ஆனால்(அதற்கும் இறையருள் முன்னிற்க வேண்டும்) இன்னோர் மொழியை இனத்தை தரக்குறைவாகக் கூறியிருப்பது சால்புடையதல்ல. தலைவர் எத்தனை திருமணங்கள் வேண்டுமானாலும் செய்து வைக்கட்டும். தமிழில் சடங்குகள் செய்து வைத்துவிட்டால் மட்டும் சொர்க்கத்தின் கதவுகள் திறந்துவிடுமா? அவரவர் தலைவிதிப்படி தாரமும் குருவும் தன் தலை எழுத்து என்னும் ஆன்றோர் வார்த்தைக்கு மதிப்புக் கொடுங்கள்.

ஆனந்தநகரில் நடைபெற்ற திருமணத்தின்போது மணமக்களின் பெற்றோரை தம்பதியினர் என்று சொல்ல மனங்கூசிய சங்கம் இணையினர் எனும் புதிய சொல்லைப் பயன்படுத்தியதும் அழகுதான். ஏன் மண மகளின் பெயரை மட்டும் யினோயினி என கருத்துப்புரியாத தமிழில் அழைத்திருப்பது நன்றாக இருக்கின்றதா?

மேலும் மாதம் மும்மாரி பெய்த இந்தத் தமிழ் நாட்டில் மாதமும் மாறிப் பெய்வது இந்தவித இயற்கையின் மாற்றமே. வான்முகில் வழாது பெய்க என்ற அழகுத்தமிழை அழகுறத் தமிழில் தினமும் பக்தியுடன் பாடுங்கள் மழை மட்டுமல்ல. அரச நீதியும் செழிப்படையும். இதையே தான் வடமொழியிலும் அவர்கள் சொல்கின்றார்கள். (கருத்துப் புரியாமல் யாரும் எதையும் செய்வதில்லை) எனவே இது வரை காலமும் தவறாது பெய்த மழை இனிமேலும் பொழியும், நாடு சிறக்கும் என்ற நம்பிக்கையுடன் வாழுங்கள். தமிழை வளமாக வளருங்கள்.

*ஓர் அன்பர்,வவுனியா*

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# பாலியல் குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும்

போர் முடிவடைந்த கடந்த 6 அண்டு காலப் பகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகள் எங்கும் ஆமை வேகத்திலான மீள் குடியேற்றங்கள், வீட்டுத் திட்டங்கள் என்பன வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளான முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போது வீட்டுத்திட்டங்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. இவ்வீட்டுத் திட்டங்கள் போரின் போது அதிகமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கானதாகவும் கணவனை இழந்து பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்காகவும் இந்திய அரசு உட்படபல அமைப்புக்களால் வழங்கப்பட்டுவருகின்றன.

தமது கணவனை இழந்த போதும் வாழ்க்கையில் சோர்ந்து விடாது தங்களது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு வாழும் எம் குலப் பெண்கள் போற்றபட வேண்டியவர்கள். கைகள் கால்கள் இருந்தும் பிச்சை எடுத்து வாழும் ஒரு சிலரின் மத்தியில் தமது உடலை வருத்தி ஒரு வேளை உணவுக்காக குறைந்தளவு வருமானம் என்று கூட எண்ணாது அதிலேயே தங்களது குடும்பப் பொருளாதாரத்தைப் பூர்த்தி செய்து தடைகளைத் தாண்டிக்கொண்டிருக்கும் எமது உடன் பிறவாத சகோதரிகளுக்குத் தற்போது வேறு ஒரு வகையான பிரச்சினை சூழ்ந்திருப்து எவராலும் ஏற்றுகொள்ள முடியாத ஒன்று.

அதுவே பாலியல் இலஞ்சம். அண்மையில்; கிளிநொச்சி, முழங்காவில் பிரதேசங்களில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்திய வீட்டுத்திட்டத்தின் போது பயனாளிகளான போரால் பாதிக்கப்பட்டு குடும்பத்தை தலைமை தாங்கும் இளம் பெண்களை மிரட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் பாலியல் இலஞ்சம் கோரியதாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் இலங்கை செஞ்சிலுவை சங்க கொழும்பு தலைமைக் காரியாலயத்தின் கிளிநொச்சிக் கிளைக்கு, முறைப்பாடுகள் வழங்கியுள்ளனர் என்ற குற்றச்சாட்டு எம் அனைவர் மத்தியிலும்பல்வேறு கேள்விகளை எழுப்பியது.

கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்ட இந்திய அரசின் வீட்டுத்திட்டத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்று வீட்டுத்திட்டப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்கான பண விடுவிப்பை வழங்கும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தொழில் நுட்ப அதிகாரிகளே பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோருவதாகவும் பாதிக்கப்பட்ட பெண்களால் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவை சங்கக் கிளைக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

ஆனால் இது தொடர்பாக எவராவது கைதுசெய்யப்பட்டார்களா? அரச அதிகாரிகளும், பொலிஸாரும் இதுதொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கான காரணம் என்ன.? போன்ற கேள்விகள் மக்கள் மத்தியிலே பரவலாகப் பேசப்படுகின்றது.

கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் கிராம அலுவலகர் ஒருவர் நிரந்தர வதிவிட சான்றிதழ் பெற்றுத் தருவதற்கு ஒரு நபரிடம் 25 ஆயிரம் ரூபா இலஞ்சம் தருமாறு கோரியுள்ளார் என்று நேற்று பத்திரிகையிலே செய்திகள் வெளிவந்தன. அந்தக் கிராம சேவகர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டார். அதே போன்று தெற்கிலே பாடசாலை ஒன்றில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக ஒரு தாய் சென்ற போது அப் பாடசாலையின் அதிபர் பாலியல் இலஞ்சம் கோரினார் அவரும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டார். ஆனால் வடக்கிலே அதுவும் தங்களது வாழ்க்கைகளை மீள ஆரம்பிக்கும் எமது பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரும் உத்தியோகத்தர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை. வடக்கிலே இது திட்டமிட்டு நடை பெறுகின்றதா?.

இப் பாலியல் இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் உறுதிப்படுத்தப்பட்டது கிளிநொச்சியிலேயே. அதுவும் பாதிக்கப்பட்ட பெண்ணே அந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளார். இந்த நிலையில் இன்றும் அந்த அதிகாரிகள் கைது செய்யப்பட வில்லை. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் அதிகாரிகளே இதற்குப் பொறுப்பானவர்கள். அவர்களே உடனடியாக நடவடிக்கைள் எடுக்க வேண்டும்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இனிமேலும் சுமத்தப்படாமல் இருக்க வேண்டும் என்றால் இக் குற்றச்சாட்டு யார் மீது சுமத்தப்பட்டுள்ளதோ அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அரச அதிகாரிகளின் கடமையாகும். அப்போது தான் மீளவும் வாழ துடிக்கும் எம் இனம் நிம்மதியாக வாழும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லிணக்கம் வெளிப்பட கைதிகளை விடுவியுங்கள்

கடந்த ஐந்தாம் திகதி வட்டக்கச்சிக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கோவிந்தன் கடைச் சந்திப் பகுதியில் வயலில் இறங்கி, ஒரு கைதேர்ந்த விவசாயியைப் போன்று, உழவு இயந்திரத்தை இலாவகமாகக் கையாண்டு விவசாயத்தை ஆரம்பித்து வைத்த காட்சி, அந்தப் பகுதி மக்களை மட்டும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி விடவில்லை. அதனை பத்திரிகைகளிலும் ஏனைய ஊடகங்களிலும் பார்த்த ஏனைய மக்களையும் திளைக்க வைத்தது.

கிராமிய வாழ்க்கையும் அதனோடு இணைந்த விவசாயத் தொழிலும், விவசாயக் குடும்பத்தில் இருந்து வந்தவரான ஜனாதிபதிக்கு புதியதுமல்ல ஒப்புக்கு வயலில் இறங்கி, நடித்துக் காட்ட வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை.

நியூயோர்க்கில் அதிபர் ஒபாமா அளித்த விருந்தில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா முதலிய உலகத் தலைவர்களுடன் சரிசமமாக அமர்ந்து விருந்துண்டவரான அதே ஜனாதிபதிதான், கிளிநொச்சியில் விவசாயிகளுடன் வயலில் இறங்கி உழவு இயந்திரத்தைப் பிடித்து உழுது, மக்கள் மனங்களையும் கொள்ளை கொண்டவர்.

அந்த நிகழ்வில் ஜனாதிபதி பேசுகையில், இன்னும் மூன்றாண்டுகளில் விவசாயத்தில் நாட்டைத் தன்னிறைவு காணச் செய்ய வேண்டும் என்ற தமது அபரிமிதமான ஆசையையும் வெளியிட்டிருந்தார். அதோடு முடியவில்லை. இதுவரை காலமும் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து வந்துள்ள 575 ஏக்கர் நிலத்தையும் அதன் உரிமையாளர்களிடம் கையளித்துள்ளார். அதில் பரவிப்பாஞ்சான் பகுதியில் 437 ஏக்கர் காணியும், முல்லைத்தீவில் 139 ஏக்கர் காணியும் அடங்கும். இந்தக் காணிகள் தொடர்பான பத்திரங்கள், அடையாளமாக ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டு; ஏனையவர்களுக்கு மாவட்டச் செயலகங்களில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பல அமைச்சர்கள், மாகாண முதலமைச்சர் மற்றும் பிரதேச சபை, மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திருந் தார்கள்.

தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவது தொடர்பாக ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு முதற்கொண்டு, அனைத்துலகமும், பல்வேறு தரப்பினரும் கடுமையாக வற்புறுத்தி வரும் நிலையில், அந்தத் திசை நோக்கிய ஒரு செயலாக வட்டக்கச்சியில் ஜனாதிபதியும், ஏனையவர்களும் மேற்கொண்ட செயற்பாட்டைக் கருதவேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்ப்பாரானால், அது வரவேற்கப்பட வேண்டியது தான்.

ஆனால் எஞ்சியிருக்கும் காணிகள் பற்றி ஜனாதிபதியோ, அமைச்சர்களோ வாய் திறக்காமல் இருப்பது தமிழ் மக்களை மனங்கோன வைத்துள்ளது. இதற்கிடையில் ஆங்காங்கே புதிதாகக் காணிகளைப் பிடிக்கும் எத்தனங்கள் நடைபெறுவதும் அவைகளைக் காணி உரிமையாளர்கள் தலையிட்டு, போராட்டம் நடத்தி நிறுத்த வேண்டிய நிலைமைகள் தொடரவே செய்கின்றன. ஒன்றில் இராணுவத்துக்கு அரசும், அதிகாரிகளும் பயந்து கொண்டிருக்கிறார்கள் அல்லது அதனால் இராணுவத்துக்குக் கட்டளைகளை இடுவதற்கு அஞ்சுகிறார்கள் அல்லது இராணுவம் காணிகளை விடுவிக்க கண்டிப்புடன் மறுத்து வருகின்றது என்பதே அர்த்தம். எதுவானாலும் ஒரு கால வரையறையை நிர்ணயிப்பதும் அதற்குள் மக்களின் காணிகளை அவர்களிடம் ஒப்படைப்பதும், அரசின் கட்டாய கடமை. அதுவே நல்லிணக்கத்துக்கான முதற் பணியாக இருக்க முடியும்.

இது தவிர, நாட்டிலுள்ள சிறைகளில் பலகாலமாக நிர்க்கதிக்கு உள்ளாகி இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு அவர்களை விடுவிக்க ஆவன செய்ய வேண்டியதும் அரசின் கடமையாகும். பல்வேறு சிறைகளிலும் வாடிக்கொண்டிருக்கும் 178 கைதிகள் இன்று (திங்கள்) முதல் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக, அறிவித்திருப்பது அரசின் நல்லாட்சி என்ற மந்திரத்தைப் புதைகுழிக்குள் போடுகிறது.

போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுப்பது ஒருபுறம் இருக்க, தேசிய நல்லிணக்கம் தொடர்பான இந்தச் செயற்பாடுகளில் அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். அது அவசியமும் அவசரமும் ஆகும்.

அதனாலேயே மைத்திரி - ரணில் இணக்க ஆட்சியைப் பதவியில் அமர்த்திய தமிழ் பேசும் மக்களின் நியாயமான எதிர்பார்ப்புக்களில் அரசு கவனம் செலுத்த வேண்டிய தருணம் இது என்பதை இங்கே அழுத்திச் சுட்டிக் காட்டுகின்றோம்.

# எதிர்க் கட்சித் தலைவரின் நோக்கம்தான் என்ன?

மு.ஈழத்தமிழ்மணி



எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டபின்னர் யாழ்ப்பாணத்துக்கு முதன் முதலாக வருகை தந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தன் குடாநாட்டின் பல இடங்களுக்கும் சென்றிருந்தார். அவர் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்ற முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். பின்னர் வலி. வடக்குப் பகுதிக்குச் சென்றதுடன் முக்கிய ஆலயங்களையும் தரிசித்துவிட்டுச் சென்றிருந்தார். இறுதியாக உதயன் பத்திரிகைக்கு நேர் காணல் ஒன்றையும் நடத்தியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் இன்னுமொரு கருத்தையும் கூறியிருந்தார்.

வன்முறையின் காரணமாகவே தமிழினத்துக்குப் பெரும் அழிவு ஏற் பட்டது. நாங்கள் ஏன் வன்முறையைப் பின்பற்றினோம் என்ற பெரும் கேள்வி இன்று வரைக்கும் இருந்து கொண்டுதான் இருக்கின்றது. வன்முறையைக் கையாண்டதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம். அதில் சில வற்றை நியாயப்படுத்துவதாகவும் இருக்கலாம். ஆனாலும் வன் முறையை நாம் ஏன் தேர்ந்தெடுத்தோம் என்ற கேள்வி இன்னமும் உள்ளது.

அவரது கருத்து விடுதலைக்காகப் போராடிய விடுதலைப் புலிகள் அமைப்பை மறைமுகமாகக் குற்றம் சாட்டுவதாகவே இருக்கின்றதா என்று எண்ணத்தோன்றுகின்றது.

தமிழினத்தின் விடுதலைக்காக 30 ஆண்டுகளாக தமிழரசுக்கட்சி அகிம்சை வழியில் போராடியிருந்தது. அந்தப் போராட்டங்களி னால் தமிழினத்தின் விடுதலையை அடைய முடியவில்லை என்பது சிங்கள தேசத்திடம் நன்கு கற்றறிந்து கொண்ட பாடமாகும். சிங்கள அரசுகள் ஈழத் தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு எந்தவொரு கால கட்டத்திலும் முன்வரவில்லை என்பது உண்மை. 1972 ஆம் ஆண்டு மே மாதம் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய முக் கூட்டு முன்னணி அரசானது புதிய அரசியலமைப்பை உருவாக்கி தமிழினத்தின் உரிமைகளைப் பறித்தது.

1970 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தமிழ் மாணவர்களின் மீதான உயர் கல்வியில் திட்டமிட்ட தரப்படுத்தலைக் கொண்டு வந்து அவர்களின் பல்கலைக்கழக நுழைவைக் கட்டுப்படுத்தியது. இப்படிப்பட்ட பிரச்சினைகளே தமிழர்களின் பிரச்சினைகள் மோசமடையக் காரணமாகின. அந்தக் காலகட்டத்தில் இரா.சம்பந்தன் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்ட ணியில் அங்கம் வகித்திருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கவில்லை.

1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதி தமிழ் மக்களிடம் ஆணை கோரப்பட்டது. அதனைத் தமிழ் மக்கள் வழங்கியிருந்தனர். அகிம்சை வழியில் தமிழீழக் கொள்கைக் கான போராட்டத்தை இலகுவில் வென்றுவிட முடியாது என்பது அப்போதைய தமிழ்த்தரப்பினருக்குத் தெரிந்த விடயமாகும். தமிழ் மக்கள் வழங்கிய ஆணையினால் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு எதிர்க் கட்சித் தலைவர்பதவிகிடைக்கவழிகோலியது. தமிழர்களின் ஒற்றுமையையும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பலத்தையும் உடைப்பதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசு பல சதித் திட்டங்களைத் தீட்டியிருந்தது. அவை முடியாமல் போனது. அகிம்சை வழி மூலப் போராட்டங்கள் யாவும் ஜே.ஆர். அரசால் ஒடுக்கப்பட்டன. தமிழினம் அழிக்கப்படுகின்ற நிலைமையில் தமிழ் இளைஞர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை மீது நம்பிக்கையிழக்கத் தொடங்கினர். 1979 ஆம் ஆண்டு மே மாதத்துக்குள் தமிழீழம் கிடைக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்தில் முழக்க மிட்டிருந்தார். ஜே.ஆர். அரசு கொடுத்திருந்த பச்சை ஜீப் வண்டிகளைக் கண்டு மயங்கி விட்ட இவர்களால் எப்படித் தமிழீழம் கிடைக்கும் என விரக்தியடைந்த தமிழ் இளைஞர்கள் மறை முகமாக விடுதலையை வென்றெடுக்கப் போராட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

சிங்கள அரசானது எக்காலத்திலும் தமிழினத்துக்கான எந்தவொரு தீர்வையும் தராது. எம் இனத்தை அழிப்பதுவும் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதுமே அவர்களின் குறிக்கோளாக இருந்தது. இது தமிழ் இளைஞர்களால் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டது.

சிறிமாவோவின் அரசின் காலத்தில் தமிழ் இளைஞர்கள் சிங்கள அரசுப் படையினரால் வேட்டையாடப்பட்டனர். 42 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு இரண்டரை ஆண்டுகள் வரையில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர். இன்றைய தமிழரசுக் கட்சித் தலைவரான மாவை சேனாதிராசாவும் தடுத்து வைக்கப் பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு வராவார். தமிழ் இளைஞர்கள் போர்க்குணம் கொண்டவர்களாக மாறினர். 1975ஆம் ஆண்டு வரையில் சிங்கள அரசுப் படைகள் மீது மறைமுகத் தாக்குதலை மேற்கொண்ட உரும்பிராய் தியாகி சிவகுமாரன் படையினரிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் தன்னைத் தானே தற்கொலை செய்த முதற் போராளியானார்.

வன்முறைகளைச் சிங்கள அரசுகள் தமிழ் மக்கள்மீது பிரயோகித்ததேயன்றி தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்துக்கு வன்முறையைத் தேடிப் போகவேயில்லை. இளைஞர்கள் ஆயுதம் தூக்கிப் போராடுவதற்கு அப்போதைய தமிழ்த் தலைமையும் முக்கிய காரணமாகும். தமிழ்த் தலைமை தமிழீழக் கொள்கைக்கான போராட்டத்தை அகிம்சை வழியில் போராட முடியாத நிலைக்கு வர அந்தப் போராட்டத்தை ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் பொறுப்பேற்றுக்கொண்டன. 1987 இலிருந்து ஒரேயொரு விடுதலை இயக்கமான விடுதலைப் புலிகள் அமைப்பே அந்தப் போராட்டத்தை இறுதி வரை முன்னெடுத்திருந்தது.

இந்த வரலாறுகளைச் சம்பந்தன் எதிர்க் கட்சித் தலைவராகப் பதவியேற்ற பின்னர் மறந்து விட்டாரா? சம்பந்தன் தெரிவித்த இந்தக் கருத்தினால் யாழ்ப்பாண மக்கள் எதிர்க் கட்சித் தலைவர் ஏன் இப்படிக் கூற வேண்டிய தேவையேற்பட்டது எனக் குழம்பியுள்ளனர். தேசிய அரசுக்கு மறைமுக மான ஆதரவை வழங்கிக் கொண்டு தமிழ்மக்களைக் குழப்புகின்ற கருத்துக்களை வெளியிடுவது ஆரோக்கியமான விடயமாக இருக்காது.

30 வருட கால ஆயுதப் போராட்டத்தினால் விடுதலைக்காக அர்ப்பணித்துப் போராடிய பல்லாயிரக் கணக்கான இளைஞர்களின் உயிர்த் தியாகங்களை சிறுமைப்படுத்துவதற்கான எண்ணம் கொண்டு இந்தக் கருத்தை எதற்காக யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்தார் என்பதே தமிழர்களிடையே உள்ள கேள்வியாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் மூன்று நாள் வரையில் தங்கியிருந்த எதிர்க் கட்சித் தலைவர் பத்திரிகையாளர்களின் பாராட்டைப் பெறுவதற்காக தமிழர்களுக்கான தற்போதைய பிரச்சினைகளையும் ஜெனிவாவில் இடம்பெற்ற போர்க்குற்றச் சாட்டுக்கள் சம்பந்தமாக விளக்கங்கள் கொடுத் திருக்கலாம். அதிலிருந்து தவறியது ஏன் என்ற கேள்வியும் எழாமலில்லை.

யாழ்ப்பாண சிவில் சமூகத்தின் பல பிரதிநிதிகளையும் தமிழரசுக்கட்சியினர் அழைத்து எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்து உரையாடல் ஒன்றை மேற்கொள்ளத் தவறிவிட்டனர். இது இடம் பெற்றிருந்தால் சிவில் சமூகம் பல பிரச்சினைகளைக் கூறுகின்ற வாய்ப்பு கிட்டியிருக்கும்.

வடபகுதித் தமிழ் மக்களால் இன்றும் மிகப் பெரியதொரு விடயமாகவே கருதப்படுவது வடக்கு மாகாண முதலமைச்சரான க.வி. விக்னேஸ்வரனை இரா.சம்பந்தன் சந்திக்கா மல் சென்றது ஏன்.....? என்பதுதான். முதலமைச்சரான விக்னேஸ்வரன் சுமார் ஒரு லட் சத்துக்கு அதிகமான விருப்பு வாக்குகளால் தேர்தலில் வெற்றிபெற்றவராவார். தமிழ் மக்களுக்கு அவரிடம் மிகுந்த மரியாதை யும் மதிப்பும் உ ண்டு. மூத்த அரசியல்வாதி, தமிழினத்தை இன்றைய நிலையில் வழிநடத்திச் செல்பவர், சாணக்கியவாதி என சிலாகிக்கப்படும் எதிர்க் கட்சித் தலைவரான சம்பந்தன் முதலமைச்சரை சந்திக்காமல் விட்டது என்பது நாகரிகமான விடயமல்ல.

வடக்கு முதல்வருடன் விரைவில் பேசுவோம் என்றும் சம்பந்தன் கூறியிருந்தாலும் மரியாதையின் நிமித்தமாவது முதலமைச்சரைச் சந்தித்திருக்கலாமல்லவா...... ரணிலுக்கும்..... சம்பந்தருக்கும் உள்ள வேறுபாடு யாது? தமிழ் மக்களின் பலகேள்விகளுக்குள்ளாகிய நிலையில் இரா. சம்பந்தன் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளமை சங்கேதங்களைத் தமிழ் மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்ட பின்னர்



## நிரபராதிகள் என விடுதலை

ஆங்கில மூலம்:
ருக்கிபெர்னாண்டோ
தமிழில்: ரஜீபன்

பயங்கரவாத தடுப்புச் சட்டங்களின் கீழ் பல வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தங்கள் பெற்றோர்களை விடுதலை செய்யுமாறு கோரி கடந்தவாரம் வடமாகாணத்தில் தமிழ்ச் சிறுவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கையின் முன்னணி ஊடகங்கள் எதிலும் இந்த விடயம் வெளியாகவில்லை, ஆனால் 1999 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிரான குண்டுத்தாக்குதல் சந்தேகநபர்களுக்கு 200, 300 வருடகால தண்டனை விதிக்கப்பட்டது குறித்து அனைத்து ஊடகங்களும் செய்தி வெளியிட்டிருந்தன.

### காலத்தை இழுத்தடித்த வழக்குகள்

இந்த இரு சந்தேகநபர்களும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ், செப்ரெம்பர் 18 ஆம் திகதி 2000 ஆம் ஆண்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர் ( இவர்கள் எப்போது கைதுசெய்யப்பட்டனர் என்பது தெரியவில்லை. இதற்கு முன்னரே கைதுசெய்யப்பட்டிருக்கலாம்.) இந்த வருட ஆரம்பத்தில் மிருசுவிலில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக இராணுவ அதிகாரியொருவருக்கு 15 வருடங்களுக்குப் பின்னர் தண்டனை வழங்கப்பட்டது.

இந்த இரு வழக்குகளிலும் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு 15–16 வருடங்கள் பிடித்துள்ளமை வெளிப்படையாகத் தெரிகின்றது. மேல் முறையீடு செய்யப்பட்டிருந்தால் இந்த வழக்குகள் மேலும் பல வருடங்கள் நீடித்திருக்கும்.

### குற்றவாளியில்லை என தீர்மானிப்பதற்கு 15 வருடங்கள்

முன்னாள் ஜனாதிபதி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்புபட்டிருந்தார் என்ற சந்தேகத்தின்கீழ் மூன்று பிள்ளைகளின் தாயான வசந்தி ரகுபதி சர்மா 2000ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் திகதி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். 15 வருடங்களுக்கு பின்னர் உயர் நீதிமன்றம் அவர் குற்றவாளியில்லை எனத் தீர்மானித்துள்ளது.

இதேபோன்று கடந்த மே மாதத்தில் 7 வருடம் தடுத்து வைக்கப்பட்டிருந்த இன்னுமொரு பெண்மணியான அந்தனி சந்திரா என்பவரை அவர் குற்றமிழைக்கவில்லை என தீர்ப்பளித்து நீதிமன்றம் விடுதலைசெய்தது.

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்

சமீபத்திய அறிக்கையொன்று பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் 18.19 வருடங்களுக்கு மேல் தடுத்துவைக்கப்பட்டுள்ள பலர் இலங்கையில் இன்னமும் உள்ளதை புலப்படுத்தியுள்ளது. இவர்கள் பலருடைய வழக்குகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சில சந்தர்ப்பங்களில் முறைப்படி குற்றச்சாட்டை சுமத்துவதற்கே 15வருடங்களாகின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசர கால விதிகள், கண்மூடித்தனமாக கைது செய்யப்படுவதற்கும், குற்றச்சாட்டு சுமத்தப்படாமல் தடுத்து வைக்கப்படுவதற்கும், மிகநீண்ட காலம் நீடிக்கின்ற வழக்குகளுக்கும் காரணமாக அமைந்துள்ளதை குறிப்பிட்ட அறிக்கை புலப்படுத்தியுள்ளது.

### ஒரு நபருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை

மிகமோசமான சூழ்நிலைகளில் தடுத்து வைக்கப்படுதல், சித்திரவதைகள், பலவந்தமாக வாக்குமூலம் பெறப்படுதல், போன்ற விடயங்கள் காணப்படுவதையும் அந்த அறிக்கை புலப்படுத்தியுள்ளது. நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டதனால், கடுமையான விசாரணைகள் மற்றும் சித்திரவதைகள் காரணமாக கைதிகளின் மனோநிலையும், உடல்நிலையும் பாதிக்கப்பட்டுள்ளதும் தெரிய வந்துள்ளது.

பலவந்தமாக, சித்திரவதை செய்து வாக்கமூலம் பெறப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன, தாங்கள் வாக்கு மூலத்தில் கையெழுத்திடுகின்றனர் என்பது கூட தெரியாத நிலையிலும், வாக்கு மூலம் எழுதப்பட்டுள்ள மொழி விளங்காத நிலையிலும் பலர் அதில் கைச்சாத்திட்டுள்ளனர்.தங்கள் இளைமைக்காலத்தின் பெரும்பகுதியை சிறைக்கம்பிகளுக்குப் பின்னாலேயே கழித்து விட்ட பலர் உள்ளனர்.

### விடுதலையான பின்னர் எதிர்கொள்ளப்படும் இன்னல்கள்

நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டபின்னரும் பயங்கரவாத சந்தேகநபர் என்ற களங்கத்தை அவர்கள் சுமக்க வேண்டியுள்ளது–சமூகம் அவர்களை அதன் பின்னரும் குற்றவாளிகள் எனக் கருதுகின்றது.

விடுதலையான பின்னர் திருமதி சர்மா இருப்பதற்கு இடமில்லாத நிலையில் காணப்படுகின்றார். திருமதி சந்திராவினால் தனது பழையவேலையை மீண்டும் பெறமுடியவில்லை. இருவருக்கும் எந்த நட்டஈடும் வழங்கப்படவில்லை. வருமானம் இல்லாத நிலையில் இருவரும் வாழ்வதற்கு பலத்த சிரமப்படுகின்றனர். தான் கைது செய்யப்படும் போது அதிகாரிகளிடம் திருமதி சர்மா கையளித்த நகைகளை அவர்கள் இன்னமும் மீள வழங்கவில்லை.அந்த நகைகள் தொலைந்துவிட்டன என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பயங்கரவாத குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாத நிலையில் ஒரு வருடகாலமாக தடுத்துவைக்கப்பட்டு விடுதலையான பாலேந்திரன் ஜெயக்குமாரி மீண்டும் கைது செய்யப்பட்டு ஒரு வாரகாலமாக தடுத்து வைக்கப்பட்டார். 362 நாள்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்து பிணையில் விடுதலையான பின்னரும் இது இடம்பெற்றது.இதுவரை அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான வெளிப்படைதன்மையின் அவசியம் தற்போது உணரப்பட்டுள்ளது.

சில அறிக்கைகள் வெளியாகியுள்ள போதிலும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் நிலை குறித்து தெளிவான உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

ஆறு வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் கே.பிக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டும் தெரியவரவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் ஓகஸ்ட் மாதம் அறிவித்துள்ளது. விடுதலைப் புலிகளுடனான தனது தொடர்பு குறித்து கே.பி. பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்திருந்தார். அவர் கைதுசெய்யப்பட்ட பின்னர் அப்போதைய அரசு கே.பி. இலங்கை உட்பட பல நாடுகளின் பட்டியலில் காணப்பட்டதாக தெரிவித்திருந்தது. அவர் மீது பல பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள போதிலும், அவருக்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்து ஏதோ தயக்கம் காணப்படுகின்றது.

### பயங்கரவாத தடைச் சட்டத்தையும், சித்திரவதையையும் தொடர்ந்து பயன்படுத்துதல்

கடந்த மாதம் இலங்கையில் திட்டமிட்ட முறையில் இழைக்கப்பட்ட பல குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆராய்ந்தது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்ட நாள்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு நீதியை வழங்குவது குறித்து அதில் ஏதும் குறிப்பிடப்படவில்லை–நீண்ட காலமாக தடுத்துவைக்கப்பட்டிருந்த பின்னர் நிரபராதிகள் என விடுதலை செய்யப்பட்ட திருமதி சர்மா, அந்தனி போன்றவர்களுக்கு நீதி வழங்குவது குறித்து ஐக்கியநாடுகள் தீர்மானம் எதனையும் தெரிவிக்கவில்லை.

இலங்கை தொடர்பான சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு தனது சமீபத்திய அறிக்கையில் 2015 இல் இடம்பெற்ற வெள்ளை வான் கடத்தல்கள், சட்டவிரோத தடுப்பு, சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் போன்ற 11சம்பவங்களைப் பதிவுசெய்துள்ளது.இலங்கையின் வடபகுதியில் வீதியோரத்தில் வைத்து கடத்தப்பட்டு இரகசிய முகாம்களில் வைத்து சித்திரவதை செய்யப்பட்ட நபர் குறித்து நாங்கள் அறிந்துள்ளோம். இந்த வருடம் மாத்திரம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 20பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகளுக்கு பயங்கரவாத விசாரணை பிரிவு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். இந்த எண்ணிக்கை அதிகமாகயிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களும் நல்லிணக்கமும்

திருமதி சர்மா, திருமதி அந்தோனி போன்றவர்களுக்கு இலங்கை அரசு எவ்வாறு நீதியை வழங்கும் என்ற விடயமே நாங்கள் நல்லிணக்கத்தை நோக்கி நகர்வதற்கு மிகமுக்கியமான விடயமாகக் காணப்படும்.இவர்களை போன்ற பலர் மேலும் உள்ளனர், அவர்களும் பலவருட காலமாக தடுத்துவைக்கப்பட்டிருந்த பின்னர் குற்றவாளிகள் இல்லை எனவிடுவிக்கப்படலாம், இவர்களுக்கும் நீதி வழங்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆம் 2 ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 03 . 1990

மறைவு 12 . 10 . 2013



## ஜெகநாதன் ஜெகரூபி புவிகரன்

ஆண்டுகள் இரண்டு போனதடி
நீ இன்றி கண்களும் தூங்க மறுக்குதடி
ஈசனவன் எனக்கில்லை
ஈன்றவளும் எனக்கில்லை
நெஞ்சிலே சாய்ந்து அழ
நேசித்த நீயும் இன்று எனக்கில்லை
வந்து ஒரு கணம் பாராயோ?
என் அருகில் வந்து சேராயோ?

உன் நினைவுடன்
புவிகரன்

ஆண்டுகள் இரண்டு ஓடி விட்டதம்மா
உன் நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை
நித்தம் உன் நினைவுகள் - எம் நெஞ்சில்
ஊஞ்சல் ஆடுதம்மா
உன்னை அவை தினம் எண்ணி
கண்ணீர் மழை வடிக்கின்றோம்
செல்வ மகளே எம்மை வந்து
ஒரு கணம் பாரம்மா !

இமையாணன்,
ஆனைவிழுந்தான், உடுப்பிட்டி.

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(62161) (14,15,17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லையா சுந்தரம்

தோற்றம் 17.05.1937

மறைவு 24.09.2014



அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி!! சாந்தி! சாந்தி!

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்
நண்பர்கள்
மானிப்பாய்.

# மரண அறிவித்தல்

## திருமதி நல்லம்மா சின்னையா



யாழ் அளவெட்டி நெல்லோடையைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரம், திருகோணமலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நல்லம்மா சின்னையா 10.10.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னையா அவர்களின் அன்பு மனைவியும் மகேஸ்வரன் (இலங்கை), சிவராணி (கனடா), புஸ்பராணி (திருகோண மலை), சிவராஜா (சுவிஸ்), மனோகரன்(சுவிஸ்), காலஞ்சென்ற சீவரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லம்மா (கனடா), காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், விஸ்வலிங்கம்,சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலசென்றவர்களான சின்னத்துரை,வள்ளிப்பிள்ளை, அம்பலவாணர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் மல்லிகா(இலங்கை), சத்தியநாதன் (வைரவி- கனடா) சத்திய நாதன் (திருகோணமலை), நிர்மலா (சுவிஸ்),தேவகி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும். சசிகஜன்,ஷர்மிலக்ஷனா,கிருசன்,சிறீராம்,சஞ்சீவ்,லகீசன், தர்சிகா, திலக்சிகா, சோஜிகா,ரஜிகா,சஜிகா, கஜானி,தேசிகன், மதனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (12.10.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 4.00 மணியளவில் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு : மகேஸ்வரன் - 077 617 2891
புஸ்பராணி : 026 222 3288

வீட்டு முகவரி:
புகையிரத நிலைய வீதி, திருகோணமலை.

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி கந்தையா

தோற்றம் 05 . 04 . 1932

மறைவு 09 . 10 . 2015



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம், நீராவியடியை தற்போது இருப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கந்தையா (09.10.2015) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தையல்நாயகம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் , பரமசிவம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் யாழ்.மாநகரசபை), சிற்றம்பலம் மற்றும் குமாரசாமி, சிவபாக்கியம் (ஜேர்மனி), மார்க்கண்டு ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரியும், நடராசா (ஜேர்மனி), பாக்கியலட்சுமி, பவளராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சினி (ஓய்வு பெற்ற ஆசிரியர் - ஜேர்மனி), காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்) மற்றும் தெய்வேந்திரன் (ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர் அஞ்சல் அலுவலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தீபாதினி, தீபதர்சினி, பார்த்தீபன் (அமெரிக்கா), டிசாந்தினி, நந்தகுமாரன் (Software Engineer - Black Shadow International), ருத்திரகுமாரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2015) திங்கட் கிழமை மதியம் 12.00 மணியளவில் கருப்பிட்டி பிள்ளையார் கோயிலடி அராலி தெற்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப ஒரு மணியளவில் அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கருப்பிட்டி பிள்ளையார் கோயிலடி,
அராலி தெற்கு, அராலி,
வட்டுக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்.
021 491 9408 ,0778019115

# உதிரத்தே உறையும்

# 28ம் ஆண்டு நினைவலைகள்

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு

அன்னை மடியில்
08 . 05 . 1948

அம்பாள் அருளடியில்
22 . 10 . 1987



## திருமதி . செல்வராணி தேவமதுரம்

( முன்னாள் நூலகர் – சாவகச்சேரி பொது நூலகம் )

திதி : அமாவாசை – 12.10.2015

**திதி வெண்பா**

**ஆண்டு பிரபவத்தில் ஐப்பசிசுர் பத்தொன்றில்**
**ஈண்டு மமாவாசை யாந்திதியில் - ஆண்டவன்தாள்**
**சென்றாள் "செல்"பட்டுச் செல்வரா ணிச்சீராள்**
**தன்னுலகு விட்டுத் தனித்து.**

அவனியில் அம்மாவென அழைத்திட ஆருளரோ ?
அன்பின் ஆலயமாய் இல்லத்து ஒளிவிளக்காய்
நிவப்புடன் நிறைந்து நூலகராய் பணியாற்றி
நல்லறம் நலங்காத்து நனிதிலங்கும் வாழ்நாளில்
அவலமிகு அதிகாலை அடுக்களை அடைந்தவேளை
அந்தகன் உருவிலான எறிகணைக் கிலக்காகி
சிவபிரான் பாகத்தாள் சீர்கழல்கள் சென்றடைந்த
செல்வராணிச் சீராளை சிந்தையுள் சேவிப்போம்!

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

கேந்திரவதனம்
07, பூமகள் வீதி, அரியாலை மேற்கு.
யாழ்ப்பாணம்.

நெஞ்சத்தே நின்றகலா
நின்நினைவில்
குடும்பத்தினர்

# அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற யாழ்ப்பாணம், கொழும்புத்துறை பகுதியை சேர்ந்த இளைஞரொருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை ஐம்பதாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும்– தவறின் ஆறுமாத காலங்கள் சாதாரணச் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். மணல் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் வாகனம் பதிவு செய்யப்பட்ட உரிமையாளருக்கு விடுவிக்கப்பட்டது. (ஐ–103)

# சந்தேகநபருக்கு சிறை

யாழ்ப்பாணம்,ஒக்.12

வடமராட்சி துன்னாலை சக்குச் சம்பாவைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு 5 வருடங்களும் 6 மாதகாலமும் ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனை கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டபோது, பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பியோடியவரை மீண்டும் பொலிஸார் கைது செய்து வழக்கில் முன்னிலைப்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சம்பந்தப்பட்டவருக்கு 5 வருடங்களும் 6 மாதங்களும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ–422)

# மகாபாரதம் படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.12

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களுக்கான மகாபாரதம் வீடியோ படக்காட்சி அனலைதீவு பொது நூலகத்தால் நூலக மண்டபத்தில் காண்பிக்கப்பட்டு வருகின்றது. திங்கள் முதல் வெள்ளி வரை பிற்பகல் 3 தொடக்கம் மாலை 5 மணி வரை இந்தப் படக்காட்சி காண்பிக்கப்படும். ஆர்வமுள்ளோர் பங்குபற்றி பயன்பெறுமாறு நூலக சமுகத்தினர் கேட்டுள்ளனர். (ஐ)

# விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி,ஒக்.12

வீதி வளைவில் நேருக்கு நேர் இரு மோட்டார் சைக்கிள் மோதிக் கொண்டதில் அவற்றில் பயணித்த இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர். இதன் போது ஒருவருக்கு கால் முறிந்தது மற்றவருக்கு முகத்தில் காயமேற்பட்டது. காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை கச்சாயில் இடம்பெற்ற இந்த விபத்தில் பாலாவி தெற்கைச் சேர்ந்த பாலகிருஷ்ணபிள்ளை கிருஷாந்தன் (வயது– 22), அல்லாரை தெற்கைச் சேர்ந்த கிருபாகரன் தனுசன் (வயது– 19) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (ஐ–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனைமரம் தறித்த அறுவருக்கு 24 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 12

அல்வாய் பகுயில் சட்ட விரோதமாக பனை மரம் தறித்த அல்வாயைச் சேர்ந்த ஆறு பேருக்கு 24 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக பனை மரம் தறித்த குற்றச்சாட்டில் 6 பேருக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதம் 24 ஆயிரம் ரூபா அபராதம் வழங்கி கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது. (ஐ-422)

## சண்டிலிப்பாய் கலாசார நிலையம் தேசிய மட்டப் போட்டியில் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.12

கலாசார மற்றும் இராஜாங்க அமைச்சினால் வருடந்தோறும் 172 கலாசார மத்திய நிலையங்களுக்கிடையில் நடைபெறும் "பிரதீபா தரங்கம் - 2015" தேசிய மட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையம் மாகாணமட்டத்தில் மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. இதில் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி தனி இசையில் கட்டுரை கிராமிய வளாக மாணவன் க.தனுஜன் முதலாமிடத்தையும், இளவாலை கிராமிய வளாக மாணவர்கள் பின்னல், கோலாட்டம் என்பவற்றில் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். (ஐ-ரி-6)

## இராமநாதன் கல்லூரியில் வாசிப்பு மாத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.12

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வாசிப்பு மாத நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இதற்கமைவாக ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கையெழுத்துச் சஞ்சிகையாக்கப் போட்டியும், வாசிப்புப் போட்டியும் இடம்பெறும். தரம் 6 - 13 வரையான மாணவர்களுக்கு பொது அறிவுப் போட்டியும் நடைபெறவுள்ளது. மாணவருக்கு ஒரு நூல் என்ற திட்டத்தில் அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் ஒவ் வொரு நூலை நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்ய முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை- வாசிப்பை ஊக் குவிக்கும் முகமாக நூற் கண்காட்சியும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி பாடசாலை நூலகத்தின் '[illegible] ஒளி' நூல் வெளியீட்டு நிகழ்வும் போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்படும் எனகல்லூரியின் அதிபர் திருமதி கே.கிருஷ்ண பிள்ளை தெரிவித்துள்ளார். (ஐ-ரி6)

## கணினிப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஒக்.12

வடக்கு மாகாண சபையில் கனிஷ்ட ஊழியர்களாக இருந்து போட்டிப் பரீட்சை மூலம் முகாமைத்துவ உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டோருக்கான கணினிப் பயிற்சிநெறி ஒன்று நடத்தப்படவுள்ளது. நல்லூர் கோயில் வீதியிலுள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெற உள்ளதாக முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி ந.பரமநாதன் அறிவித்துள்ளார். (ஐ-288)

## சிறுவர்,முதியோர் தினம்

கச்சாய் பொது நூலகம் நடத்தும் சிறுவர் தினமும் முதியோர் தினவிழாவும் இன்று திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் திருமதி தயானந்தன் தர்சினியின் தலைமையில் இடம் பெறவுள்ளது. (ஐ-9,122)


### முதலாம் ஆண்டு நினைவலைகள்

திருமதி பொன்னம்மா மாணிக்கன்



இமைகள்
மூடித்திறப்பதற்குள்
வருடம் ஒன்றாகி
விட்டது
நாம் வாழும் நாள்களில்
உம் நினைவுகள்
எம்முடன் என்றென்றும்
வாழும்

மகன்
M. ரவிசங்கர்
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி.

பிறப்பு 28.12.1945 இறப்பு 24.09.2014

(65333)(12,15)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்களிடமிருந்து 06.10.2015 அன்று பிரதீபா பிரபா விருதினைப் பெற்ற மு/ஒட்டுசுட் டான் மகாவித்தியாலய ஆசிரியரான

சிவஞானம் சிவகாந்தன்

B.Com, H.N.D,Acc,DIP IN MNG ESPM, DIP in PE, Dip in Edu, M.A (Merit)

அவர்களை மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
அப்பா சிவஞானம் (C.T.P), அம்மா இராசகாந்தம்
அண்ணா - விமலராஜ் குடும்பம்
தம்பிமார் - சிவவாசன்குடும்பம், சபேசன், ராகுலன்
தங்கைமார் - ஜெயக்குமார் ரங்கா குடும்பம்
பிரகாஸ் சுரேகா குடும்பம்

வீரபத்திரர் கோயிலடி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(60926) (14,15)

### BLOOMING BUDS PRESCHOOL & DAY CARE CENTRE

KEERIMALAI ROAD, PANDATERUPPU 077 243 6737

### BUTTERFLY PRESCHOOL & DAY CARE CENTRE

MEMORIAL LANE, MANIPAY 077 890 7229

### ENGLISH MEDIUM PRE SCHOOL

"சிறுவர்களுக்கு நட்புறவான சூழல் உலகை மிளிரச் செய்யும் அழகிய தேசம்"

யாழ்ப்பாண மாவட்டத்தில் தரமான கல்வியினால் தரமான சமூகத்தை உருவாக்கும் முன்னணி ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலைகளான BLOOMING BUDS DAY CARE CENTRE, BUTTERFLY PPRESCHOOL & DAY CARE CENTRE ஆகியவற்றுக்கான 2016 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

PLAY GROUP வயது- 3 | MONTESSORI வயது- 4 | PRE SCHOOL வயது- 5

- சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட குழந்தைக் கல்வி சிந்தனையாளர்களான Dr.Maria Montessori, jeanjacques Rousseau F.W.FROEBEL ஆகியோரது கற்பித்தல் முறைகள், கற்பித்தல் சாதனப் பயன்பாடு, உள்ளக, வெளியகவிளையாட்டுக்கள் அனுபவமும் அர்ப்பணிப்பும் கூடிய ஆசிரியர்களினாலான கற்கை நெறிகள்
- பாடவிதானம், இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு மாதமும் நடத்தப்படுகின்ற போட்டிகளில் சகல மாணவர்களும் பங்குபற்றுவர் திறமை அடிப்படையில் பரிசில்கள் வழங்கப்படும்.
- சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்ச்சிகளில் சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
- ஒவ்வொரு தவணையும் மிகவும் பிரமாண்டமாக நடைபெறும் நிகழ்வுகள் Sports Festival, English Concert, முத்தமிழ்விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, மாதிரி சந்தை, சிறுவர் தினவிழா, ஆசிரியர்தினவிழா, Christmas Carols, Graduation Ceremony.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை இன்றே முந்துங்கள்

**புதிய அனுமதிகள் 12.10.2015 அன்றிலிருந்து ஏற்றுக்கொள்ளப்படும் புதிய வகுப்புக்கள் அனைத்தும் விஜயதசமி அன்று 22.10.2015 வியாழக்கிழமை ஆரம்பமாகும்.**

- விஜயதசமி அன்று ஏடு தொடக்கும் நிகழ்வு காலை 8.30 மணி தொடக்கம் 12 மணிவரை இரண்டு பாடசாலைகளிலும் இடம்பெறும் பதிவுகளை முன்கூட்டியேஉறுதி செய்து கொள்ளுங்கள்
- 22.10.2015 தொடக்கம் 31.10.2015 வரை பெற்றுக்கொள்ளப்படுகின்ற புதிய அனுமதிகளுக்கு மட்டும் அனுமதிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

ELOCUTION CLASS புதிய [illegible]

[illegible]
T. சிவகுமார் (M.Ed)

(65526) (14,15,17)

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 2016 -ஆம் ஆண்டு தரம் 6 இல் ENGLISH MEDIUM, தமிழ் மொழி மூல வகுப்புக்களுக்கு ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 31.10.2015**

குறிப்பு: புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில் பண உதவி பழையமாணவர்களால் வழங்கப்படும். மேலதிக விவரங்களை அதிபர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்

அதிபர்
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்

(65322)(12,15,17)

### விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

வடமாகாணதிற்கான வவுனியாவில் இயங்கிவரும் பிரபல்யமான பெயின்ட் நிறுவனமான WAYAMBA INDUSTRIAL COATING |(PVT) LTD இற்கு விற்பனைப்பிரதி நிதிகள் தேவைப் படுகின்றார்கள். பொருத்தமான சம்பளத்துடன் வாகன வசதி உட்பட்ட மேலதிக அனுகூலங்கள் வழங்கப்படும்.

தகைமைகள்: விற்பனைத்துறையில் அனுபவம் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள ஆண்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு 077 3587349
MR.S. Nazar
077 4933187
076 6831441

(65289)(12,15)

### 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஜீவானந்தன் பிரகாஸ்



திதி: அமாவாசை
12.10.2015

ஆண்டுகள் ஏழு சென்றதையா
பொறுமையும் சாந்தமும்
அன்பும் நிறைந்தவரை அதனால்
தான் இறைவனுக்கு
பொறுக்கவில்லையோ
உம்மைவாழும் வயதில்
கொண்டு சென்றாரோ எம் உயிர்
உள்ளவரை உமது
நினைவோடு வாழுகிறேன்
ஆண்டவன் பொன்னடியில்
இன்பமுடன் நீங்கள் இருக்க
என்றென்றும் வேண்டுகிறேன்.

பிறப்பு 28.04.1988 இறப்பு 29.09.2008

என்றும் நினைவில்
அன்பான அம்மம்மா
M.சரோஜினிதேவி
20A செட்டித்தெருலேன் ,நல்லூர்

### முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் நடேசு
தமிழ்மோகன்



மலர்வு
26.12.1957

உதிர்வு
23.09.2014

அன்புக்கு இலக்கணம் - எம் அப்பா
அகிலத்தில் உமக்கு நிகர் - யாரப்பா ?
நெஞ்சத்தில் வஞ்சமின்றி
நேர்வழியில் வாழ்ந்து காட்டி
நல் வாழ்வு வாழவும் நிறை ஆசி தந்தீரே!
எம் வாழ்வு காண்பதற்கே
உமை இங்கு தேடுகின்றோம்.....
எங்குதான் சென்றீரோ! எமை விட்டே!
ஆண்டொன்றும் போனதையா....
ஆறுதல் எமக்கில்லை..... மீண்டும் எமை காண்பதற்காய்
எம்மிடம் வாரும் அப்பா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மடத்துக்கடவை, அல்வாய் வடமேற்கு.
0779265065

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பது எல்லாம் நன்மைக்கே!



காட்டு ராஜா சிங்கத்தின் குகை வாசலில், ஏகப்பட்ட மிருகங்களின் கூட்டம். காட்டு ராஜா, வேட்டையாடச் சென்றபோது, கால் விரலில் அடிபட்டு, விரல் துண்டாகி விட்ட தென்று அறிந்து துக்கம் விசாரிக்கத்தான் காட்டுப் பிரசைகளான மிருகங்கள் அங்கு கூடியிருந்தன. ஒவ்வொரு மிருகமாக வரிசையில் நின்று, குகையின் உள்ளே சென்று, சிங்க ராஜாவைப் பார்த்து விட்டுத் திரும்பின. சிங்கராஜா காலில் பலமான கட்டுடன், கட்டிலில் படுத்துக் கிடந்தது. அருகே சிங்கராணி, வழியும் கண்ணீரும் சிந்திய மூக்குமாக அமர்ந்திருந்தது. ஒவ்வொரு மிருகமாக வரிசையாகச் சென்று கொண்டிருந்தபோது, வரிசையின் இடையே வந்து, புகுந்து கொண்ட குள்ளநரி, சிங்கராஜாவின் அருகே சென்றதும் பெருமூச்சு விட்டபடி ஊம் நடப்பது எல்லாம் நன்மைக்கே என்றது. சிங்க ராஜாவுக்கு கடுங்கோபம் வந்துவிட்டது.

நமது காலிலுள்ள ஒரு விரலே போய்விட்டது. இந்தக் குள்ளநரி, நடப்பதெல்லாம் நன்மைக்கே, என்று கூறுகிறதே. பிடி அதை அடைத்துவை, குகைச்சிறையில்! எனக் கட்டளை இட்டது சிங்கராஜா. சிப்பாய்க் குரங்குகள் பாய்ந்து, நரியைப் பிடித்து இழுத்துச் சென்றன. ஒவ்வொரு காரியமும் நமது நன்மைக்குத்தான் நடக்கிறது என்ற உண்மையைத் தானே சொன்னேன் என்று புலம்பியபடி சென்றது குள்ள நரி. சிங்கராஜாவின் காலிலுள்ள புண் குணமாவதற்கு, மூன்று மாதகாலங்கள் கடந்தது. காலில் ஒருவிரல் இல்லாமையால், சிங்கராஜா கம்பீரமாக நடக்க இயலாமல், நொண்டி நொண்டி நடந்தது. அதனால் மிருகங்கள் எல்லாம் மறைமுகமாக நொண்டி ராஜா என அழைத்தன. இப்படிச் சிங்க ராஜாவை எல்லாரும் கேலி செய்வதைக் கேட்டு, சிங்கராணிக்கு மிகுந்த வருத்தம். என்ன செய்வது? இந்தப் பட்டத்தைச் சூட்டியது எந்த மிருகம் என்பது தெரிந்தால், இளவரசன் சிங்கக்குட்டியிடம் தண்டனை கொடுக்கச் சொல்லலாமே என நினைத்தது.

உண்மையில் இப்படி பெயர் வைத்தது, குறும்புக்கார முயல் என்பது எவருக்கும் தெரியாது. சிறையில் அடைபட்டிருந்த குள்ளநரிக்கு, சைவ உணவே தினசரி ஒரு வேளை தரப்பட்டது. காட்டுக்கிழங்கையும், கனிகளையும், பார்த்தாலே குள்ளநரிக்கு குமட்டிக் கொண்டு வரும், என்ன செய்வது? வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்காமல், வார்த்தையைக் கொட்டிவிட்டு, வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டோமே, என ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது குள்ளநரி.

வெகுநாள்களாகியும் குணமாகாமல் காலை நொண்டிக் கொண்டே ஒரு நாள் காட்டில், வெகுதூரம் வேட்டைக்கு வந்து விட்ட சிங்கம், ஒரு இடத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்த ஒரு கூண்டுக்குள், ஆட்டுக்குட்டி ஒன்று இருந்ததைக் கண்டது. ஆவலுடன் ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து, கடித்துக் குதறித் தின்றது.


தின்று முடிந்து, ஏப்பம் விட்டபடி திரும்பிய சிங்கம் அந்த இரும்புக் கூண்டில் கம்பிக்கதவால் மூடப்பட்டிருந்ததைக் கண்டு, திகைத்தது. மடத்தனமாக கூண்டுக்குள் அகப்பட்டுக் கொண்டோமே என்று நினைத்து வேதனைப்பட்டது. ஆத்திரத்தில் கர்ஜனை செய்தது. அப்போது கூண்டில் அடைப்பட்ட சிங்கத்தை, தங்களது வண்டியில் கட்டி இழுத்துச் சென்ற காவலர்கள், நம் இளவரசர் கேட்டபடி அவர் விளையாடுவதற்கு ஒரு சிங்கம் கிடைத்துவிட்டது. இதைப் பார்த்தால் மிகவும் மகிழ்ச்சியடைவார். இளவரசரின் மகிழ்ச்சியைக் கண்டு மன்னர் நமக்குப் பரிசுகள் கொடுப்பார், என்றெல்லாம் பேசிக் கொண்டே அரண்மனையை அடைந்தனர். கூண்டிலிருந்த சிங்கத்தை இறக்கியபோதுதான் அது நொண்டி நொண்டி நடந்ததை அறிந்தனர். இதைக்கண்டு வருந்திய அவர்கள், இது ஊனமுற்ற சிங்கம். இதை நமது இளவரசர் விளையாடப் பழக்கப்படுத்த முடியாது. எனவே, இதைக் காட்டில் கொண்டு போய் விட்டுவிடுவதே நல்லது என்று கூறியபடி சிங்கத்தை மீண்டும் காட்டுக்குள் கொண்டு சென்று விட்டுவிட்டுத் திரும்பினர் காவலர்கள். சிங்கத்துக்கு மகிழ்ச்சி பொங்கியது.

நமது கால் விரல், இல்லாததால் தான் நம்மை விட்டு விட்டார்கள். நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று அன்றைக்கு நரி சொன்ன போது, ஆத்திரப்பட்டு அதைக் கூண்டில் அடைத்தோம். ஆனால் அது சொன்னது சரியென்று இப்போதுதான் உணர முடிகிறது என்றெல்லாம் நினைத்தபடி தனது குகைக்குச் சென்ற சிங்கம், தனது மனைவியிடமும் குட்டிகளிடமும் நடந்ததைச் சொன்னது. உடனடியாக, சிப்பாய்க் குரங்குகளை அழைத்து, சிறையைத் திறந்து குள்ளநரியை வெளியில் அனுப்புங்கள் என்று உத்தரவிட்டது. அதன்படி சிறையை விட்டு, வெளி வந்த குள்ளநரியை வரவேற்ற சிங்கராஜா, அறிவுக் கடலே, இன்று முதல் நீங்கள் தான் எனது மந்திரி, நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று அன்று நீங்கள் சொன்னது உண்மையாகி விட்டது. [illegible] எதைச் சொன்னாலும் அவசரப்படாமல் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன் என்று மகிழ்ந்தது.


**நீதி:** நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று நினைத்தால் துன்பம் தரக்கூடிய செயல் எதுவும் இல்லை.

சிறுவர் மற்றும் இளவல் பக்கத்துக்கு வாசகர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.



# வாழ்வை முன்னேற்றும் வழிகள்



*(கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்"

"வைத்த தொரு கல்வி மனப் பழக்கம் நித்தம் நடையும் நடைப் பழக்கம் நட்பும் தயை கொடையும் பிறவிக்குணம்" என்று மூதாட்டி ஔவை மொழிந்ததற்கேற்ப நட்பும் தயையும் கொடையும் தலையாய செல்வங்களாகக் கருதிப் போற்றும் ஞானியர் பிறவியிலேயே உருவாகின்றனர். இத்தகை யோர் செல்வங்களையோ, புகழையோ விரும்புவதில்லையாயினும் இவர்களுள் குறிப்பிடத்தக்க சிலர் தாம் செய்த சேவையின் மகத்துவத்தால் உலகப் புகழ் பெற்று விளங்குகின்றனர். இதனால் இத்தகைய புகழ் பெறாதவர் யாரும் ஞானி இல்லை என்று ஒதுக்கி விடுதல் மடமையேயாகும். நம்மில் பலருக்கு அவரவர் தந்தையோ, தாயோ இத்தகைய ஞான குருவாக இருப்பதுண்டு. வேறு சிலருக்கு அவர்களது ஆசிரியர்களோ அல்லது நண்பர்களோ குருவாக விளங்குவதும் உண்டு. எவ்வாறாயினும் இவர்களுள் குருவாக விளங்குபவர்களும் அத்தகைய குருவை வழிகாட்டியாகப்பெற்று அவர் காட்டும் வழியில் தவறாது நடப்பவர்களும் பிறவியிலேயே ஞானம் பெற்றவர்கள் என்பது உறுதி. இதற்கு ஆதாரம், சில குழந்தைகள் தமது பொருள்களைப் பிற குழந்தைகள் எடுத்தால் கோபப்படுவதும் வேறு சில குழந்தைகள் அவ்வாறு கோபப்படாமல் பிற குழந்தைகளைக் காண்கையில் மகிழ்வதையும் நாம் காண்கிறோம். குழந்தைப் பருவத்தில் இருந்த குணம் அனேகமாகப் பிறவி முழுவதும் தொடர்வதையும் காண்கிறோம்.

இத்தகைய வேறுபாடுகள் இயற்கையாகவே ஏற்படுவது கண்கூடு. இவர்களுள் ஒரு சாரார் விதிவசத்தாலும் [illegible] பிறவிக்குணம் [illegible] லவர் தீயவராவதும் தீயவர் நல்லவராவதும் கூட நிகழக்கூடியதே. இதற்கு உதாரணம் இராமாயணக் காவியத்தைப் படைத்த வால்மீகி முனிவர் ஆதியில் ஒரு திருடனாக இருந்ததாகச் சொல்லப்படுவதும், அதே இராமாயணக் காவியத்தில் தான் பெற்ற பிள்ளையை விடவும் தனது மூத்தாளான சக்களத்தி பெற்ற பிள்ளையான சிறிராமனை அதிகப் பிரியத்து டன் நடத்திய கைகேயி மனம் திரிந்து இராமனுக்கு வேறு யாரும் இழைக்க நினைக்க வொண்ணாக் கொடுமைகளை செய்ததும் நிகழ்ந்தது.

நாம் ஒவ்வொருவரும் நான் யார் எனும் ஒரு கேள்வியை நம்மை நாமே கேட்டுக் கொண்டு நாம் பிற அனைவருடனும் நட்புடனும் அன்புடனும் நடக்கிறோமா, பிறருக்காகத் தியாகம் செய்யும் உள்ளம் நம்மிடம் உள்ளதா, பிறர் பொருளுக்கு ஆசைப்படாதிருக்கிறோமா எனும் கேள்விகளுக்கு பதில் தேட நமது இயல்பும், வாழ்வில் நமது கடமை என்னவென்றும் நாம் உரிய காலத்தில் அறிந்து கொள்வோம். தன்னையறிவதே ஞானம் என்பது பகுத்தறிவுள்ள மாந்தர் அனைவருக்கும் தெரிந்த உண்மையே. நம்மிடம் எத்தனை கோடி பணமிருந்தாலும் நாம் உண்ணும் உணவு சிறிதளவேயாகும். அதற்கு மேல் உண்ண முடியாது. அதுவும் இளமை சென்று முதுமை வந்தால் உணவின் அளவு மேலும் குறைய பல சுவையான உணவு வகைகளை ஒதுக்கி, பெரும்பாலும் ருசி குறைந்த உணவையே உண்டு வாழும் கட்டாயமும் பெரும்பாலானோருக்கு ஏற்படுகிறது. இந்த உண்மைகளெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரிந்தாலும் பெரும்பாலோர் தாம் இந்த உலகை விட்டுச் செல்லும் கடைசி நொடி வரையில் பொருளின் மீதுள்ள பற்றை விட இயலாமல் தவித்துத் துயருறுவதையும் நாம் காண்கிறோம்.

[illegible] கொண்டு சத்தியத்தையும் தர்ம நியாயங்களையும் காற்றில் பறக்க விட்டுப் போலியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, தன்னை நம்பியிருப்பவர்களைத் துன்பத்தில் வாட விட்டு, தனக்குத் தானே பாராட்டு விழாக்களும் நடத்திக் கொண்டு திகழ்பவர்கள் இந்த உலகில் இருக்கும் காலத்திலும், இந்த உலகை விட்டுச் சென்ற பின்னரும் பெரிதும் இகழ்ச்சியையே பெறுவது உறுதி. நாம் பிறரால் மனதாரப் புகழப் படும் வகையில் வாழ முயல வேண்டும். அவ்வாறு புகழுக்குரியவராக இல்லாவிடினும் பிறர் நம்மை இகழத்தக்க செயல்கள் ஏதும் புரியாமல் அமைதியாக வாழ்வது உத்தமம். நான் வாழ்வில் புகழ்ச்சியை விரும்புவதில்லை, பிறர் புகழ வேண்டுமென்று எதனையும் செய்வதில்லை என்றெல்லாம் சிலர் சொல்வதுண்டு, ஆயினும் அவ்வாறு சொல்வோர் தன்னைத்தானே தன் கூற்று உண்மையா எனும் கேள்வியைக் கேட்கின் இல்லையெனும் பதிலையே பெறுவர். பிறரால் புகழப்பட வேண்டும் என்று பெரிதும் விரும்பி அதற்குத் தகுதியுடையவராக வாழ்ந்து என்றும் நற்செயல்களையே செய்து வாழ்தல் சிறந்தது. அத்தகைய புகழ்ச்சி உண்மையான உள்ளபூர்வமான புகழ்ச்சியாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த எண்பலன் பற்றி தெரிந்து கொள்வோம்

ஏழாம் எண்ணில் பிறந்தவர்களின் பலன்கள் நேற்று முன்தினம் உதயனில் வெளியாகியிருந்தன. இன்று 8 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் பற்றிப் பார்ப்போம்.

ஒவ்வொரு எண்ணுக்கும் ஒரு தனித்தன்மை இருப்பது போல 8 ஆம் எண்ணுக்கு உண்டு. 8 ஆம் எண் தெய்வ சக்தி வாய்ந்ததாகவே கருதப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா கூட 8 ஆவது ஆக அஷ்டமி திதியில் பிறந்தவர்தான். ஒவ்வொரு மாதமும் 8,17,26 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள் 8ஆம் எண்ணில் பிறந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். 8ஆம் எண்ணுக்குரிய கிரகம் சனி பகவானாவார்.

**குண நலன்கள்**

எட்டாம் எண்ணில் பிறந்தவர்கள் நீதி நேர்மைக்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள். எப்படிப்பட்ட அவசரமான காரியமாக இருந்தாலும் மிகவும் நிதானமாகவே செய்வார்கள். நிதானமே இவர்களின் பிரதானமாக இருக்கும். தங்கள் கஷ்டங்களை பிறரிடம் சொல்லி உதவி கேட்க மாட்டார்கள். இவர்களும் தன்னால் முடிந்த உதவியை மட்டும்தான் பிறருக்குச் செய்வார்கள்.



எதையும் எளிதில் கிரகித்துக் கொள்ளக் கூடிய ஆற்றல் இருக்கும். கடமையே பிரதானமாகக் கொண்ட இவர் களுக்கு வாழ்வில் எவ்வளவு சோதனைகள் நேர்ந்தாலும் வேதனையடைய மாட்டார்கள்.

எந்தக் காரியங்களை எடுத்துக் கொண்டாலும் இருவிதங்களில் ஆதாயம் அடையக்கூடிய ஆற்றல் இவர்களுக்கு உண்டு. எப்போதும் கவலை தோய்ந்த முகத்துடன் ஆழ்ந்த சிந்தனை செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் பேச்சில் அழுத்தம் திருத்தமும், நிதானமும், உறுதியும் இருக்கும்.

எதிலும் பிரதிபயன் பாராது உழைத்திடும் இவர்கள், தெய்வத்தைக் கூட உழைப்புக்கு அடுத்தபடியாகத்தான் நினைப்பார்கள். நினைத்ததை விடாத பிடிவாதக்காரர் என்றாலும்– வீண் பிடிவாதக்காரர் இல்லை. வீண் பேச்சிலும், வெட்டிப் பேச்சிலும் ஈடுபட மாட்டார். பிறர் தம் மீது கொண்டுள்ள தவறான அபிப்பிராயங்களுக்கு செவி சாய்க்க மாட்டார். சிரிக்கச்சிரிக்க பேசும் சுபாவம் கொண்ட இவர்களுக்கு, மற்றவர்களை குலுங்க குலுங்கச் சிரிக்க வைக்கக்கூடிய ஆற்றலும் உண்டு. எதையும் கூர்ந்து ஆராய்ந்து பார்ப்பவர். ஆதலால் எந்தக் காரியத்திலும் அதன் சாதகப் பயனை பார்த்த பின்தான் செயலில் ஈடுபடுவார்கள். மற்றவர்களின் குணாதிசயங்களைக் கூர்ந்து கவனிப்பதிலும், அவர்களை எடை போடுவதிலும் மிகவும் திறமை சாலிகள். நியாயம், அநியாயம் இவற்றை தெளிவாக எவராக இருந்தாலும் பயமின்றி எடுத்துரைப்பார்கள். சொன்ன சொல் தவறாத குணம் இருக்கும். பிறர் வாழ்க்கையில் எந்த வகையிலும் குறுக்கிடாத உயர்ந்த பண்பும், இலட்சியமும் கொண்டவர்களாக இருப்பார்கள்.

**உடல்நிலை ஆரோக்கியம்**

எட்டாம் எண்ணில் பிறந்தவர்களுக்கு நடுத்தர உயரத்தை விட சற்றே குறைவான உயரம் இருக்கும். முட்டு எலும்புகள் எடுப்பான தோற்றம் அளித்து அழகாக இருக்கும். இவர்கள் சனியின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். ஆதலால் கறுப்பான நிறமும், சற்று வயது முதிர்ந்தத் தோற்றமும் இருக்கும். நீண்ட கழுத்தும், பரபரப்பில்லாத நடையும், நெற்றியில் ஆழ்ந்த கோடுகளும் இருக்கும். முகத்தில் எப்பொழுதும் கவலை குடி கொண்டிருக்கும். நிதானமாக பேசினாலும் பேச்சில் உறுதி தொனிக்கும். இவர் களுக்கு வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அடிக்கடி உண்டாகிக் கொண்டே இருக்கும். வயிற்று வலி, வயிற்றுப் புண், மலச்சிக்கல், வாயுத் தொல்லை போன்றவைகள் உண்டாகும். தோல் சம்பந்தமான வியாதிகளும் ஏற்படும். மார்புச் சளியும், இவர்களுக்கு தொல்லை கொடுக்கும். எலும்பு சமபந்தப்பட்ட பிரச்சினைகளும் உண்டாகும்.

**குடும்ப வாழ்க்கை**

எட்டாம் எண்ணில் பிறந்தவர்களின் குடும்ப வாழ்க்கை சிறப்பாகவே இருக்கும். குடும்பத்தின் மீது அதிக அக்கறை உடையவர்களாக இருப் பார்கள். காதல் விவகாரங்களில் ஈடுபட் டாலும் இவர்களுக்கு அவ்வளவு எளிதில் வெற்றி கிடைப்பதில்லை. தன்னுடைய முயற்சி தவறு எனத் தெரிந்தவுடன் சீ இந்தப் பழம் புளிக்கும் என நழுவி விடுவார்கள். வாழ்வில் சுக துக்கங்கள் மாறி மாறி வந்தாலும் எதையும் சமாளிக்கக்கூடிய ஆற்றல் இருக்கும். இவர்களுக்கு வாய்க்கும் வாழ்க்கை துணை மிகவும் சிக்கனமானவராகவும் எதிர்த்து பேசாத குணசாலி யாகவும் இருப்பார். கணவன், மனைவி இருவரும் எப்போதும் இணைபிரியாது ஒற்றுமையுடன் இருப்பார்கள். புத்திரர்களால் மிகச் சிறப்பான அனுகூலம் இருக்கும். உடன் பிறப்புகளை மிகவும் அனுசரித்துச் செல்பவர்களாக இருப்பார்கள்.

**பொருளாதாரம்**

எட்டாம் எண்ணில் பிறந்தவர்களுக்கு தேவைக்கேற்றபடி பண வசதியும் உண்டாகி கொண்டே இருக்கும். தங்களுடைய சுக வாழ்க்கைக்காக இவர்களது வருமானம் முழுவதும் செலவழியும். தாமே சுயமாக உழைத்து பூமி, வீடு, வாகனம் முதலியவற்றை அமைத்துக் கொள்வார்கள். கொடுக்கல், வாங்கலில் இவர்கள் மிகவும் கவனமுடன் செயற்பட வேண்டியிருக்கும். தாராள மனப்போக்காலும், பிறருக்கு உதவி செய்ய நினைக்கும் பண்பாலும் கடன்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு. எவ்வளவு கடன்கள் ஏற்பட்டாலும் அவற்றைக் குறித்த நேரத்தில் அடைக்கும் ஆற்றலும் உண்டு. கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற தவற மாட்டார்கள். சேமிப்பு என்பது இவர்களுக்கு குறைவாகவே இருக்கும். அசையும், அசையாச் சொத்துக்களின் சேர்க்கை மேல் அலாதி விருப்பம் உடையவராக இருப்பார்கள்.

**தொழில்**

எட்டாம் எண்ணில் பிறந்தவர்கள் மிகக் கடினமான வேலைகளையும் மிக எளிதில் செய்து முடிப்பார்கள். இவர்களுக்கு இரும்பு சம்பந்தமான தொழில்கள் நல்ல இலாபத்தைக் கொடுக்கும். குறிப்பாக இரும்பு உருக்குதல், அச்சுவார்த்தல், பாத்திரங்கள் செய்தல், இயந்திரங்கள் செய்தல், இயந்திரங்கள் பழுது பார்க்கும் பணிகள் போன்றவைகள் இவர்களுக்கு ஏற்றன. பெரிய கரும்பாலைகள், எண்ணெய் எடுக்கும் செக்கு போன்றவை ஏற்றம் தரும். நீதிபதிகள், வக்கீல்கள், இராணுவ அதிகாரிகள், ரயில்வே அதிகாரிகள் போன்ற துறைகளும் 8ஆம் எண்ணில் பிறந்தவர்களுக்கு அமையும். சிலருக்கு விவசாயப் பணி, நில புலன்கள் போன்ற துறைகளும் முன்னேற்றம் கொடுக்கும். அடிமைத் தொழில்கள் சிலருக்கு அமைந்தாலும் படிப்படியாக முன்னேறிவிடுவார்கள்.

**நண்பர்களும் - பகைவர்களும்**

எட்டாம் எண்ணில் பிறந்தவர்கள் எப்பொழுதும் கலகலப்பாக பேசி பிறரைச் சிரிக்க வைக்கக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள் என்றாலும் திடீரென்று கோபம் கொள்வார்கள். இவர்களுக்கு எப்பொழுது கோபம் வரும் என்று கூறமுடியாது. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என பிடிவாதம் பிடிக்கும் இவர்களிடம் விட்டுக் கொடுத்து நடப்பதற்கு 4,5,6,7 போன்ற எண்ணில் பிறந்தவர்களே தகுதியானவர்கள் 1,2,9 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் சற்று கவனமுடன் நடந்து கொள்வது நல்லது.

**சனிக்குரிய காலம்**

டிசெம்பர் மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரையிலான காலம் சனிக்குரியது. சனி இரவில் பலமுடையவன். சனிக்கிழமை சனி பகவானுக்கு உகந்ததாகும். குறுகிய கால அளவில் ஓர் ஆண்டு காலம் சனிக்குரியது.

**சனிக்குரிய திசை**

தெற்கு அல்லது தென் கிழக்கு சனிக்குரிய திசையாகும். எட்டாம் எண்ணில் பிறந்தவர்கள் இந்த திசைகளில் எந்த பணிகளைத் தொடங்கினாலும் வெற்றி கிட்டும். குகைகள், சுடுகாடுகள், சுரங்கங்கள், பழைய பாழடைந்த வீடுகள், பாலைவனங்கள் போன்ற யாவும் சனிக்குரிய பிரதேசங்களாகும்.

**சனிக்குரிய கல்**

சனிக்குரிய கல் நீலம். நிறத்தின் பெயராலேயே இந்தக்கல் நீலம் என்றழைக்கப்படுகிறது. எட்டாம் எண்ணில் பிறந்தவர்கள் மட்டும்தான் நீல நிறக் கல்லை அணிய வேண்டும். அதிலும் மிக ஆழ்ந்த நீலநிறக் கல்லை அணியக்கூடாது. சனியால் பாதிக்கப்பட்டவர்கள் அக்காலங்களில் மட்டும் நீலக்கல்லை அணிந்து கொள்ளலாம். நீலகற்களுக்கு பதிலாக அக்கோமரின் கற்களையும் பயன்படுத்தலாம். சனியால் பாதிக்கப்பட்டவர்கள் தவிர மற்றவர்கள் இந்தக்கல்லை அணியக்கூடாது.

**பரிகாரம்**

எட்டாம் எண்ணில் பிறந்தவர்கள் சனிக்கிழமைகளில் சனி பகவானுக்கு எள் கலந்த நல்லெண்ணெயில் தீபமேற்றி நீலநிற சங்குப் பூக்களால் அலங்கரித்து கறுப்பு நிற வஸ்திரம் சாற்றி வழிபாடு செய்வது நல்லது. ஆஞ்சநேயரையும் வழிபடலாம். தினமும் காகங்களுக்கு அன்னம் வைப்பது நல்லது. ஏழை, எளியவர்களுக்கும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யலாம். இதனால் சனியால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் விலகும்.

**அதிர்ஷ்டம் தருபவை**

அதிர்ஷ்டத் திகதி 8,17,26, அதிர்ஷ்ட நிறம்–கறுப்பு, நீலம்.
அதிர்ஷ்டத் திசை–தெற்கு,
அதிர்ஷ்டக் கிழமை– சனி, புதன்
அதிர்ஷ்டக் கல் நீலம், அதிர்ஷ்டத் தெய்வம்–ஐயப்பன்.

# ஆணாதிக்கமும் பெண் அடிமைத்தனமும்



**ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்ணின் திருமணமே அவளது உயிர் வாழும் தகுதியை அங்கீகரிக்கின்றது. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற பழமொழி. பெண்ணின் அடிமைத்தனத்தைப் பண்பாடாக்கு கிறது என்று நேற்றுமுன்தினம் உதயனில் பார்த்தோம். இன்று அதன் தொடர்ச்சியைப் பார்ப்போம்:-**

குழந்தை மீதான பெண் உரிமை மறுக்கப்பட்டு. ஆணின் உரிமையை உறுதி செய்யும் ஆணாதிக்க விளக்கத்தை இந்தப் பழமொழி உறுதி செய்கின்றது. இன்றைய குருட்டுப் பெண்ணியம் ஆணாதிக்க மயமாதலில் சலுகைக்காகப் போராடுகின்றபோது, குழந்தை மீதான பெண்ணின் உரிமையை ஆணாதிக்க வழியில் கைவிட்டுச் செல்வது ஒருபோக்காக உலகமயமாதல் பாதையில் அதிகரிக்கின்றது.

அஞ்சும் மூன்றும் உண்டானால் அறியாப் பெண்ணும் கறி சமைப்பாள் என்பதன் மூலம் பெண்ணின் பாரம்பரியமிக்க கடமை, பண்பாடு ரீதியாக நியாயப்படுத்தப்படுகின்றது. சில கடமைகள் பெண்ணுக்கு உரித்தானவை என்பதையும், இதை அவளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை என்பதையும், ஆணாதிக்கப் பண்பாட்டு வழியாக இந்தப் பழமொழி விளக்குகின்றது. தந்தை எவ்வழி தனயன் அவ்வழி என்பது ஆணாதிக்க வாரிசுரிமையையும், ஆணாதிக்க வழியையும், தந்தையுரிமை வழியில் நியாயப்படுத்துவதே இந்தப்பழமொழி. வாரிசுகள் செய்யும் ஆணாதிக்கத் தவறுகளை, தந்தையின் ஆணாதிக்கச் சமூகப் பரம்பரையூடாக இனம் காட்டி அங்கீகரிக்கும் சமூக வெட்டு முகம், தாய்வழிக்கு எதிராக இந்தப்பழமொழியைக் கையாளுகின்றது. "தான் திருடி அசல் வீடு நம்பமாட்டாள்" பெண்ணின் கற்பு மீதான ஆணாதிக்கச் சந்தேகத்தை ஆண் வழியில் கொச்சைப்படுத்தி, பாதுகாக்கின்றது. பலதார மணத்தில் திளைக்கும் ஆண் மீதான பெண்ணின் போர்க்குரலைக் கொச்சைப்படுத்த, அதைப் பெண் மீது திருப்பும் இந்தப் பழமொழி, பெண்ணின் கற்புரிமையைக் கொச்சைப்படுத்தி, கேவலப் படுத்துகின்றது.



சமுதாயத்தில் ஆணாதிக்கம் பெண்ணை இழிவாடும் வெட்டு முகத்தை இது பிரதி பலிக்கின்றது. தாயைப் பார்த்து பெண் ணைக் கொள்ளு, பாலைப் பார்த்து பசுவைக் கொள்ளு என்றதன் மூலம் ஆணாதிக்க அமைப்பில் பெண்ணின் அடிமைத் தனத்தை அடிப்படையாகக் கொண்டு ஆணின் சுகபோகத்தை இனம் காட்டுகின்றது. தாய் பற்றிய ஆணா திக்கச் சமூக மதிப்பீட்டில் இருந்து, மகளின் ஒழுக்கத்தை, ஆணாதிக்கம் வரையறுத்து, புதிய அடிமையை இனம் காண்பதை இந்தப் பழமொழி பிரதிபலிக்கின்றது. "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நற் பெண்டாடிக்கு ஒரு வார்த்தை" என்பது பெண் மீதான ஆணாதிக்க வரைமுறையற்ற உரிமையை விளக்குகின்றது. பெண்ணுக்கு ஆண் கட்டளையிடும்போது, கேள்வியின்றி அடங்கி வாழக் கோரும் இந்தப் பழமொழி, இந்த ஆணாதிக்க அமைப்பில் ஆணின் தனித்துவத்தை எடுத்து இயம்புகிறது.

பிள்ளைக்கு உபாத்தியாயரும் பெண்ணுக்கு மாமியாரும் ஆணாதிக்கம் சார்ந்த, ஆண் வீடு புகும் பெண் மீதான மாமியாரின் கொடுமையை, ஆணாதிக்க அமைப்பின் ஜன நாயக அதிகார வடிவமாக இருக்கின்றது. திருமணம் செய்த பின் ஆண் வீடு வரும் பெண்ணை அடங்கி வாழ, மாமியார் வேடம் ஊடாக தனது அதிகாரத்தை ஆணா திக்கம் நிறுவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 40 | 60 | 60 | 35 |
| கத்தரி | 70 | 60 | 80 | 60 | 60 | 50 | 80 | 35 |
| கரட் | 60 | 120 | 60–120 | 70 | 120 | 100 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40–50 | 40 | 50 | 30 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 100 | 80–100 | 120 | 100 | 20 |
| பாகல் | 200 | 120 | 140 | 120 | 240 | 80 | 110 | 100–120 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 60 | 60 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 100 | 100 | 100–120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 90 | 60 | 120 | 120 | 60–80 | 140 | 100 | 100 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 35–40 | 60 | 50 | 30–40 |
| தக்காளி | 80 | 80 | 80 | 100 | 80–100 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 60–80 | 40 | 60 | 35 |
| கீரை | 20 | 40 | 40 | 10 | 30–40 | 30 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 140 | 180 | 140 | 140 | 120 | 200 | 100 |
| புடோல் | 40 | 60 | 40 | 40 | 50–60 | 80 | 60 | 40 |
| கோவா | 70 | 80 | 60 | 70 | 50–60 | 80 | 100 | 45–50 |
| வெண்டி | 50 | 60 | 60 | 50 | 70–80 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 140 | 150–160 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 70 | 70–80 | 80 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 60 | 50 | 60 | 40–60 | 45–50 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 100 | 100–120 | 120 | 100 | 100–120 |
| தேசிக்காய் | 200 | 240 | 240 | 220 | 240 | 400 | 160 | 250 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 100 | 80–100 | 100 | 120 | 80 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 50 | 60 | 60 | 40 | 70–80 | 60 | 120 | 60–70 |

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 800 | 800 | 600 | 500 |
| நண்டு | 250 | 400 | 400 | 300 | 150 | 450 |
| கணவாய் | 500 | 600 | 600 | 500 | 400 | – |
| பாரை | 500 | 500 | 500 | 550 | 300 | 450 |
| சுறா | 550 | 500 | 600 | 600 | 300 | – |
| சீலா | 200 | 400 | 400 | 400 | 200 | 350 |
| விளை | 600 | 400 | 400 | 450 | 200 | 370 |
| முரல் | 350 | 350 | 400 | 300 | – | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 100 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | 300 | 500 | 100 | 450 |
| ஒரா | 350 | 300 | 350 | 350 | 100 | – |
| திரளி | 250 | 250 | 250 | 300 | 50 | – |
| நகரை | 200 | 250 | 200 | 300 | 100 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 120 | 50 | – |
| ஒட்டி | 250 | 200 | 250 | 300 | 200 | 250 |
| திருக்கை | 150 | 300 | 250 | 280 | 150 | 50 |
| பாலை | 350 | 300 | – | 450 | 100 | – |
| வாழை | 100 | 150 | | 350 | 100 | |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 30 | – |
| மதனம் | 150 | 200 | 200 | 250 | – | 250 |

# தூக்கம் வருவதற்கான ஆலோசனைகள்



ஒவ்வொரு மனிதனும் தினமும் ஆறு முதல் எட்டு மணி நேரம் வரை ஆழ்ந்து சுகமாகத் தூங்க வேண்டும். இப்படி நன்கு தூங்கி எழுந்தால் தான், விழித்திருக்கும் 16 மணி நேரமும் மனமும் உடலும் திறமையுடன் செயல்படும். எனவே இரவில் தூங்க முடியவில்லை என்பவர்கள் கீழ்கண்ட எளிய வழிகளைப் பின்பற்றுவது நல்லது.

இரவு எத்தனை மணிக்குப் படுக்கைக்குச் செல்ல வேண்டும் என்பதை உறுதியாகத் தீர்மானியுங்கள். இரவு தூங்கும் அறை நிசப்தமாகவும், இருட்டாகவும் இருப்பதும் நல் லது , இருட்டுப் பிடிக்கவில்லை எனில் நீல நிற இர[illegible] விளக்கைப் பயன்படுத்தவும். தூங்கும் அறை காற்றோட்டம் நிறைந்ததாக இருக்க வேண்டும். பஞ்சுத் தலையணைகள், பஞ்சு மெத்தைமற்றும் இதமான போர்வை என்பன சுகமான தூக்கத்தை வரவழைக்கும் . தரையிலோ , கட்டிலிலோ படுத் தாலும் பஞ்சு மெத்தையை உபயோகிக்கலாம் தூங்குவதற்கு அரை மணி நேரம் முன்பாக பசும் பால் அருந்துவது நல்லது. இது டிரைப்டோபன் அமிலத்தை மூளைக்கு வழங்குவதால் உடனடியாக நரம்பு மண்டலம் அமைதியாகி உங்களைத் தூங்க வைக்கும் மாலை 4 மணிக்கு பின்னர் காபன் உள்ள தேநீர் மற்றும் மது புகை யிலை போடுவதைத் தவிர்க்கவும்.

(தொடரும்)

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## நம்பிக்கை வேண்டும்

எந்த மனிதன் தன்னைத்தானே வெறுக்கத் தொடங்கி விட்டானோ, அவனுக்கு அழிவின் வாசல் எப்போதோ திறந்துவிட்டது. இது ஒரு நாட்டுக்கும் பொருந்தும். நமது முதல் கடமை நம்மை நாம் வெறுக்காமல் இருப்பது தான். ஏனென்றால் நாம் முன்னேற வேண்டுமென்றால் முதலில் எமக்கு நம்மிடம் நம்பிக்கை வேண்டும். பிறகு கடவுளிடம் நம்பிக்கை வேண்டும். தன்னிடம் நம்பிக்கை இல்லாதவன், கடவுளிடமும் ஒரு போதும் நம்பிக்கை வைக்க முடியாது.

## நாளை

**புரட்டாதி-26**
**செவ்வாய்க்கிழமை**
**13.10.2015**

திதி: பிரதமை முழுவதும்
நட்சத்திரம்:
சித்திரை பி.இ.04.59 வரை
சுபநேரம்: 10.32-12.02 வ[illegible]
இராகு காலம்:
03.02-04.32 வரை
நவராத்திரி விரதாரம்பம்
சங்கரபண்டதர் குருபூஜை

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நி[illegible]யிலும், நிரலிலும் 1-9 வரைய[illegible] எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெலோ உறுப்பினர்கள் மீது பிரான்ஸில் தாக்குதல் முயற்சி

ரெலோ எனப்படும் தமிழ் ஈழ விடுதலைக் கழகத்தின் உறுப்பினர் மீது பிரான்ஸ்ஸில் வைத்து தாக்குதல் நடத்த முயற்சிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனா என்ற கோவிந்தன் கருணாகரம் உள்ளிட்டோர் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று பிரான்ஸின் லாச்சபலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த கூட்டம் இடம்பெற்ற விடுதிக்கு முன்னால், புலம் பெயர்ந்தோர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனா என்ற கோவிந்தன் கருணாகரத்துக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக கொழும்பு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள், குறித்த மாகாண சபை உறுப்பினரை தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அழைத்த போதும் அவர் செல்ல மறுத்த நிலையில், விடுதிக்குள் நுழைந்து அவர் மீது தாக்க முற்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பிரான்ஸ் பொலிஸார், கண்ணீர்ப்புகை பிரயோகத்தை மேற்கொண்டு கூட்டத்தை கலைத்ததுடன், டெலோவின் உறுப்பினர்களை பாதுகாப்பாக அழைத்து சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவம் ஒன்று இம்பெற்றிருந்தமையை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உறுதிப்படுத்தியுள்ளார். (ற-வ)

# வாள்வெட்டு குழுவின் அட்டகாசம் நெல்லியடி பொலிஸார் முறியடிப்பு

வடமராட்சி அல்வாய்ப் பகுதியில் வாள் வெட்டுக்குழுவின் அட்டகாசம் பொலிஸரால் நேற்று மாலை முறியடிக்கப்பட்டுள்ளது என்று நெல்லியடி பொலிஸர் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியை பொலிஸர் சுற்றிவளைத்த போதே கூரிய வாளொன்றுடன் சந்தேக நபர் ஒருவர் மடக்கிப்பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் இச்சுற்றிவளைப்பின் போது நால்வர் தப்பி யோடி விட்டனர் என்றும் தெரிவித்த பொலிஸார் தப்பியோடியோர் வலைவீசி தேடப்படுகின்றனர் என்றும் நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

அல்வாய் மனோகரா விளையாட்டு கழகத்திற்கு அருகில் நேற்றுமாலை 5 மணியளவில் கூரிய வாள்கள் ஆயுதங்களுடன் கும்பல் ஒன்று அட்டகாசம் செய்கின்றது என்று பொதுமக்களால் நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது . இந்த நிலையில் அங்கு சென்ற நெல்லியடி பொலிஸார் அப்பகுதியை சுற்றிவளைக்க முற்பட்டுள்ளனர். இந்தநிலையில் பொலிஸாரிடம் இருந்து தப்பியோட முயன்ற நபர் ஒருவரை பொலிஸார் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்து கைது செய்தனர். அவருடன் அட்டகாசத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் 4 பேர் தப்பியோடி விட்டனர் என்றும் அவர்களைத் கைது செய்யும் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் நேற்று மாலை அதிகளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டு தீவிர தேடுதல்கள் நடத்தப்பட்டன. கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து 3 அடி நீளமான வாளொன்று கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் அல்வாய் திடல் பகுதியை சேர்ந்தவர் என்றும் அவரிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் நெல்லியடி பொலிஸார் குறிப்பிட்டனர். இதேவேளை வடமராட்சியில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் துப்பாக்கி ஒன்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் அல்வாய் பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை வடமராட்சி வதிரிச் சந்தி அல்வாய் மற்றும் பல்வேறு பகுதிகளில் அண்மைக்காலமாக ரவுடிக்கும்பல்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று பொதுமக்கள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றனர். (ற -109)

## மரண அறிவித்தல்

### சின்னலாந்தேசு சுதந்திரநாதன்

நல்லூர் தெற்கு, 23/3 அரச வீதியைப் பிறப்பிடமாகவும் லண் டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னலாந்தேசு சுதந்திரநாதன் கடந்த 05.10.2015 திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சின்னலாந்தேசு மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஜெகநாதன் (Holland), பத்மநாதன், செல்வநாதன் (டென்மார்க்), ஜெகதாம்பிகை, காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் விமலநாதன் (டென்மார்க்), விஸ்வநாதன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு சகோதரனும், பத்மாவதி, செல்வராணி, சரஸ்வதி, காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் வசந்தா, சந்தியா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

23/3, அரச வீதி, நல்லூர்.

தகவல் : குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது மனைப் பொருளியல் ஆசிரிய ஆலோசகர் செல்வி ம.மங்களவதனி அவர்களின் தந்தை இ.மகாதேவா அவர்கள் 10.10.2015 இல் காலமாகியதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைப் பொருளியல் ஆசிரியர் நலன்புரிசங்கம்,

## மரண அறிவித்தல்



### நடராசா செல்வராசா

கொக்குவில் கிழக்கு நந்தாவில் லேணைப் பிறப்பிட மாகவும் 44, கோணாவிலில் வசித்தவரும் சுதுமலை வடக்கு, ஈஞ்சடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா செல்வராசா நேற்று(11.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா செல்வரத்தினம் தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் தங்கநாயகியின் அன்புக் கணவரும் கலாவாணி (ஆசிரியர், பளை மத்திய கல்லூரி), திகழ்ஜோதி (ஆசிரியர், இணு வில் இந்துக் கல்லூரி), பத்மாசினி (பிரதேச சபை, மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோகரன், பிரபானந்தன் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), இராஜரூபன் (தேவன்சன், சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மாமனும் செல்வநாயகியின் அன்புச் சகோதரனும் தேசாலினி, அனுஸ்காந், சிவசாந், லிசாயினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2015) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி ஒழுங்கை, ஈஞ்சடி. சுதுமலை வடக்கு, மானிப்பாய்

தகவல்: குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16.05.1953

மறைவு 23.09.2015

திதி: அமாவாசை

அமரர்

### சங்கரன் பாஸ்கரன்

நேற்றுவரை குடும்ப தலைவனாய்
நம்முடன் வாழ்ந்த அப்பா!
நம்மைவிட்டு பிரிந்து ஓராண்டு
சென்றாலும் ஓயாத நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இல. 202/5, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### வேலுப்பிள்ளை மகாலிங்கம் (தமிழ் ஐயா)



கிளிநொச்சி விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் ஸ்தாபகரும் எமது இல்லக்குழந்தைகளுக்கு ஆரம்ப காலத்தில் தமிழ்க் கல்வியைப் போதித்த தமிழ்க் கல்விமானுமான தமிழ் ஐயா என்று அழைக்கப்படும் வே. மகாலிங் கம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின் றோம்.

கிளிநொச்சியின் விஞ்ஞான, கணித கல்வி வளர்ச்சியிலும் சமய வளர்ச்சியிலும் இவரது பங்களிப்பு அளப்பரியது. இவரது இழப்பு தாங்கமுடியாதது. இவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் எமது இல்லத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங் களைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.


தலைவி, பணியாளர்கள், பிள்ளைகள், இல்லக்குழந்தைகள்,
[illegible]
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை மகாலிங்கம்

(தமிழ் ஐயா - திருநெறிக்கழகத் தலைவர்)



புதுத்தோட்டம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி கிருஷ்ணர் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை மகாலிங்கம் (தமிழ் ஐயா - திருநெறிக்கழகத் தலைவர்) 10.10.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற உமாதேவியின் அன்புக் கண வரும், காலஞ்சென்றவர் களான சிதம்பரப்பிள்ளை - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும், குமரன், மீனாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கௌசிகாவின் அன்பு மாமனாரும், ஹாசினி யின் பாசமுள்ள அப்பப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.10.2015 திங்கட்கிழமை Dr.வசந்தி, இலகடி வீதி, கரவெட்டி மத்தி என்னும் முகவரியில் மு.ப 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அஞ்சலிக் காக கரடிப்போக்கு விஞ்ஞானக்கல்வி நிலையம் கிளிநொச்சி எனும் முகவரியில் மு.ப 11.00 மணியளவில் வைக்கப்பட்டு பின் கரவெட்டி சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு : 0772947104

தகவல் : குடும்பத்தினர்.

### அன்ரனிகுறூஸ் இக்னேசியஸ் இரட்ணராஜா (றவி)



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனிகுறூஸ் இக்னேசியஸ் இரட்ணராஜா (றவி) நேற்று(11.10.2015) ஞாயிற்றுக்கிழமை இறைவனடிசேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை அன்ரனி குறூஸ் மற்றும் அன்ரனி குறூஸ் கத்தறின் (செல்லம்மா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர் களான றெமு வோல்டர், ஆரோக்கியம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிகஜசிந்தாவின் (றாணி) அன்புக் கணவரும், பிறாங் ஜொணத்தன் (பிரான்ஸ்), அன்றியா (கனடா), அன்டசன் (பிரான்ஸ்) ஆகி யோரின் அன்புத் தந்தையும், தனேந்திரன் நிறோசன் (கனடா), ஜெனற் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், அன்ரன் செல்லக்குமார், மேரி பெனிக்னா (பாறேன்), மேரிஅஞ்சலா, ஜோன்சன் பொபி (அமெரிக்கா), பிறீடாபிறின்சி (லண்டன்), றேமன்ட் ஜோசப் றாஜன், றெமீஜியஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமலசீலி, பியர் (பாறேன்), அல்போன்சஸ், ஜெயந்தினி (அமெரிக்கா), றொனி ஜோய்ச் (லண் டன்), ஜோதினி, காலஞ்சென்ற குமார், மற்றும் அருள் சீலி, ஜெறாட் விஜயன், புளோறில்டா, றாஜினி (சுவிஸ்) ,வசந்தரூபி (நோர்வே), வினிபிர ட்ஈஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள். தொடர்பு: 021 222 9514

### சின்னத்தம்பி செல்லம்மா



வட்டு வடக்கு சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லம்மா நேற்று 11.10.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும், காலஞ் சென்றவர்களான அருளம்பலம்– சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், கதிரவேலு– பொன்னு தம்பதியரின் இளைய மகளும், புவனேஸ்வரி, அருந்தவநாதன், கையிலாயநாதன், ஏகாம்பரம், நாகேந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ,காலஞ் சென்றவரான கணபதிப்பிள்ளை மற்றும் திலகவதி, உதயராணி, ரஞ்சினிதேவி, கலைவாணி, சித்திரகலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து, கோவிந்தபிள்ளை, முத்தையா பார்வதி, இலட்சுமிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.10.2015) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு வடக்கு, சித்தன்கேணி.

தகவல்:- குடும்பத்தினர்.

## ஜோசப் கொலை

பினருமான சிவநேசதுரை சந்திர காந்தன்குற்றப்புலனாவுப்பிரிவிற்கு நேற்று மாலை 5 மணியளவில் அழைக்கப்பட்டிருந்தார். வாக்கு மூலங்கள் பெறப்பட்ட பின்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை கொலை செய்த கொலையாளி உள்ளடங்கலாக இலங்கையில் பாரதூரமான குற்றங்களைப் புரிந்துவிட்டு வெளிநாடுகளுக் குத் தப்பிச் சென்று வாழும் குற்றவாளிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில், பிள்ளையானை விசாரணைக் காக அழைத்துச் செல்ல நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு குற்றப்புலனாவு பிரிவினர் பேத்தாளையிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்றபோதும் அந்தச் சமயம்அவர் அங்கு இருக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

பின்னர் வழக்கறிஞர் ஊடாக குற்றப் புலனாய்வுபிரிவினர்முன்னிலையில் பிள்ளையான் முன்னிலையாகி இருந்தார் என்று தமிழ்மக் கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரான பி. பிரசாந்தன் கூறினார்.

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் ஏற்கனவே கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் உறுப்பினர்களான பிரதீப் மாஸ்டர் எனப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா மற்றும் கஜன் மாமா எனப்படும் ரெங்கசாமி கனக நாயகம் ஆகியோர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

(ற-சி)

## போர்க்

இதன்மூலம் , இலங்கை அரசியல் அமைப்பின் படி உள்ளூர் நீதிபதிகளை அரசு நியமிப்பதுடன் அரச உயர் சட்டவாதிகளே, போர்க் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான வழக்குகளைத் தாக்கல் செய்து விசாரணை செய்வார்கள்.

(ற-வ)

## 4 ஆணைக்குழுக்க

குழுக்களுக்குமான பிரதிநிதிகளின் பெயர்கள் இறுதி செய்யப்பட்டு அனுமதிக்காக ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவிடம்அனுப்பிவைக் கப்பட்டன.

அதற்கமைய நான்கு சுயாதீன ஆணைக் குழுக் களுக்குமான பிரதிநிதிகளின் பெயர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை பெயரிடவுள்ளார்.

எஞ்சிய 6 சுயாதீன ஆணைக்குழுக் களான தேசிய நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, சுயாதீன கணக்காய்வு ஆணைக் குழு, சுயாதீன கொள்முதல் ஆணைக்குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றுக் கான பிரதிநிதிகளின் பெயர்கள் நவம்பர் 4ஆம் திகதி கூடவுள்ள அரசமைப்புப் பேரவையின் அடுத்த கூட்டத்தில் பெயரிடப்படவுள்ளன.

தேசியபொலிஸ்ஆணைக்குழுவுக்கு ஓய்வு பெற்றவர்களான பிரதிப் பொலிஸ் மா அதிபர் குணசேன தேனப்பாடு, காமினி டீ சில்வா, பி.எஸ்.மனதுங்க ஆகியோரும், பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு முன்னாள் அமைச் சின் செயலாளர் டி.திஸாநாயக்க ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

முழு அதிகாரங்களுடன் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மீள நிர்மாணிக் கவுள்ளதுடன் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பீ. வீரசூரிய இந்தக் குழுவின் தலைவராகவும் நியமிக்கப்படவுள்ளார்.

அதனூடாக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில்தேங்கிக்கிடக்கும் ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகளை விசாரணை செய்யத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-சி)

## விரைவில்

அல்லது புதிய பொறிமுறை ஒன்றை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி மெக்ஸ்வல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு காணமற்போனவர்கள் தொடர்பானவிசாரணைகளைமேற்கொண்டது.பெரும்பான்மையானவர்கள் இந்த ஆணைக் குழுவின் நடவடிக்கைகள் குறித்து நம்பிக்கை கொள்ளவில்லை என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் இந்த நடவடிக்கைகள் கைவிடப்படமாட்டாது என அவர் உறுதியளித் துள் ளார். இந்த ஆணைக்குழுவிற்கு பதிலீடாக புதிய பொறிமுறைமை ஒன்றை உருவாக்க அரசு தீர்மானித்துள்ளது என்றுஅவர் குறிப் பிட்டுள்ளார்.

காணாமற்போனவர்கள் தொடர்பிலான ஆணைக்குழுவின் மீது சர்வதேச சமூகத்திற்கு நம்பிக்கையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.பயங்கரவாததடைச்சட்டத்தை நீக்குமாறு ஐ. நா. மனித உரிமைகள் சபை கோரி வருகின்றது என்றும் அது குறித்தும்அரசுகவனம்செலுத்தி வருகின்றது என்றும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளக்கூடிய மிகப்பொருத்தமான சட்டமொன்று அறிமுகம் செய்வது குறித்து கவனம் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள அவர் அது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, காணாமற்போனவர்கள் தொடர் பிலான விசார ணைகளை தமது ஆணைக்கு ழுவைத் தவிர வேறு எந்த தரப்பினாலும் திறம்பட செய்ய முடியாது என ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார்.

(ற-வ-5)

## அடுத்துவரும்

அதிகரிக்கப்படவுள்ளது. 2015ஆம் ஆண்டில் 47.6 பில்லியன் ரூபா கல்வி அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும் 2016 ஆண்டு 185.9 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய் யத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி அலுவலகத்துக் கான நிதி ஒதுக்கீடு பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு 9.6 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் 2016 ஆம் ஆண்டுக்காக 2.3 பில்லியன் ரூபாவே ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கு 237 பில்லியன் ரூபாவும் பல்கலைக்கழக கல்வி மற்றும் பெரும் தெருக்கள் அமைச்சுக்கு171பில்லியன்ரூபாவும் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு 156 பில்லியன் ரூபாவும், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு 107 பில்லியன் ரூபாவும் சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சுக்கு 174 பில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 2016ஆம் ஆண்டுக் கான மொத்த செலவினம், 1914 பில்லியன் ரூபாவாக இருக்கும், என்றும், மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட் டத்தினை அடுத்த மாதம் 20 ஆம் திகதி நாடா ளுமன்றில் சமர்ப்பித்து நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உரையாற் றுவார். (ற-வ)

## நிபந்தனை

டிலிருந்துநிதியமைச்சர்ரவிகருணாநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் அரசியலில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றத் தின் மூலம் சர்வதேச நாணய நிதியம் கடன்வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

கடன் மற்றும் உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச நாணயநிதியம் எவ்வித நிபந்தனை களையும் முன்வைக்கவில்லையென நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கடன்களைப் பெற்றுக்கொள் வதன் மூலம் மக்களின் வரிச்சுமை அதிகரிக்கப்படும் என சிலர் குற்றஞ்சுமத்துவது நியாயமற்றது எனவும்அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல், கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளை மேம்படுத்தல், பெண்களின் வாழ்வை மேம்படுத்தல் ஆகியவற்றை மையப் படுத்திஉதவிகள்வழங்கப்படுவதாக நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

(ற)

## அமெரிக்கத்

உள்ளிட்ட 12 நாடுகள் இணை அனுசரணை வழங்கியிருந்தன.

இதையடுத்து இந்த மாதம் 16ஆம் திகதி வரை இந்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க முடியும் என்று ஐ.நா. மனித உரிமைகள்சபையின்அலுவலகம்அறிவித்திருந்தது.

இந்தநிலையில்மேலும் 26 நாடுகள், இணை அனுசரணை வழங்குவதாக ஏற்கனவே அறிவித்திருந்தன. இதனால் இணை அனுசரணை நாடுகளின் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்தது.

இதனிடையே, நியூசிலாந்தும், இந்த இணை அனுசரணை நாடுகளுடன் புதிதாக இணைந் துள்ளதையடுத்து, தீர்மானத்துக்குஇணை அனுசரணை வழங்கும்நாடுகளின் எண் ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது. (ற-வ)

## போர்க்குற்றத்துக்கு

சர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசு உருவாக்கவுள்ள விசாரணைப் பொறி முறையின் கடும்போக்கற்ற தன்மைகாரணமாகபோர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகும் இலங்கைப் படையினர் விசாரணைகளை எதிர்கொள்ளவேண்டிய நிலையேற்படாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் முதலில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்நிலையில் ஒப்புதல் வாக்கு மூலத்தை வழங்குவதற்கு ஏற்பாடுகள் குறித்து திட்டமிடப்படுகின்றது .

இதன் பின்னர் அவர்கள் தொடர்பான வழக்கு, மத்தி [illegible] தலைவர்களைக் கொண்ட கருணை சபை முன்னி லையில் ஆராயப்படும். அவ்வாறான விசாரணை யின் பின்னர் கருணை சபை குற்றம்சாட்டப்பட்ட வர் களுக்கு மன்னிப்பை வழங் கலாம்.

மேலும் தேசிய கலந்துரையாடல்கள் மற்றும் அனுசரணை வழங்கும் தரப்பினருடன் கலந்து ரையாடல்கள் போன்றவை பூர்த்தியான பின்னரே விசாரணைப் பொறி முறையின் வடிவம் மற்றும் அதில் வெளிநாட்டு பிரதிநிதித்து வம் காணப்படவேண்டுமா? என்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

இந்த கலந்துரையாடல்கள் வரும் ஜனவரி மாதத்திற்குள் பூர்த்திசெய்ய அரசு விரும்புகின்றது. அரசு ஏற்படுத்தவுள்ளது கலப்பு பொறிமுறையில்லை. ஆனால் அது குறித்த நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதற்காக சர்வதேச நிபுணத் துவம் பெறுப்படும்.

இறுதியாக, விசேட வழக்கறிஞர்கள் முடிவுகளை எடுப் பார்கள். இதில் வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணையாளர்கள் இருப்பார்கள். - என்று தெரிவித்தார்.

இதேவேளை போர்க் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகும் படையினர் சார்பில் முற்படுவதற்கு சட்டத்தரணிகளை அரசு அமர்த்தவுள்ளது என்றும் அதற்கான செலவையும் பொறுப்பேற்க உள்ளது என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இந்த உறுதிமொழியை படையினருக்கு வழங்கியுள்ளார்.

ஐ. நா. விசாரணை அறிக்கை தொடர்பாக முப்படையினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியும், பிரதமரும் விடுத்தவேண்டுகோள்களின் படி படையினரை சந்தித்து உரையாடியவேளையே அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கி யுள்ளார்.

(ற-வ-5)

**விற்பனைக்கு**
அத்திபாரத்திற்குரிய கண்டகல் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 375 4040

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
2015-10-11 | 1888 | ஊதா
வெற்றி இலக்கங்கள்
08 09 14 52
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி
ரூ.2,725,360/-

ஜனஜய
வெற்றி வாரம் 677 | திகதி 2015.10.11
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
B 07 08 19 37
அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.7,607,660/-

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
திரு. கிறகரி பிலிப் பேர்மினஸ்
(கலாபூஷணம்)
எமது ஒஸ்லோ பேர்கன் இணையத்தின் செயலாளர் கலாபூஷணம் திரு.கிறகரி பிலிப் பேர்மினஸ் அவர்கள் 2015ஆம் ஆண்டு முதியோர் தினத்தை முன்னிட்டு "மானிடம் வெல்லும்" எனும் தலைப்பில் எழுதிய சிறுகதை மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தையும் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றதையிட்டு நாம் பெரு மகிழ்வடைகின்றோம். இவரது கலைப்பணி மேலும் தொடரவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஒஸ்லோ பேர்கன் இணையம் (நோர்வே) குருநகர், யாழ்ப்பாணம்.



**வீடு வாடகைக்கு உண்டு**
நாவலர் வீதியில் அமைந்துள்ள விசாலமான வீடு வாடகைக்கு விடப்படும்
5 விசாலமான அறைகள்,வாகன தரிப்பிடவசதி என்பன உண்டு.
அலுவலக பாவனைக்கு விரும்பத்தக்கது.
தொடர்பு : 071 444 9816

**வீடு வளவு விற்பனைக்கு** அல்லைப்பிட்டி 1ஆம் வட்டாரம் பிரதான வீதிக் கண்மையில் 10 நிமிடத்தில் யாழ்நகரை அடையக் கூடிய தூரத்தில் நன்னீர்க்கிணறு, பயன்தரு மரங் களுடன் கூடிய திருத்தம் செய்யப்பட்டதும் புதிதாக இணைக்கப்பட்டதும் மாபிள் பதிக்கப்பட்ட 5 பரப்பில் அமைந்துள்ள அழகிய வீடு விற்பனைக் குண்டு. விலை 32 இலட்சம் ரூபா. தொடர்பு : 021 205 4016

**மெண்டலின் இசைக்கச்சேரி**
வழங்குவோர்
செல்வன் மகேஸ்வரன் மதுவந், செல்வன் மகேஸ்வரன் ஜதீஸ்வர் (சுவிஸ்)
இடம்: இணுவில் சிவகாமி அம்மன் கோயில் மண்டபம்
காலம்: 13.10.2015 செவ்வாய் மாலை 4.00 மணி
அணிசேர் கலைஞர்கள்
மிருதங்கம்: நல்லை ஜீ. கண்ணதாஸ், தவில்: திரு. ஆர். ஆனந்த கணேசன்
முகர்சிங்: திரு. ஆர். மகேஸ்வரன்
இசையார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்
இணுவில் — இராசையா மகேஸ்வரன் குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு அத்தாட்சிப்பத்திரம் வழங்க அரசு தீர்மானம்

## ஆங்கில ஊடகம் விவரிக்கிறது



போரின் போது கொல்லப்பட்ட தமிழ் மக்கள் மற்றும் காணாமற்போனோர் விவகாரம் சர்ச்சைக்குரிய ஒன்றாக மாறியுள்ளது. குறிப்பாக போரின் இறுதிக்கட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பாகத் தற்போது பல்வேறு அழுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு, கொழும்பில் இருந்து அமந்தா பெ[illegible]ா மற்றும் புதுடெல்லியில் இருந்து ஜாசன பேர்க்கும் இணைந்து கொழும்பு சிலோன் ருடே நாளிதழில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளனர். அந்தப் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் 26 ஆண்டுகளாக நடந்த உள்நாட்டுப் போரின் போது காணாமற்போன பல ஆயிரக்கணக்கானவர்களின் குடும்பங்களுக்கு, காணாமற்போயுள்ளமையை உறுதிப்படுத்தும் அத்தாட்சிப் பத்திரங்களை அரசு வழங்க வேண்டிய நிலையிலுள்ளது.

இவ்வாறான அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படுவதானது போரின் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள ஆழமான வடுக்களை ஆற்றுவதற்கான ஒரு முக்கிய நகர்வாக நோக்கப்படுகிறது.

காணாமற் போனவர்களின் உறவுகளால் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் அழுத்தங்களைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஐ. நா. அண்மையில் இலங்கை மீது தீர்மானம் ஒன்றை இயற்றிய நிலையிலேயே தற்போது காணாமற் போனவர்களை உறுதிப்படுத்திய அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இரகசியத் தடுப்பு முகாம்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கைகளை விசாரணை செய்யுமாறும், 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் காணாமற் போனவர்களுக்குத் தற்போது என்ன நடந்துள்ளது என்பதை உறுதிப்படுத்தும் நம்பகமான மற்றும் சுயாதீன பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறும் ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் செய்ட் றாட் அல் ஹுசைன் இலங்கை மீது அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் பெரும்பான்மைச் சிங்கள சமூகத்துக்கும் சிறுபான்மைத் தமிழ் சமூகத்துக்கும்[illegible]டையிலான போரின் போது காணாமற் போனவர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கப் பெறவில்லை. காணாமற் போனவர்களின் எண்ணிக்கை மிக அதிக மாகும்.

இந்நிலையில், போரின் போது கொல்லப்பட்ட தமிழ் மக்கள் மற்றும் காணாமற் போனோர் விவகாரம் சர்ச்சைக்குரிய ஒன்றாக மாறியுள்ளது. குறிப்பாக போரின் இறுதிக்கட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பாகத் தற்போது பல்வேறு அழுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவானது, 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை 20,000 வரையான முறைப்பாடுகளைப் பெற்றுள்ளது. இவற்றுள் அரச படைகளிலிருந்து காணாமற்போன 5000 பேர் தொடர்பான முறைப்பாடுகளும் உள்ளடங்குகின்றன.

1990 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் கா[illegible]மற்போனவர்கள் தொடர்பான பதிவைப் பேணும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமானது இதுவரை 16,604 முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளது. இதேவேளையில் 40,000 வரையான மக்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என ஐ.நா அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் இன்னமும் இரகசிய தடுப்பு முகாம்கள் உள்ளதாகப் பல்வேறு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. அத்துடன் இந்த முகாம்கள் எங்குள்ளன என்பது இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாகத் துரித விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதச் சட்டங்களின் கீழ் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விபரங்களை இலங்கை அரசு இன்னமும் தெளிவுபடுத்தவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலையான அபிவிருத்தி மற்றும் மீளிணக்கப்பாடு ஆகிய இரண்டுமே தனது இலக்குகளாக உள்ளதாக நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐ.நா பொதுச் சபை கூட்டத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். கடந்த கால மீறல்களைச் சரிசெய்து, நேர்மையுடன் செயற்படுவதுடன் நவீன இலங்கையை உருவாக்குவதே தற்போதுள்ள அடிப்படைத் தேவையாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகள் தொடர்பில் விசாரணை செய்து நீதியை நிலைநாட்டுவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

காணாமற் போனவர்கள் தொடர்பில் அவர்களது குடும்பத்தினருக்கு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குவதானது மேற்குலக நாடுகளின் அழுத்தத்தின் பேரால் ஏற்பட்டதல்ல என சுகாதார அமைச்சரும் அரச பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

நாங்கள் மக்களின் முன்னால் சென்று அவர்களது வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் போது சில வாக்குறுதிகளை வழங்கியிருந்தோம். இந்த அடிப்படையிலேயே எமது அரசு தற்போது செயற்படுகிறது. உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்பதில் நாங்கள் இதயசுத்தியுடன் செயற்படுகிறோம். இதற்கான நகர்வுகளையே நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பது தொடர்பில் உண்மைகளைக் கண்டறிய நாங்கள் நடவடிக்கை எடுப்போம். ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்களும் உண்மையை எதிர்பார்த்து நிற்கிறார்கள். இதற்காக நாங்கள் இப்போது செயற்படுகிறோம் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

காணாமற் போனவர்கள் தொடர்பில் அவர்களது குடும்பங்களுக்கு வழங்கப்படும் அத்தாட்சிப் பத்திரங்களைக் கொண்டு அவர்கள் இலங்கைஅரசின் பல்வேறு திட்டங் களின் கீழ் இழப்பீட்டைப் பெற்றுக் கொள் வதற்கு அனுமதிக்கப்படுவர். இதன் மூலம் காணாமற் போனவர்களின் உறவுகள் ஓய்வூதியத்தையும் நில உறுதிகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

காணாமற் போனவர்களின் உறவுகள் இவற்றை முன்னர் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. இது தொடர்பான முதலாம் கட்ட அத்தாட்சிப் பத்திரங்கள் இவ்வாண்டு இறுதிக்குள் வழங்கப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

காணாமற் போனவர்களின் குடும்பத்தினருக்கு எத்தகைய தேவைகள் உள்ளன என்பது தொடர்பில் இலங்கைத் தீவு முழுமையிலும் நவம்பர் 2014 தொடக்கம் இவ்வாண்டு யூலை மாதம் வரை மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளதாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் சரசி விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

காணாமற் போனவர்களின் குடும்பத்தினர் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளை முன்னுரிமைப்படுத்தித் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கடந்த சில ஆண்டுகளாக இலங்கை அரசிடம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

காணாமற் போனவர்களின் குடும்பத்தினரின் உரிமைகள் தொடர்பாக மட்டுமன்றி இவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பாகவும் இந்தக் குடும்பங்களுக்கு என்ன தேவை என்பதையும் கண்டறிவதற்கான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் விஜயரட்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மைச் சிங்கள சமூகத்திடமிருந்து பெரியளவில் ஆதரவைப் பெறமுடியாத தீர்மானம் ஒன்றை முன்னெடுக்க நாம் விரும்புவதாகவும் நாடாளுமன்றில் அதிக ஆசனங்கள் கிடைத்தால் இதனைச் செயற்படுத்துவேன் எனவும் கடந்த ஓகஸ்ட்டில் பொதுத் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரிகளிடம் தெரிவித்திருந்தார்.

> **இலங்கையின் இறுதிக்கட்ட போரின் போது பல்வேறு மீறல்கள் இடம்பெற்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான பலமான சாட்சியங்கள் காணப்படுவதாகவும், இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் எனவும் ஐ.நா வலியுறுத்தியுள்ளது.**

கடந்த பொதுத் தேர்தலில் சிறிசேனவின் கூட்டணிக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று நாடாளுமன்றின் அறுதிப்பெரும்பான்மையை வென்றெடுத்துள்ள நிலையில், அரசியல் யாப்பில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான நகர்வுகளை முன்னெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசு, இந்த விடயத்தில் மிக மெதுவாகச் செயற்படுவதாகவும், எல்லாத் தரப்பினரையும் நம்பவைத்து இதனை முன்னெடுப்பதற்கு சிறிது காலம் பிடிக்கும் என தேசிய சமாதானப் பேரவையின் நிறை வேற்று இயக்குனர் ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஆனாலும் அத்தாட்சிப் பத்திரங்கள் என்பது தமிழ் மக்கள் மத்தியில் திருப்தியை வழங்கவில்லை என தமிழ் அரசியல்வாதியான சி.வி.கே சிவஞானம் தெரிவித்துள்ளார்.

காணாமற் போனவர்களுக்கான அலுவலகம் அமைக்கப்பட்டு, அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படுதல் வரவேற்கப்படுகின்ற விடயமாகும். ஆனாலும் பொறுப்புக்கூறல் என்பது இதை விட முக்கியமாகும். காணாமற் போதலை உறுதிப்படுத்துவதற்கான இலங்கை அரசின் சாட்சியம் ஒன்று இருப்பது நல்லது. ஆனால் இவ்வாறான மீறல்களுக்கு யார் பொறுப்பு என்பதையும் அவர்கள் இது தொடர்பில் பதிலளிக்க வேண்டும் என்பதுவும் இங்கு தவிர்க்க முடியாது என வடக்கு மாகாண சபைத் தவிசாளர் சி.வி.கே. சிவஞானம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் இறுதிக்கட்ட போரின் போது பல்வேறு மீறல்கள் இடம்பெற்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான பலமான சாட்சியங்கள் காணப்படுவதாகவும், இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் எனவும் ஐ.நா வலியுறுத்தியுள்ளது.

[illegible]களைக் கொண்ட ஐ.நா அறிக்கையில், இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள், படுகொலைகள், பலவந்தமான காணாமற் போதல்கள், வண்புணர்வுகள் மற்றும் தமிழ்ப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், படுகொலைகள், சிறுவர் ஆட்சேர்ப்புக்கள் தொடர்பாகவும் விவரிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். போரில் ஈடுபட்ட இருதரப்பினரும் பல்வேறு போர் மீறல்களைப் புரிந்ததாக இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சிலநாடுகள் கோரிக்கை விடுத்திருந்தன. ஆனால் இவ்வாறானதொரு தீர்மானத்தை இலங்கை கடந்த பல ஆண்டுகளாக எதிர்த்து நின்றது.

போர் மீறல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணையின் மூலம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசின் முக்கிய பல அரசியல்வாதிகளும், இராணுவ உயர் அதிகாரிகளும் தமிழ்ப் புலிகளும் தண்டனை அனுபவித்திருப்பார்கள்.

சர்வதேச் சமூகத்தின் பங்களிப்புடன் இலங்கையில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கை அரசுடன் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கையின் பிரகாரம் சர்வதேச சமூகம் தனது பங்களிப்பை வழங்கும்.

இவ்வாறான மீறல்கள் தொடர்பில் எவரும் தண்டிக்கப்பட வேண்டியிருந்தால் அதற்கான மேலதிக நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு உண்மை நிலைநாட்டப்படும். இது சூனிய வேட்டையல்ல. இது தேசிய ரீதியில் மேற்கொள்ளப்படும் உண்மையைக் கண்டறிவதற்கான ஒரு நகர்வாகும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

போர்க் குற்ற விசாரணை என்பது ஜனா[illegible]தி சிறிசேனவின் முன்னுள்ள ஒரு சவாலா[illegible]ம். இதற்கு முதல் ஆட்சியிலிருந்த ராஜ[illegible]க்ச இவ்வாறான விசாரணைகளை முற்றி[illegible]ம் நிராகரித்திருந்தார். இது தொடர்பில் [illegible] போதும் ராஜபக்சவுக்கும் அவரது குடு[illegible]த் தினருக்கும் தேசிய அளவில் மிகப் பல[illegible] ஆதரவு காணப்படுகிறது.

குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை[illegible] வழங்குவதற்கான ஐ.நாவின் அழைப்[illegible] தான் வரவேற்பதாக, 2010 ஆம் [illegible] இலங்கைப் படையினரால் கடத்தப்பட்ட[illegible] சந்தேகிக்கப்படும் ஊடகவியலாளர் எ[illegible] கொடவின் மனைவியான சந்தியா [illegible] கொட, கார்டியன் ஊடகத்துடனான [illegible] காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் இலங்கை அரசு, த[illegible] வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவே[illegible] வதற்கான நகர்வுகளை முன்னெடுக்க[illegible] யுமா என்பதை ஆராய வேண்டும். அ[illegible] மீளிணக்கப்பாடு தொடர்பில் கடின[illegible] தீர்மானங்களை முன்னெடுக்க அரசு [illegible] புகிறது எனவும் திருமதி எக்னலிகொட[illegible] காட்டியுள்ளார்.

நன்றி–புதினப்ப[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணத்தைக் கைப்பற்றியது நித்தம்புவ மகளிர்
# முரளி கிண்ணத்தில் இணைந்த மகளிரை வீழ்த்தி



யாழ்ப்பாணம், ஒக். 12
நடப்பு வருட முரளிக்கிண்ணத் தொடரின் பெண்கள் பிரிவில் நித்தம்புவ மகளிர் அணி இணைந்த மகளிர் அணியை 5 இலக்குகளால் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இணைந்த மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க, ஆரம்ப வீராங்கனைகளாக களத்தில் மாதவி மற்றும் சில்வா. 7 ஓட்டங் களுடன் சில்வா ஆட்டமிழக்க வந்தவேகத்தில் விடைபெற்றார் ரஞ்சனா. தற்பொழுது இணைந்த மகளிர் அணி 27–2. மாதவியுடன் இணைந்தார் மகிந்தல. இலக்குச்சரிவு நிறுத்தப்பட்டது. ஆனால் ஒருநாள் ஆட்டங்களுக்கும் கீழான சராசரியே பேணப்பட்டது. அதுவே இணைந்த மகளிர் அணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்த 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகள் இழப்புக்கு 109 ஓட்டங்களைப் பெற்றது அந்த அணி. அதிகபட்சமாக மகின்சலா 29 ஓட்டங்களையும் மாதவி 25 ஓட்டங்களையும், அனாலி 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நித்தம்புவ மகளிர் அணி சார்பாக மதுசிகா 2 இலக்குகளையும் தருசி, காஞ்சனா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

120 பந்துகளில் 110 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நித்தம்புவ மகளிர் கல்லூரி அணி. முன்வரிசை வீராங்கனைகளின் சிறந்த பங்களிப்புடன் 19.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக தருசி 25 ஓட்டங்களையும் ரணபாகு 21 ஓட்டங்களையும், மதுசிகா இறுதிவரை ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இணைந்த மகளிர் கல்லூரி சார்பாக ஜெயவர்தன, சந்திபனி தலா 2 இலக்குகளையும் டில்காரி ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

## மானிப்பாய் இந்து அசத்தல்

வலி வடக்கு, ஒக். 12
மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டத்தில் 14வயதுப்பிரிவின ருக்கான ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. ஏனைய பிரிவுகளில் (16வயது, 18வயது, 20வயது) மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றிபெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற இந்த இறுதியாட்டங்களில் 14 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கிலும் 18 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 3:1 என்ற கோல் கணக்கிலும் 20 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 5:1 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்றது. (ம–86)

# சென்.மேரிஸுக்கு இலகு வெற்றி




யாழ்ப்பாணம், ஒக். 12
இலங்கை உதபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டுவரும் பிரிவு 2 அணிகளுக்கான ஆட்டம் ஒன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கேகாலை மாயா அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

# இறுதிக்குச் சென்றது வாலிபர்

யாழ்ப்பாணம், ஒக். 12
அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 8ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் இரு பிரிவாக யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவு அரையிறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி வெற்றி பெற்று இறுதி யாட்டத்துக்கு தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 7மணிக்கு ஸ்ரார் வி.கழக மைதானத்திலேயே இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி 25:19, 25:23, 27:25 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம–23)



நடப்பு வருடத்துக்கான முரளிக் கிண்ண இறுதியாட்டங்கள் நேற்று ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன. குறித்த இறுதியாட்டங்களை சுழல் ஜாம்பவான் முரளிதரன் நேரில்சென்று பார்வையிட்டார்.

# தேசியமட்ட கோலூன்றிப்பாய்தலில் தமிழ் மாணவிகள் அசத்தல்





மாங்குளம், ஒக். 12
தேசியமட்ட கோலூன்றிப் பாய்தலில் பெண்கள் பிரிவில் கணிசமான பதக்கங்கள் யாழ். மாவட்டத்துக்கு கிடைத்துள்ளன.

21வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த மேரி பௌசினா 2.8 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், எம்.கமலினி 2.8 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும், 19 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த ஜெ.அனித்தா 3.2 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர். அனித்தா கடந்த வருடம் நடைபெற்ற கோலூன்றிப் பாய்தலில் 3.3 மீற்றர் உயரம் பாய்ந்து தேசியமட்ட சாதனையைச் சமப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம–422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் ஆனந்தா வசம்

# வீழ்ந்தது ரிச்மன்ட் கல்லூரி





யாழ்ப்பாணம், ஒக். 12
நட்புப் வருடத்தின் முரளிக் கிண்ணத் தொடரில் நேற்றுநடைபெற்ற ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் 24 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது ஆனந்தாக் கல்லூரி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆனந்தாக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர் அவிஸ்க மற்றும் ஜெயவீர. இணைப்பாட்டமாக 31 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் முதல் இலக்காக ஆட்டமிழந்தார் அவிஸ்க. அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே வரவீரவின் ஆட்டமும் நிறைவுக்கு வந்தது. அணித்தலைவர் பிரான்சிஸ்கோ டக்குடன் வெளியேறினார். தற்பொழுது ஆனந்தா 32–3. கக்கலவும் ஒற்றையிலக்கத்துடன் விடைபெற ஆனந்தவின் ஆட்டத்தில் தடுமாற்றம் பலமாக ஆரம்பமாகியது. பின்வரிசை வீரர்கள் பதின்ம ஓட்டங்களைத்தாண்டி பங்களிப்பு கொடுக்க முடிவில் ஆனந்தாக் கல்லூரி 8 இலக்குகள் இழப்புக்கு 137 ஓட்டங்கள். அதிகபட்சமாக அஞ்சுல 28 ஓட்டங்களும் ஜெயரத்ன 26 ஓட்டங்களும் அவிஸ்க 20 ஓட்டங்களும் குவித்தனர்.

138 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரிச்மன்ட் கல்லூரிக்கு ஓட்டங்கள் எதனையும் பெறாது ஏமாற்றினார் சமிகர. அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லக்சன். சிறிவர்தன மத்திய வரிசையில் நிலைத்து நின்றாலும் ஏனையவீரர்கள் ஒருவர்பின் ஒருவராக ஒற்றையிலக்கத்துடன் வெளியேற முடிவில் 113 ஓட்டங்களில் சுருண்டது ரிச்மன்ட். அதிகபட்சமாக சிறிவர்த்தன 36 ஓட்டங்களையும் மென்டிஸ் 21 ஓட்டங்களையும் லக்சன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆனந்தாக் கல்லூரி சார்பாக ஜெயரத்ன 3 இலக்குகளையும் அஞ்சுல, வரக்கொட, எரங்க மூவரும் தலா 2 இலக்குகளையும் ஜெயலத் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ம)

## இன்றைய மோதல்கள்

**நியூட்டன் வி.கழகத் தொடர்**
கரணவாய், ஒக். 12
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம–108)

**மைக்கல் வி.கழகத் தொடர்**
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.
இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் அணி மோதவுள்ளது. (ம–422)

**வானவில் வி.கழகத் தொடர்**
அராலி வானவில் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி திருமகள் அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடி காளிஅம்பாள் அணியை எதிர்த்து 5ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம–23)

## பற்றிக்ஸிற்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 12
இலங்கைபாடசாலைகளுக்குஇடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு ஓர் வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது.
நேற்று ஞாயிற்றுக்கிழமை பியகம மகிந்த ராஜபக்ச சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம்பாய்தல் போட்டியில் ஹென்றிசன் 1.87 மீற்றர் உயரத்துக்கு பாய்ந்து வெண்கலப் பதக்கத்தினைப் பெற்றுள்ளார். (ம–23)



## ஈஸ்வரன் வி.கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 12
தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புங்குடுதீவு ஈஸ்வரன் விளையாட்டுக்கழகம் மறைந்த புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் சதாசிவம் கணேஸ்வரன் ஞாபகார்த்தமாக நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.
காலை 9 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு சென்.சேவியர் அணியை எதிர்த்து புங்குடுதீவு காந்தி அணி மோதிக் கொண்டது. இதில் புங்குடுதீவு சென்.சேவியர் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
காலை 10 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு ஐங்கரன் அணியை எதிர்த்து புங்குடுதீவு நிலாஜோதி அணி மோதிக் கொண்டது. இதில் புங்குடுதீவு ஐங்கரன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
காலை 11 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு நசரேத் அணியை எதிர்த்து புங்குடுதீவு ஈஸ்வரன் அணி மோதிக் கொண்டது. இதில் புங்குடுதீவு நசரேத் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு சண்ஸ்ரார் அணியை எதிர்த்து நயினாதீவு அண்ணா அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் சமநிலை தவிர்ப்பு உதைகள் வரை ஆட்டம் நீடித்தது. இதில் நயினாதீவு அண்ணா அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
பிற்பகல் 1 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தம்பாட்டி காந்திஜி அணியை எதிர்த்து புங்குடுதீவு நண்பர்கள் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலை தவிர்ப்பு உதைகள் வரை நீடித்தது. இதில் புங்குடுதீவு நண்பர்கள் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து நாரந்தனை அண்ணா அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலை தவிர்ப்பு உதைகள் வரை நீடித்தது. சமநிலைத் தவிர்ப்பில் நாரந்தனை அண்ணா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

## அரச உத்தியோகத்தர்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடர் இன்று

வலி வடக்கு ஒக். 12
இலங்கை அரச உத்தியோகத்தர்களுக்கான நலன்புரிச் சங்கத்தினால் வருடாவருடம் நடத்தப்படும் வலைப் பந்தாட்டத் தொடர் இன்றும் நாளையும் கொழும்பு விளையாட்டு அமைச்சின் ரொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.
ஆண்கள், பெண்கள் மற்றும் கலப்பு அணிகள் என மூன்று பிரிவாக நடத்தப்படும் இந்தத் தொடர்களில் பங்குபற்றவுள்ள யாழ். மாவட்ட அணி நேற்று கொழும்பு புறப்பட்டுச் சென்றது. (ம–86)

## ஆதிசக்தி, வல்வை அரையிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 12
மைலோ கிண்ணத்துக்காக மூன்றாவது தடவையாக நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் மற்றும் வல்வை விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அரையிறுதியாட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.

**ஆதிசக்தி எதிர் ஒற்றுமை**
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் முதல்பாதியில் 2:1 என முன்னிலை வகித்த ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் இரண்டாம் பாதியிலும் தனது இருப்பைத் தக்கவைத்து 3:2 என்று வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

**வல்வை எதிர் விண்மீன்**
தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு காலிறுதியாட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ்வாட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின் 1:0 என்று வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது வல்வை விளையாட்டுக்கழகம். (ம–108)



யாழ். துரையப்பா விளையாட்டரங்கத்தை தடகளப் போட்டிகளுக்கு ஏற்ப தேசிய தரத்தில் நிர்மாணிக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. குறித்த கட்டுமானங்கள் தொடர்பான ஒரு பதிவு. (135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்கள் - விற்பனையாகின்றன**

1) ஆசிரியர் போட்டிப்பரீட்சை வழிகாட்டி.
2) அதிபர் சேவை தரம் - III வழிகாட்டி.
3) புகையிரத நிலைய அதிபர் வழிகாட்டி.
4) பதிவாளர் சேவை - வழிகாட்டி.
5) அஞ்சல் அலுவலர் - வழிகாட்டி.
6) முகாமைத்துவ உதவியாளர் வழிகாட்டி.
7) பொது அறிவு.
8) பொது அறிவும், நுண்ணறிவும்.
9) பொது அறிவும், உளச்சார்பும்.
10) பொது நிதி முகாமைத்துவ நடைமுறைகள்
11) ஸ்தாபன நடைமுறைகள்
12) நிதி நடைமுறைகள்
13) முகாமைத்துவ நடைமுறைகள்
14) சமகால அலை வெளியீடுகள்

**பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**

**விற்பனைக்கு**

ஜேர்மன் செப்பேட் (அல்சேசியன்) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 075 511 3457

**வேலைவாய்ப்புப் படிவங்கள் விற்பனையாகின்றன**

1) பட்டதாரி ஆசிரியர்
2) முகாமைத்துவ உதவியாளர்
3) விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர்
4) தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவை
5) சிரேஷ்ட ஆராட்சி அலுவலர்
6) தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்
7) தேசிய நீர் உயிரின வளர்ப்பு விஸ்தரிப்பு அலுவலர்.
8) தேசிய நீர் உயிரின வளர்ப்பு விஸ்தரிப்பு உதவியாளர்.
9) சுற்றுலா விடுதிக்காப்பாளர்

**பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம் யாழ்ப்பாணம்.**
T.P 021 222 6693

**Jaffna Central College Education Care Trust**
**யாழ். மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்**

**தரம் 6 முதல் A/L வரை தமது கல்வியைத் தொடரும் 20 மாணவர்களுக்கு அனுசரணை**

**யாழ் மத்திய கல்லூரி ஆரம்பித்து 200 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு இந்தத் திட்டம் எம்மால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.**

* 2016 ஆம் கல்வி ஆண்டுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள்
* நிலையத்தால் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பறைகள் வழங்கப்படும்.
* புலமைப்பரிசில் வெகுமதிகள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் மாதாந்தம் தலா 1200 ரூபா.
* விண்ணப்பதாரிகள் 170 புள்ளிகளுக்கு மேல் புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி : 30.11.2015
தொடர்பு : S.Sukirathan - 021 2222184
விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்
யாழ்.மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.


# போராடி வீழ்ந்தது இந்தியா



இந்திய – தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் 5 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ஆரம்ப வீரர்களாக டிகொக் மற்றும் அம்லா. அஸ்வினின் முதல் பந்துப்பரிமாற்றத்தில் வீழ்ந்தார் டிகொக். அம்லாவுடன் பிளாஸிஸ் இணைந்து நிதானிக்க தென்னாபிரிக்காவின் அடித்தளம் வலுவானது. மிர்சாவிடம் போல்ட்டானார் அம்லா. மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் பிளாஸிஸ். வில்லியர்ஸ் பிளாஸிஸ் இணை இந்தியாவை மிரட்டி எடுத்தது. 62 ஓட்டங்களுடன் பிளாஸிஸ் ஆட்டமிழக்க நிதானத்தில் இருந்து அதிரடிக்கு மாறினார் வில்லியர்ஸ். வில்லியர்ஸின் உண்மை முகம் அரங்கேறியது. பெக்கார்டினும் வில்லியர்ஸிற்கு ஈடுகொடுத்து மிரட்டினார். 300 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. தென்னாபிரிக்காவினது இன்னிங்ஸின் இறுதிப்பந்தை 98 ஓட்டங்களுடன் எதிர்கொண்டார் வில்லியர்ஸ். சிக்சருக்கு அனுப்பி சதம் கடக்க முடிவில் தென்னாபிரிக்கா 303–5.

பதிலுக்குதுடுப்பெடுத்தாடிய இந்தியாவுக்கு தவான், ரோகித் இணை பலமான நம்பிக்கைதரும்படியான ஆரம்பம் அமைத்துக் கொடுத்தது. ஓட்டங்களின் எண்ணிக்கை 43ஆக இருந்த பொழுது ஆட்டமிழந்தார் தவான். இலக்கை எட்டக்கூடிய சராசரியில் ரோகித் சென்றுகொண்டிருந்தாலும் ரகானே சற்று அதிகப்படியான பந்துகளை வீணடிக்கவே செய்தார். ரகானே அரைச்சதம் கடக்க மறுமுனையில் 98 பந்துகளில் சதம் கடந்தார் ரோகித். 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த ரகானேயின் இடத்தை நிரப்பிய கோக்லி வெறும் 11 ஓட்டங்களிலேயே பவிலியன் திரும்பி ஏமாற்றினார். 150 ஓட்டங்களுடன் மிகுதியான பங்களிப்பை வழங்கி தாகிரிடம் வீழ்ந்தார் ரோகித். டோனி நிலைத்து நின்றாலும் ரெய்னா வெறும் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதிவரை திரில் நிலைமையில் ஆட்டம் சென்று கொண்டிருந்தது. இறுதிப்பந்தில் 7 ஓட்டங்கள் பெறவேண்டும் என்ற நிலைமை. முடிவில் 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இந்தியா. (ம)


**முதலாம் ஆண்டு நினைவுநாள்**

**செல்வி கல்பனா சண்முகரத்தினம்**



நேற்றுவரை எம்மோடு இருந்த - எம்
அன்புச் செல்வ மகளே !
காற்றோடு நீ கலந்து
ஆண்டொன்றும் ஆனதம்மா
ஆற முடியவில்லை உன் துயரம்

சாதனைகள் நீ படைப்பாயென்று நாம்
இருக்க
மருத்துவமே கண்டறியா
மாறா நோய் வந்து - நீ
விண்ணுலகம் சென்ற மாயம் என்ன!

ஆறுதல் சொல்ல ஆயிரம் உறவுகள்
இருந்தும்
ஆறமுடியவில்லை உன் பிரிவை
நானிலத்தில் நிற்கதியாய் நிற்கும் நாம்
நாளும் பொழுதும் உன் வரவிற்காய்
ஏங்கி நிற்கின்றோம்.

**என்றும் உன் நினைவுகளுடன் குடும்பத்தினர்.**
**சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**



**மரண அறிவித்தல்**

**தேவசகாயம் தாசீஸ்**

(முன்னாள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்)



உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் தாசீஸ் (11.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயம் திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், சூசைப்பிள்ளை மேரிமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி க்மலாவின் (கலா) அன்புக் கணவரும், செறினா, றொபினா, ஜீவனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவமேனனின் (கணக்காளர், NEFAD) பாசமிகு மாமனும், பிரான்ஸிஸ் கம்மா (கனடா), றீற்றம்மா (கனடா), பற்றிமா, மேரிஜோசப்பின், காலஞ்சென்ற தேவதாஸ் ஆகி யோரின் அன்புச் சகோதரனும், மேரி சறோஜினி (கிளி), மேரி வசந்தா (டென்மார்க்), மேரி கியூரி (வதனி - ஜேர்மனி), மேரிகிறிஸ்ரீன் (லல்லி - ஜேர்மனி), யூட்ஸ் உதியராஜ் (பிரான்ஸ்), எட்வின் இருதயராஜா (முகாமையாளர், ஹேலீஸ் அக்ரிக் கல்சர் சென்ரர்), பஸ்ரியாம்பிள்ளை, சிமியோன் (பாபு), மனுவல்ராஜா, கீதபொன் கலம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக (13.10.2015) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு காக்கைதீவு அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறிவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உயரப்புலம் ஆனைக்கோட்டை | குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.